SRI C. RAJAM RAMASWAMY :—" May I know from the Hon. Minister for Finance whether it will not be reasonable to hand over the surplus collections to the Communist Party for their party purposes? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, this is a purely cultural delegation. It is visiting this country on the invitation extended to them by the Government of India. The Government of India have taken certain decisions in regard to this and we are simply following it. That is all."

SRI P. RAMAMURTHI :—" Will the Hon. Minister for Finance tell us, if the Communist Party had at any time approached the Government of Madras with any such request? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I know they don't approach this Government for finance, Sir. They have their own methods of getting finance."

SRI P. RAMAMURTHI :—" Sir, the Hon. Minister for Finance is a responsible person. He is a Member of this Government and he is also in charge of the Police Department, and he is making this statement. May I ask him as a responsible Minister in charge of the Police Department whether he can place any material before this House to show that the Communist Party of India is being financed by anybody outside this country? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" But for the fact that this is irrelevant to the question, certainly I would have answered the question of the hon. Leader of the Opposition. (Interruption.) I only said that the Communist Party have their own methods of raising funds. I did not say that they were getting funds from outside the country. If they have a guilty conscience, I cannot help it."

SRI P. RAMAMURTHI :—" Sir, I object to the way in which the Hon. Minister answered the supplementary question. I would not have asked my question if he had said that the Communist Party had its own way of raising funds. But when a specific question was asked regarding collections made in connexion with a foreign delegation's visit the Hon. Minister answered that the Communist Party have their own methods for getting finance. There is a difference between the expressions, ' raising finance ' and ' they have their own methods for getting funds '. It is an insinuation to say that the Communist party have their own methods for getting finance. Can the Hon. Minister say he did not make that insinuation, Sir? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Apart from insinuation, Sir, I have given a straight answer. Whatever fits the Communist Party they may take it."

21st Decmeber 1954]

Black flag demonstration against Chief Minister of Travancore-Cochin State at Dindigul.

* 482 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was a black flag demonstration against the Chief Minister of Travancore-Cochin State on 16th August 1954, at Dindigul by Tamil Arasu Kazhagam volunteers;

(*b*) whether the Government had taken any steps to prevent the demonstration; and

(*c*) if so, what they were?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Yes, Sir.

" (*b*) & (*c*) Intimation regarding the proposed visit of the Chief Minister of Travancore-Cochin State to Dindigul on 16th August 1954 was received only late on the previous day. Immediate instructions were issued to the District authorities to make the necessary security arrangements. In spite of the extremely short notice, the Police not only made all arrangements, but the District Superintendent of Police, Madurai North, personally escorted the Travancore-Cochin Chief Minister and Public Works Department Minister to Gandhigram. The black flag demonstration was staged by Tamil Arasu Kazhagam members while they were proceeding to the Conference pandal and since it was peaceful, no action was taken against the demonstrators. I may, however, add that earlier in the day when there was a scuffle between rival groups of Tamil Arasu Kazhagam and Praja-Socialist Party Members, Police did intervene, arrested the trouble-makers and had them successfully prosecuted."

SRI V. R. NAGARAJAN :—" Sir, do the Government think that the black flag demonstration staged by Tamil Arasu Kazhagam volunteers has done more injury to the Hon. Chief Minister of Travancore-Cochin State than the injury he has done to the Tamilians and Tamil interests by the policy he has adopted in his State? " 10 50 a.m.

MR. SPEAKER :—" How can the Hon. Minister know what had been in the mind of the Tamil Arasu Kazhagam volunteers? "

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, திருவாங்கூர் கொச்சி ராஜ்ய முதல் மந்திரி திண்டுக்கல்லுக்கு வரும் விஷயம் முதல் நாள்தான் தெரியும் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். அவர் ஒரு மகா நாட்டுக்கு வந்திருக்கிறார். அவர் வருவதுபற்றி விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மந்திரி அவர்களுக்கு அது எல்லாம் தெரிந்திருக்கும். முதல் நாள் தான் தெரிந்தது என்பதை நம்பமுடியவில்லை. தமிழ் மக்களுக்குக் கோபம் உண்டாகக்கூடிய பல செயல்களையும் திருவாங்கூர், கொச்சி ராஜ்ய முதல் மந்திரி செய்துவந்து கொண்டிருக்கிறார் என்பதும் சர்க்காருக்குத் தெரியும். ஆகவே அவர் வருவதன் காரணமாக ஒரு குழப்பம் ஏற்படலாமென்றும் மந்திரிக்குத் தெரிந்திருக்கும். இந்தச் சமயத்தில் வரவேண்டாமென்று இந்தச் சர்க்கார் அவருக்கு யோசனை சொல்லி இந்தச் சம்பவத்தை நடைபெறாமல் தடுத்திருக்க முடியாதா என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்கிறேன்."

[21st December 1954

THE HON. SRI C. SUBRAMANIAM :—"All sorts of publicity are being given with reference to great personalities. As far as Chief Ministers and other Ministers belonging to other States are concerned, they are expected to inform the respective State Governments of their proposed visits to their States. In this case we received the information only on the previous day of his visit. So we could not take previous notice of the publicity given by a certain party for a certain conference. Apart from that, I do not think that we can prohibit other people from coming to our State. If our advice had been sought, certainly we would have given it but we do not give advice gratuitously."

[ª * * * *]

SRI M. NARAYANA KURUP :—"Are the Government satisfied that within the short notice, the authorities did all they could to prevent the occurrence?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"That is what I have already stated."

SRI P. RAMAMURTHI :—"The Hon. Minister stated that if the advice had been sought it would have been given. Am I to take it that the advice was not given on their own because of the fear that that advice might not be accepted?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"The question of fear did not arise at all because we did not know that he was coming over here till the previous day of his visit."

SRI K. VINAYAKAM :—"May I know whether it is not an accepted political principle to stage peaceful black flag demonstration against a Minister or a Chief Minister when he visits a particular State?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—"As a matter of fact we permitted the black flag demonstration even against the Prime Minister of India. Provided it is peaceful we do not interfere with it."

SRI S. N. SOMAYAJULU :—"திருநெல்வேலிக்கு வருவதாக இருந்த திருவாங்கூர், கொச்சி ராஜ்ய பிரதமர் பட்டம் தாணுப் பிள்ளை, பின்னர் வராமல் போய்விட்டார்கள் என்பதை வைத்துக்கொண்டே போலீஸார் நடவடிக்கை எடுத்திருக்கலாமல்லவா?"

MR. SPEAKER :—"நீங்கள் திண்டுக்கல்லிலிருந்து திருநெல்வேலிக்குப் போய்விட்டீர்களே. (சிரிப்பு.) நான் அடுத்த கேள்விக்குப் போகிறேன்."

Gratuity facilities to workers in the Transport department.

* 484 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether provident fund and gratuity facilities are given to City Transport Workers?

ª Portions marked * * * expunged.

21st December 1954]

THE HON. SRI B. PARAMESWARAN :—" Liberalised retiring and invalid gratuity facilities to the workers of the Transport Department and liberalised compassionate gratuity facilities to the families of deceased workers are given. As most of the workers may not be able to contribute to a Provident Fund System, the Government have decided that it is not necessary to introduce such a system for the State Transport Workers."

SRI N. K. PALANISAMY :—" க்ராசூடியானது வேலையிலிருந்து நீக்கப்படும்போது அல்லது அவர் இறந்த பிறகு தான் கொடுக்கப்படுகிறது. அதனால்தான் சாதாரண சிறு தொழிற்சாலைகளிலும்கூட அப்போதைக்கப்போது போனஸ் கொடுக்கிறார்கள். தங்களுக்குக் கிடைக்கும் அதிகப்படியான லாபத்தில் ஒரு பகுதியையாவது தொழிலாளிகளுக்குப் போனஸாகக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have already explained the position."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு தொழிலாளி ரெகுலராக நியமிக்கப்பட்டுவிட்டால் அவனுக்கு க்ராசூடி ப்ராவிடெண்ட் பண்டு போன்ற சலுகைகள் எல்லாம் கொடுக்கவேண்டி வருமே என்பதற்காக அந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் சர்க்கார் தொழிற்சாலைகளில் பலரை தினசரிச் சம்பளத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" It is not for that particular purpose that they are kept on daily wages. It is because the Transport Department is a temporary department and we have got to be careful in this matter."

SRI C. RAJAM RAMASWAMY :—" May I know the amount of contribution to the provident fund and the terms of gratuity?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" Notice, Sir."

SRI S. C. C. ANTHONY PILLAI :—" When Sri Rajagopalachari was the Chief Minister he addressed a meeting of the Transport workers and promised them the most liberal scheme of gratuity, viz., two months' wages for every year of service. Has that promise been implemented by the Government and has that gratuity scheme been published?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" One month's pay for every completed year of service up to ten years and two months' pay for every completed year of service in excess of ten years have been granted."

SRI M. PALANIYANDI :—" போக்குவரத்துத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகளை அரசாங்கம் இன்னமும் தினக் கூலியிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை உடனடியாக மாற்றி அவர்களை ரெகுலராக எடுத்துக்கொள்ள சர்க்கார் முன் வருவார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" That question does not arise from this particular question."

[21st December 1954

SRI K. VINAYAKAM :—" Whereas gratuity is paid only after the incumbent has retired from service, in order to avoid payment of such gratuity to workers, the Government are engaging workers only on a temporary basis and are not making them permanent. In that category there are more than 500 bus drivers and conductors in service. Is this a fact? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have already stated that it is not on that basis that these people are kept temporarily."

SRI P. RAMAMURTHI :—" Does the Hon. Minister know that workers who are working on daily wages are there for the last six years or more on a temporary basis? Has he got any idea as to how long they will be kept like that? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I know that they are kept on daily wages but that question is being considered."

11 a.m. **SRI A. SAMBASIVAM** :—" கனம் தலைவர் அவர்களே, போக்குவரத்து ஒரு முக்கியமான தொழிலாக இருப்பதால் இதில் சேர்ந்துள்ள தொழிலாளிகள் எல்லாம் கஷ்டப்படாமலிருப்பது முக்கியமாகும். தனிப்பட்ட முதலாளிகளிடத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள்."

MR. SPEAKER :—" தனியாக வேறு கேள்வி போடுங்கள். உங்கள் கேள்வி இதிலே வராது."

SRI A. SAMBASIVAM :—" போக்குவரத்து சாதனம் ஒரு முக்கியமான தொழிலாக இருப்பதால் இதில் சேர்ந்திருக்கும் பெரும்பாலான தொழிலாளிகள் நிரந்தரமான வேலையின்றி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நிரந்தரமாக அரசாங்கத்தில் அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ? "

MR. SPEAKER :—" தனிக் கேள்வி போடுங்கள்."

SRI S. RAMALINGAM :—" இந்த டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சட்ட பூர்வமாக தொடர்ந்தார்ப்போல் வேலை செய்தால் அவர்களுக்கு நிரந்தரமாக வேலைக்கொடுப்பார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I do not know whether the rules at present in vogue will permit it. Anyhow, I will consider the suggestion made by the hon. Member."

SRI M. PALANIYANDI :—" இந்த போக்குவரத்துத் தொழிலாளர்கள் சங்கம் 498 தொழிலாளர்களைக் கொண்டதாக இருக்கிறது. அவர்களுக்கென்று தனிச் சட்டம் இன்னும் தயாரிக்கப்படாமல் இருக்கிறது. பல ஆண்டுகளாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று சங்கம் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது நல்லதொரு சட்டத்தைச் சீக்கிரம் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the Transport Commissioner was asked to submit for the approval of the Government detailed draft rules to regulate payment of gratuity to the State Transport Workers on the analogy of the

21st December 1954]

Madras Retiring and Invalid Gratuities (Non-pensionable Establishment) Rules, 1941, and Compassionate Gratuities Rules. He has since submitted draft rules and these are under the consideration of the Government."

Mr. SPEAKER :—" I will now take five more minutes and finish the rest of the questions."

Appointment of Collectors.

* 485 *Q.*—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a list of officers eligible for promotion as Collectors was submitted by the Madras State to the Recruitment Board of the Government of India in 1949;

(*b*) whether this list was approved by the Government of India and promotions were made for two years as per this list;

(*c*) whether this list was subsequently given up and promotions made outside this list; and

(*d*) if so, the reasons therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" (*a*) This Government did not submit any list of names of officers for promotion as Collectors to the Special Recuitment Board. Appointments to posts of District Collectors are made by promotion from among the officers of the Indian Administrative Service cadre arranged in the order of seniority. Normally, State Civil Service officers are promoted from the panel of Deputy Collectors considered suitable for appointment to posts of Collectors Grade or of equivalent rank. The panel is prepared by the Government and is based on the periodical confidential reports of Collectors and the personal knowledge of the Members of the Board of Revenue.

" (*b*) *to* (*d*) Do not arise."

Vaigai Reservoir Project.

* 487 *Q.*—Sri S. THINAKARASAMI THEVAR (on behalf of Sri K. Mookkiah Thevar) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the stage at which the Vaigai Scheme stands;

(*b*) whether the anicut work has been started;

(*c*) if so, the total number of workers employed in the work and the total number of workers employed from the affected villages of the anicut;

(*d*) whether any representation has been received by the Government from the affected villages of the anicut; and

(*e*) if so, the action taken thereon?

[21st December 1954

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (*a*) & (*b*) It is presumed that the hon. Member refers to the Vaigai Reservoir Project. Construction of the dam (not anicut) has started and preliminary works such as lockspitting the area of the dam and reservoir, demarcating the areas for camps and buildings, formation of approach roads and exploration of the dam foundations are being done. Construction equipment and other stores are being acquired.

" (*c*) About 300 to 400
About 150 to 280 of them.

" (*d*) & (*e*) No representation has been received by the Government. But representations have been received by the local officers and these have been sympathetically considered and the requests are being complied with as far as possible."

Teaching of Hindi in schools in the City.

* 488 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of schools in the City of Madras teaching Hindi as second language and as optional language?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Hindi is taught as a third language (optional) in 62 Secondary schools in the City of Madras, and it is not taught as second language in any school in the State. It is taught under Part I of the First language in six schools."

SRI K. VINAYAKAM :—" Will the Hon. the Minister for Education be pleased to state the policy of this Government with regard to teaching of Hindi language in schools and colleges? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The policy of the Government is to introduce it as quickly as possible, but at the same time not to make it compulsory."

Restoration of Mathikettan eri in Andimadam firka, Udayarpalayam taluk.

* 490 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) when the estimate for the restoration of Pudukkudi alias Mathikettan eri in Andimadam firka, Udayarpalayam taluk, was prepared under the Food Production Tank Improvement Scheme; and

(*b*) when the work is likely to be taken up for execution?

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (*a*) The estimate for the irrigation work has been prepared in September 1954 under the Special Minor Irrigation Programme.

" (*b*) The matter is under consideration."

21st December 1954]

SRI S. JAYARAMA REDDIAR :—“ இந்த மதிகெட்டான் என்ற பெயரை மாற்றி அந்த ஏரிக்கு வேறு பெயர் வைக்க அரசாங்கம் முன் வருமா ? ”

MR. SPEAKER :—“ தனிக் கேள்வி போடுங்கள்.”

Lathi charge on Taj Mahal Beedi Workers at Washermanpet, Madras.

* 491 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was any lathi charge by police on Taj Mahal Beedi Workers at Washermanpet, Madras, on 13th November 1954; and

(*b*) how many workers were

(i) injured;

(ii) arrested by the police on that day; and

(iii) either admitted or treated as out-patients in the hospitals as a result of lathi charge?

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ (*a*) The answer is in the affirmative.

“ (*b*) It is reported that forty workers were injured. Seven of them were admitted in the hospital as in-patients while the rest were treated as out-patients. The number of persons arrested by the police so far is 40.”

* 492 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any enquiry was conducted into the lathi charge of the Police on the beedi workers employed in Taj Mahal Beedi Factory, Tiruvottiyur, on 13th November 1954; and

(*b*) if so, what the findings of the enquiry were and what action was taken on the finding?

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ (*a*) The answer is in the negative.

“ (*b*) Does not arise.”

SRI K. P. GOPALAN :—“ May I know whether it is a fact that the police prevented the workers from going near the factory, whether the police adopted a provocative attitude towards the workers and whether the lathi charge on the workers was ordered to help the owner of the factory? ”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“ No Sir. The Police were there to prevent any breach of the peace. Workers were allowed to picket peacefully. But when they resorted to violence, a lathi charge was ordered.”

[21st December 1954

SRI P. RAMAMURTHI :—" The Hon. the Finance Minister stated that when the workers resorted to violence, a lathi charge was ordered. May I know the names of the so-called loyal workers who were injured as a result of the ' violence ' adopted by the strikers? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I want notice to give the names."

SRI M. KALYANASUNDARAM:—" கனம் சபைத் தலைவர் அவர்களே, இதே பிரச்னையைப்பற்றி சம்பவம் நடந்த மறுதினமே ஒத்திவைப்புப் பிரேரேணை சபைக்குக் கொண்டுவரப்பட்டது ஞாபகம் இருக்கும். இதைப்பற்றி விசாரணை நடத்துவதுபற்றி அரசாங்கம் ஏற்பாடு செய்ததா ? அப்படியானால் விசாரணையின் முடிவு என்ன ? இல்லாவிட்டால் விசாரணை என் நடத்தப்பட வில்லை ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" After going into the facts of the case, we thought that there was no need for an enquiry."

SRI P. **JEEVANANDAM**:—" ஏற்கெனவே இதைப்பற்றி அவசரப் பிரேரேணை கொண்டுவந்தபோது இதே சபையில் முதலாளியின் கையாட்களான ரவுடிகள் இந்தத் தொழிலாளர்களைத்தாக்கி கலகத்திற்கு இழுத்திருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் சமாதானத்திற்கு பங்கம் விளையக்கூடாதென்று லேசான தடியடிப் பிரயோகம் செய்ததாகச் சொல்லப் பட்டது. போலீஸாரின் தடியடிப் பிரயோகத்தால் தொழிலாளிகளுக்குத்தான் படுகாயம் விளைந்திருக்கிறதே ஒழிய முதலாளியின் கையாட்கள் ஒருவர் மீதாவது ஒரு அடியாவது விழுந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The allegation made by the hon. Member is not correct. From the information I have, violence was resorted to by the picketeers and when they found that some of the workers were entering the beedi factory, the Police had to disperse the crowd."

SRI P. RAMAMURTHI :—" A solemn assurance was given on the floor of this House that an enquiry would be made by an independent officer. Now, the Hon. Minister comes and says that he sees no need for an enquiry after going into the facts of the case. May I take it that the facts of the case were supplied by the same Police officers against whom allegations were made? I should like to know what happened to the solemn assurance given by the Hon. Minister on the floor of this House? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not know to what solemn assurance the hon. Leader of the Opposition is referring. I do not remember to have given an assurance. We cannot order an enquiry into every incident."

SRI P. RAMAMURTHI :—" If the Government cannot order an enquiry into every incident, why should the Hon. Minister promise on the floor of the House that an enquiry would be made in a particular case which had been referred to now? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I do not remember to have given any assurance. I shall certainly look into the matter."

21st December 1954]

Assignment of house-sites to Harijans at 15 cents per family in Malabar.

* 493 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to State whether the Government have appointed a Special Officer to take urgent steps for giving 15 cents of lands per family to Harijans in Malabar for house-sites and if not, whether they propose to do so?

THE HON. SRI B. PARAMESWARAN :—" The matter is under consideration and orders on the proposals will be issued soon."

Appointment of District Panchayat Officers.

* 494 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) how many Deputy Panchayat Officers were appointed as District Panchayat Officers, Grade II, in 1954; and

(*b*) in how many cases of appointments referred to in clause (*a*), seniority was overlooked and juniors were appointed?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) Twenty-one Deputy Panchayat Officers (including those on other duty) were appointed on promotion as District Panchayat Officers, II Grade in 1954.

" (*b*) Nineteen."

SRI M. NARAYANA KURUP :—" May I know whether the Government maintain any seniority list and how many men were employed overlooking claims of senority? "

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" Yes, Government maintain a seniority list. Only in 19 cases, seniority was overlooked because the ability and skill of those concerned in these cases were found to be not satisfactory."

Single-teacher schools in Tiruchirappalli district.

* 495 *Q.*—SRI K. ARANGANATHAN (on behalf of Sri V. Balakrishnan) : Will the Hon. the Minister for Finance be pleased to state— 11-10 a.m.

(*a*) the number of single-teacher schools newly opened in Tiruchirappalli district; and

(*b*) how many of them are in Pudukkottai Division?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Number of schools allotted to the district—312.

Number of schools actually opened up to 20th November 1954—125.

" (*b*) Number of schools allotted to the Pudukkottai Division—138.

Number of schools opened up to 20th November 1954—40."

[21st December 1954

Qualifications for teachers appointed to single-teacher schools.

* 496 *Q.*—SRI K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the instructions issued to district boards regarding qualifications required for teachers appointed in single-teacher schools that have been opened recently?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The District Boards have been informed that S.S.L.C. holders, Matriculates, under-graduates, graduates and secondary grade trained teachers are eligible for appointment as teachers in the schools opened under the scheme for providing employment to the educated unemployed."

Bus route from Parrys to Tondiarpet.

*498 *Q.*—SRI P. JEEVANANDAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government received a mass mahazar in the third week of November 1954, regarding the running of a Government bus from Parrys to Tondiarpet via Prabhat Talkies, Stanley Hospital and Rainy Hospital; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) Yes.

" (*b*) The matter is being examined by the Transport Department."

Non-payment of teaching grant to certain teachers in Ellarinhi school, Irrikkoor firka.

* 499 *Q.*—SRI K. P. GOPALAN (on behalf of Sri T. C. Narayanan Nambiar) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the teaching grant due to six teachers in Ellarinhi school, Irrikkoor firka, Taliparamba range, was withheld as per Memorandum L. Dis. No. 320-D-2/51, dated 10th February 1952, of the District Educational Officer, North Malabar, Tellicherry;

(*b*) whether they were paid afterwards on their representations; and

(*c*) if not, why not?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Yes, Sir.

" (*b*) & (*c*) As the claims made for the arrears were belated they could not be entertained under the rules."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, questions 501, 502, 503 and 504 may all be taken together."

MR. SPEAKER :—" I have no objection."

21st December 1954]

Death of one Andi in police lock-up.

* 501 *Q.*—Sri K. P. GOPALAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that one Andi who was arrested by police on 21st October 1954, was found dead inside the kasba police station lock-up, Palghat, Malabar, on 22nd October 1954;

(*b*) if so, whether the Government have made any enquiries regarding this incident; and

(*c*) the result of such an enquiry?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" (*a*) Yes, Sir.

" (*b*) & (*c*) A statement [a] is placed on the table of the House."

* 502 *Q.*—Sri P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether one Andi of Kodunthirappulli village, was arrested on 21st October 1954, and was confined in the Palghat kasba police lock-up;

(*b*) whether he was found dead on the morning next day in the lock-up;

(*c*) whether his body was sent for post-mortem examination;

(*d*) if so, what the post-mortem report revealed regarding the cause of the death of the prisoner;

(*e*) when and by whom the death of the prisoner was first found out and publicly announced; and

(*f*) whether any departmental enquiry was made regarding the death of the prisoner in the lock-up and if so, with what result?

The Hon. Sri C. SUBRAMANIAM :—" (*a*) *to* (*f*) The attention of the hon. Member is invited to the answer given to starred question No. 501."

* 503 *Q.*—Sri K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that one Andi of Kodunthirappulli amsam in Palghat, Malabar, died in police lock-up on or about 21st October 1954, the day on which he was arrested;

(*b*) the reason for his arrest;

(*c*) whether the Government have made any enquiry regarding this and if so, the result thereof;

(*d*) whether the Government received any petition from the wife of the deceased on the 23rd October 1954; and

(*e*) if so, the contents thereof, and the action taken thereon?

[a] **Printed as Appendix VII on page 722 infra.**

[21st December 1954

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) to (*c*) The attention of the hon. Member is invited to the answer given to starred question No. 501.

" (*d*) No, Sir.

" (*e*) Does not arise."

* 504 *Q.*—SRI T. C. NARAYANAN NAMBIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that in November 1954, one Andi was found dead in police lock-up in Palghat, South Malabar, the very next day after his arrest; and

(*b*) if so, the reasons for his death?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer given to starred question No. 501."

SRI K. P. GOPALAN :—" Sir, in the statement placed on the table of the House, it is seen that the Executive First-class Magistrate also conducted an enquiry and his enquiry disclosed certain irregularities on the part of the Sub-Inspector and some of the Police Constables attached to the Station. May I know from the Hon. Minister what the irregularities mentioned in the report are? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the irregularities pointed out are in respect of the disposal of the dead body after post-mortem."

SRI K. C. GOPALAN UNNI :—" Sir, my question (question 503) has not been answered."

MR. SPEAKER :—" I think the Hon. Minister has answered that also."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The statement is with regard to the whole case. If the hon. Member goes through the statement he will find the answer to his question."

Schemes for the removal of untouchability.

* 507 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) The schemes introduced by Government for the removal of untouchability in the State during the year 1953–54;

(*b*) the names of social and political organizations which submitted to Government the schemes and programmes for the removal of untouchability, the details of such schemes and programmes, and the programmes forwarded by this State Government to the Central Government in 1953–54 seeking their subsidy for the purpose; and

21st December 1954]

(c) the amount of subsidy granted by the Central Government for the purpose and the actual amount spent by the State Government for the purpose during 1953–54?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (a) & (b) The following individuals and organisations proposed schemes for the removal of untouchability :—

(1) The Tamil Nad Scheduled Castes Federation.

(2) The Tamil Nad Harijan Sevak Sangh.

(3) The Hindu Dharma Sangh.

(4) Sri V. A. Giri.

Copies of the schemes proposed by them and a copy[a] of the scheme as finally approved by the Government and forwarded to the Government of India are placed on the table of the House.

" (c) Actual amount spent by the State Government was Rs. 1,88,075. The amount of subsidy granted by the Central Government was Rs. 15,000."

* 508 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) the amount of subsidy received from the Central Government towards the removal of untouchability in the Madras State for each of the years 1953–54 and 1954–55; and

(b) why the scheme for the removal of untouchability in the current year has not been started by the Government?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (a) 1953–54—Rs. 15,000.

1954–55—Rs. 38,000.

" (b) A two-year plan for 1954–55 and 1955–56 for the removal of untouchability was forwarded to the Government of India. The Government of India have not approved the entire scheme and sanctioned the full grant claimed by this Government. The matter is being taken up with the Government of India."

SRI A. RATNAM :—" ஸார், இந்த ஆண்டு சுமார் இரண்டு லட்சம் ரூபாய் ப்ளாட்பாரம் கட்டுவதற்கும் தீண்டாமையை ஒழிப்பதற்கும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரியங்களால் தீண்டாமை அகலவில்லை. இந்தப் ப்ளாட்பாரம் கட்டும் வகையில் ஹரிஜனங்கள் எந்த வகையிலும் நன்மை அடையவில்லை. அதற்காக அடுத்து வரும் வருஷத்தில் பணத்தை எந்த விதத்தில் செலவழிக்கவேணடும், எவ்வளவு பணம் 1955–56-க்கு வேண்டும், எந்த ஸ்தாபனம் மூலமாக அதைச் செலவழிக்கவேண்டும், எந்த திட்டங்களை வகுக்கவேண்டும் என்கிற ப்ரச்னைகளை ஆராய M.L.A.-க்கள் கொண்ட ஒரு கமிட்டியை அமைக்க சர்க்கார் அவர்கள் யோசிப்பார்களா ?"

[a] Printed as Appendix VIII on pages 722–734 infra.

[21st December 1954

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I have answered this question several times on the floor of this House and have furnished all the information wanted by the hon. Member in the paper placed on the table of the House."

SRI V. S. SIVAPRAKASAM :—" Sir, we have got on the table of the House a statement showing the scheme for the removal of untouchability by certain members. May I know whether a reference was made by the Government to these members inviting their suggestions and if so why was the invitation restricted to these persons alone. May I also know whether these schemes have finally been approved by the Government and placed before the State Welfare Committee? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, some organizations and individuals suggested certain methods for removing untouchability. These suggestions were gone into carefully and examined by the Government. In addition to that the Government have been advised by the State Harijan Welfare Committee with regard to these matters. But with regard to the scheme that is referred to by the hon. Member, I have already stated that a two-year scheme is pending before the Government of India for their approval. As soon as it is approved, this Government will try to implement that scheme."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—GOVERNMENT BILL.

THE MADRAS DRAMATIC PERFORMANCES BILL, 1954 (L.A. BILL NO. 37 OF 1954), AS AMENDED BY THE SELECT COMMITTEE.

MR. SPEAKER :—" Questions over. The next item is the Hon. Finance Minister's reply."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, with your permission and also with the permission of the House, I wish to make a departure from the practice I have been adopting in respect of the language. I feel, Sir, that I will be able to express myself more effectively if I adopted Tamil to-day in view of the subject-matter concerned. (Cheers from all sides of the House.)

11-15 உ.ம. " கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் நடந்த விவாதத்தை மிகவும் கூர்ந்து கவனித்து நான் கேட்டிருக்கிறேன். இதிலே எழுப்பப்பட்ட பல பிரச்னைகளையும் கேட்ட பிற்பாடு இந்த மசோதாவிற்கு இருக்கிற எதிர்ப்பு அதிலுள்ள ஷரத்துகளால் ஏற்பட்ட எதிர்ப்பு அல்ல. கொள்கை அடிப்ப டையில் இருக்கக்கூடிய வித்தியாசத்தை வைத்து அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய அதிருப்திகளைத்தான் நான் காண்கிறேன்.

" இன்றைக்கு இரு முனைகளிலிருந்து இந்த மசோதா எதிர்க்கப் படுகிறது. ஒரு பக்கம் கம்யூனிஸ்ட் கட்சியாரின் எதிர்ப்பு. அவர்கள் அவர் களுடைய அடிப்படையான கொள்கையை வைத்துக்கொண்டு, அந்தக்

21st December 1954] [Sri C. Subramaniam]

கொள்கையை மக்களிடத்திலே பரப்புவதிலும், அந்தக் கொள்கையை மக்களிடத்திலே பிரசாரம் செய்வதிலும் இந்த மசோதா ஒரு சமயம் குறுக்கே நிற்குமோ என்ற பயத்தால் எதிர்க்கிருர்கள்.

"அதே சமயத்தில் திராவிடக் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் எங்கே தங்களுடைய கொள்கையை, மக்களிடத்திலே பரப்புவதில் இந்த மசோதா தடையாக இருக்குமோ என்று அஞ்சி இதை எதிர்க்கிருர்கள்.

"என்னைப் பொறுத்த வரையில் கம்யூனிஸ்ட் கட்சியாரின் வாதத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பதில் சொல்லலாம் என்றும் திராவிடக் கட்சியின் வாதத்தை எடுத்துக்கொண்டு அவர்களுக்கும் பதில் சொல்லலா மென்றும் எண்ணுகிறேன். ஏனென்ருல் திராவிடக் கட்சியார் இந்த மசோதாவை ஏன் எதிர்க்கிருர்கள் என்பதற்காக எழுப்பிய ஆட்சேபணைகளை கம்யூனிஸ்ட் கட்சியார் எடுத்துச் சொல்லவில்லை. அதைப்போலவே கம்யூனிஸ்ட் கட்சியார் இந்த மசோதாவை ஏன் எதிர்க்கிருர்கள் என்பதற்காக எழுப்பிய ஆட்சேபணைகளை திராவிடக் கட்சியார் எடுத்துச் சொல்லவில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் கட்சியின் கொள்கைக்குப் பாதகமாக இந்த மசோதா இருக்குமோ என்ற அச்சத்தில் அதிலுள்ள சில ஷரத்துகளை மாத்திரம் கடுமையாக எதிர்க்கிருர்களே தவிர மற்ற பகுதிகளை எதிர்க்க வில்லை. அதைப் போன்றே ஒரு சில குறிப்பிட்ட ஷரத்தைத் தவிர மற்ற பகுதிகளைப் பற்றி திராவிடக் கட்சியாரும் ஆட்சேபணை சொல்லவில்லை.

"இப்படிப்பட்ட பயத்திற்கும், இப்படிப்பட்ட எதிர்ப்புகளுக்கும் எந்த விதமான ஆதாரமும் இல்லை என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதைப் பற்றித்தான் இந்த மசோதாவின் மீது நடந்த விவாதத்திற்குப்பதில் சொல்லும் வகையில் சபையோருக்கு நான் சில விஷயங்களை எடுத்துக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."

SRI S. SIVAYAMPRAKASAM :—"On a point of order :—

கனம் சபா நாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தை கட்சியின் கொள்கையை அடிப்படையாக வைத்தோ, அல்லது கட்சியின் கொள்கைக்கு, அதன் கருத்துக்கு இதனுல் ஆபத்து உண்டாகும் என்ற பயத்தாலோ நாங்கள் அதற்கு ஆட்சேபணைகள் செய்தோம் என்று சொல்வது முற்றிலும் தவறு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டத்தைச் சட்டமாகவே எடுத்துக்கொண்டு எந்தவிதமான முறைகளிலே அது ஆட்சேபகரமானது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேமேதவிர சட்டத்திற்கே சம்பந்தப் படாத வகையில் எங்கள் கட்சிக் கொள்கையை அடிப்படையாக வைத்து ஆட்சேபணை எழுப்பியதாகச் சொல்வது தவறு என்று கனம் நிதி மந்திரி அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறைன்."

MR. SPEAKER :—"It is a personal explanation, not a point of order."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, சபையிலே நடந்த விவாதத்திற்கு நான் எந்த முறையில் அர்த்தம் புரிந்து கொண்டிருக்கிறேனே அந்த முறையில்தான் நான் பதில் சொல்ல முடியுமே தவிர வேறு விதமாக பதில் சொல்வதற்குத் தயாராக இல்லை.

"நேற்றைய தினம் பேசிய நண்பர்கள் எந்தமாதிரியான முறையில் பேசினுர்களோ, எந்தமாதிரி என் மனதில் அவை பதிந்திருக்கிறதோ, எந்தமாதிரியான ஆட்சேபணைகளை தெரிவித்தார்களோ, அந்தமாதிரியான முறையிலேயே, அந்த மாதிரியான ஆட்சேபணைகளுக்கே என்னுல் பதில் சொல்ல முடியுமே தவிர வேறுவிதமாக பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னுல் அது சாத்தியம் இல்லாத காரியம். அவர்கள் பேசியவற்றையெல்லாம் நாங்கள் எவ்வளவு பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தோமோ அவ்வளவு பொறுமையுடன் அவர்களையும் நான் பேசுவதைக் கேட்க வேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இதிலே

மன ஆவேசத்துடனே, அல்லது சூசகமாகவோ, அல்லது கருத்தை உள்ளடக்கி கற்பனையாகவோ பேசுகிறவர்களின் உட்கருத்தெல்லாம் என்னவென ஆராய்ந்து நான் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. அவர்கள் கொள்கை என்ன ? எப்படி இந்த மசோதா அவர்களது கொள்கைகளுக்குத் தடையாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள் என்று பார்த்தால் அவர்கள் எழுப்புகின்ற ஆட்சேபணைகளுக்குக் கொஞ்சம்கூட ஆதாரம் கிடையாது, அவர்கள் பயப்படவேண்டிய அவசியமே இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். சில இடங்களிலே உண்மையிலேயே அவர்களுக்குப் பயம் ஏற்பட்டாலும் அந்த பயம் அவர்களது கொள்கை அடிப்படையில்தான் ஏற்படுவதாக இருக்கும். ஆகவே அந்த பயத்தைப் போக்கக்கூடிய சக்தி எனக்கு இல்லையென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

" இன்று கம்யூனிஸ்ட் கட்சியார்களின் முக்கியமான எதிர்ப்பு மத சம்பந்தமாக இருக்கக்கூடிய ஷரத்து பற்றியது அல்ல. அதற்கு மேல் இருக்கக் கூடிய நான்கு ஷரத்துக்களைத்தான் அவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். அதில் கண்டிருக்கும் ஷரத்து மக்களிடையே பலாத்காரத்தைத் தூண்டிவிடக்கூடிய அம்சங்களைக் கொண்ட நாடகங்களுக்குத் தடையாக இருக்கிறது. அதன்படி எவைகள் எல்லாம் ஆட்சேபகரமானது என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளே தங்களுக்கு ஆட்சேபகரமானவைகள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் அதை ஆட்சேபிப்பது பற்றி நான் ஆச்சர்யப்படவில்லை. அவர்களுடைய கொள்கையில், அவ்வப்போது எழுகின்ற சில நடவடிக்கைகளுக்குத் தக்கபடி சில மாறுதல்கள், ஆங்காங்கு இருக்கக்கூடிய சூழ் நிலைக்கு இணக்கமாக சில மாறுதல்கள், இருந்தாலும்கூட, அவர்களுடைய அடிப்படையான கொள்கையில் எந்தக் காலத்திலும் மாறுதல்கள் கிடையாது என்பது சரித்திரத்தின் வாயிலாக நாம் அறியலாம். அது கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியமான சக்தியும்கூட. அது அவர்கள் தங்களது லட்சியத்தைக் கடைபிடிக்கக் கூடிய உறுதி உடையவர்கள் என்ற காரணத்தாலும்கூட. இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லையென்றால் அதைப் பூராவாக நான் ஏற்றுக்கொள்ளத்தயாராயில்லை. இன்றைய சூழ் நிலையில் பலாத்காரம் அவசியம் இல்லை என்று அவர்கள் சொல்லுவதாக நான் ஏற்றுக் கொள்வேனே தவிர, கம்யூனிஸ்ட் கட்சி தனது அடிப்படையான கொள்கையையே விட்டுவிட்டது, இன்றைக்கு அகிம்சா முறையில், சாத்வீகமான முறையில் அதிக நம்பிக்கை கொண்டுவிட்டது, அவர்கள் இனிமேல் பலாத்காரத்தையே கைக்கொள்ள மாட்டார்கள் என்று என்னை நம்பச் சொன்னால், நான் நம்பத் தயாராயில்லை. அப்பொழுது அவர்கள் கட்சிக்கு கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரே இருக்கமுடியாது. அது வேறு கட்சியாகத்தான் இயங்க முடியும். ஆகவே, அவர்களுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய கொள்கையை ஒரு நாளும் கைவிட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

" அவர்களது அடிப்படையான கொள்கை என்ன என்று நாம் யோசித்துப் பார்த்தால் நாட்டில் ஒரு சமத்துவ சமுதாயத்தை அமைப்பதற்காக ஒரு பகுதியினர் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த அதிகாரத்தைக் கைப்பற்றுவது சாத்வீகமான முறையிலோ, சமாதான முறையிலோ, சட்ட ரீதியான முறையிலோ, அவர்களால் முடியாது. தவிரவும் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அவரவர்களின் மனதிற்கே தெரியும். தங்கள் கொள்கையை, தங்கள் எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ள, ஒரு புரட்சியை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படுகின்ற குழப்பத்திலே அவர்கள் பல இடங்களிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அனுபவத்தின் விளைவாக சில சித்தாந்தங்களை அவர்கள் கடைந்து எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிகாரத்தைக் கைப்பற்றுவது வோட்டுக்கள் மூலமாகவோ அல்லது வேறு சாத்வீகமானமுறையிலோ முடியாத காரணத்தால் பலாத்காரத்தைக் கைக்கொண்டு புரட்சியை ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் அது முடியும் என்பது அவர்களது அடிப்படையான கொள்கை. ஆகவே, அதற்கான சூழ் நிலையை எந்த

21st December 1954] [Sri C. Subramaniam]

வகையில் ஏற்படுத்திக்கொள்வது என்ற கருத்தோடு அவ்வப்போது நாட்டில் ஏற்படுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ற பிரகாரம் எப்படி தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வது என்பது கம்யூனிஸ்ட் கட்சியாருக்கு நன்கு தெரியும். அதுதான் அவர்களுடைய சாமர்த்தியம், அறிவு, திறமை. அதற்கு மேலும் இன்னொன்று. அந்த அதிகாரம் கைக்கு வந்த பிற்பாடு அந்த அதிகாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றாலும் பலாத்கார முறையினால்தான் காப்பாற்ற முடியும்."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரியாக இருந்தாலும்கூட சபை ஒழுங்கை அனுசரித்துத்தான் பேசவேண்டும். சபை ஒழுங்குப்படி சபையில் நடக்கும் விவாதம் நம் சபைக்கு முன் இருக்கக் கூடிய பிரச்னையைச் சார்ந்ததாகவும் அதற்கு ஒத்ததாகவும்தான் இருக்கவேண்டும். நமது நிதி மந்திரி அவர்கள் தற்போது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரசாரத்திற்காக அமைக்கப்பட்ட பொது மேடையில் பேசுவதற்கும் சட்ட சபையில் பேசுவதற்கும் எந்தவித மான வித்யாசமும் இல்லாமல்தான் பேசுகின்றார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்."

SRI P. RAMAMURTHI :—" கனம் சபா நாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளைப் பற்றி விவாதிக்கத் தயாராக இருந்தால் அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்கு இது இடமல்ல. இது சந்தர்ப்பமும் அல்ல. மசோதாவின் பொது விவாதத்திற்குப் பதில் சொல்லும் முறையில் எங்கள் கட்சியைப் பற்றி கனம் மந்திரி அவர்கள் தன் இஷ்டப் பிரகாரம் பேசிக் கொண்டு வருகிறார்கள் என்பது எனது அபிப்பிராயம். அவர் பேசுவது மசோதாவிற்கு சம்பந்தப்பட்டது அல்ல. அவர் இஷ்டப்படி பேசட்டும். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவர் பேசுகின்றவைகளுக்கு பதில் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தை எனக்குத் தாங்கள் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—" உங்களுக்கும் அவகாசம் நான் கொடுக்கிறேன்."

*THE HON. SRI C. SUBRAMANIAM :—" கொஞ்சம் பொறுமையுடன் கேட்டால் நான் பேசுவதற்கும் இந்த மசோதாவிற்கும் சம்பந்தம் இருக்கிறது என்பது தெரியும். அவசரமும் ஆத்திரமும் படுவதால் பிரயோசனம் இல்லை. அவசரப் படுகிறவர்களுக்கும் ஆத்திரப்படுகிறவர்களுக்கும் கொஞ்சம் ஏதோ மட்டு என்று சொல்லுவார்கள்."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—" ஆத்திரப்படுகிறவனுக்கு என்று, அவன் இவன் என்று சொல்லலாமா என்று கேட்கிறேன்."

MR. SPEAKER :—" அவன் என்று அவர் சொல்லவில்லை."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் அப்படிச் சொல்லயிருந்தாலும் அந்த வார்த்தை ஆட்சேபகரமானது அல்ல. அது தமிழில் உள்ள ஒரு பழமொழி. யார் ஆத்திரப்படுபவன், யாருக்கு புத்தி மட்டு என்பதுதான் கேள்வி. சபையினரே அதை முடிவு செய்யவேண்டும்."

* THE HON. SRI C. SUBRAMANIAM:—" உண்மையைச் சொல்வது பற்றி மனத்திலே ஆவேசமோ, ஆத்திரமோ கொள்ளாது நிதானமாகக் கேட்கவேண்டும். எவ்வெப்போது ஆத்திரம் ஏற்படுகிறதோ அவ்வப்போது புத்தி மட்டு ஏற்படுகிறது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் யார் ஆத்திரப்படுகின்றனர் என்பது சபையினருக்குத் தெரியும். (சிரிப்பு.)

" அந்த அதிகாரத்தைக் கைப்பற்றிய பிற்பாடு, அந்த அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்வதற்கும், அவர்களுடைய அதிகாரத்தை எதிர்க்கின்றவர்களின் எதிர்ப்பை அழித்துவிடுவதற்கும், பலாத்காரத்தை உபயோகப்படுத்துவதையே தங்கள் கொள்கையாகக் கொண்டவர்கள் கம்யூனிஸ்ட்கள்.

[Sri C. Subramaniam] [21st December 1954

" ஆகவே அப்படி இருக்கும்போது அவர்களுடைய அடிப்படையான கொள்கைக்கு எதிராக இருக்கக்கூடிய எந்த மசோதாக்கள் வந்தாலும் அவற்றை எதிர்க்கத் தான் செய்கிறார்கள். இந்த மசோதாவில் மாத்திரம் அந்த எதிர்ப்பை நாம் பார்க்கவில்லை. அந்த எதிர்ப்பை எல்லாத் துறைகளிலும் நாம் பார்க்கிறோம். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அதற்கு மக்களிடமும், ஜனநாயகத்தினிடமும் நம்பிக்கையுண்டு. காங்கிரஸ் கட்சி விரும்புகின்ற ஜனநாயகமானது கம்யூனிஸ்ட் கட்சியின் ஜனநாயகம் அல்ல. எங்களுக்குத் தெரிந்த ஜன நாயகப்படி மக்களிடம்தான் அதிகாரம் இருக்கிறது. மக்கள் எல்லாம் பார்த்து யாரை தங்கள் பிரதிநிதிகள் என்று தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்புகிறார்களோ அவர்கள் தான் அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். ஆகவே அதிகாரத்தில் இருக்கின்ற நாங்கள் எப்போதும் மக்களின் தயவை, மக்களின் ஆதரவை நாடியே பதவியில் இருந்துகொண்டிருக்க வேண்டும். நல்ல முறையில் நாங்கள் நடந்தால்தான் அவர்கள் ஆதரவு எப்பொழுதும் எங்கள் பக்கம் இருக்கும் என்ற நம்பிக்கையில் பல காரியங்களைச் செய்கிறோம். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியாருக்கு மக்கள் பேரில் நம்பிக்கை இல்லை."

Sri M. KALYANASUNDARAM :—" ஐந்து ரூபாய் கொடுத்து வோட்டு வாங்குவதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை தான்."

***The Hon. Sri C. SUBRAMANYAM** :—" வோட்டு வாங்கும் முறையிலேயே நம்பிக்கை இல்லாதவர்கள் நீங்கள். (சிரிப்பு.) ஆனால் நாங்கள் அப்படி அல்ல. எல்லா அதிகாரத்தையும் மக்களிடமே கொடுத்திருக்கிறோம். மக்கள் பெரும்பான்மையினராக எந்தக் கட்சியார்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்களோ அந்தக் கட்சியார் மக்களின் பரிபூர்ண ஆதரவைப் பெற்று அதிகாரத்திற்கு வருகின்றார்கள். எந்தக் கட்சியார் அதிகாரத்திற்கு வந்தாலும் அந்தக் கட்சியார் அதிகாரத்திற்கு வந்தவுடனேயே எப்பொழுதும் அவர்களே நீடித்து இருந்து கொண்டிருப்பதற்கான வகையிலும் இல்லை நமது அரசியல் அமைப்பு. தாங்களே அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் மக்களின் ஆதரவை மக்களின் நம்பிக்கையை எப்பொழுதும் நிரந்தரமாகப் பெறவேண்டிய காரியங்களையே செய்து கொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதிகாரத்தில் இருப்பவர்களை அப்புறப்படுத்தக் கூடிய அதிகாரமும் மக்களிடமே இருக்கிறது. அதனாலேயே எப்பொழுதும் அவர்களுடைய ஆதரவைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறோம் நமது அரசியல் அமைப்பில்.

" அப்படியிருக்கும்போது எப்படிப்பட்ட மாறுதல்களைச் செய்யவேண்டும் என்றாலும் மக்களிடையே அப்பிரச்னையை எடுத்துச் சொல்லி அவர்களுடைய ஆதரவைப் பெற்று அவற்றைச் சட்ட ரீதியான முறையில்தான் செய்ய வேண்டுமென்று நமது அரசியல் அமைப்பின் கீழ் இன்றைக்கு இருக்கிறது. ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் அந்த அரசியல் அமைப்பே சரியல்ல, அதை வேறு விதமாக மாற்றியமைத்தாக வேண்டும் என்று அபிப்பிராயப்படுவதற்கும் பூர்ண சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாளைக்கு அவர் அதிகாரத்திற்கு வந்தாலும் அதை மாற்றியமைக்கும் சுதந்தரம்கூட நமது அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

11-30 a.m. " ஆனால் இன்றைக்குள்ள அரசியல் அமைப்பின் கீழ் தான் நாம் வேலை செய்கிறோம். இதில் மக்களுக்கே யாரை அதிகாரத்தில் வைப்பது என்பதில் பூர்ண சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ஆதரவுள்ளவர்களே பதவியில் இருக்க முடியுமென்று மக்களுக்கு அதிகாரத்தை வழங்கிவிட்ட ஜனநாயகத்தை நம்புகின்றவர்கள் நாங்கள். இப்படிப்பட்ட ஜனநாயகத்தில் அரசியல் அமைப்பின் கீழ் செய்ய வேண்டிய மாறுதல்களையெல்லாம் நாம் சமாதானமான முறையில், மக்களிடையே அந்தப் பிரச்னையை எடுத்துச்சொல்லி சர்க்காரையே மாற்ற வேண்டுமானாலும்கூட மாற்ற முடியும். அதிகாரத்திலுள்ளவர்கள் தங்களுக்கு மக்களிடமுள்ள செல்வாக்கை உபயோகித்து, அவர்களுடைய சக்தியை யெல்லாம் ஒன்று

21st December 1954] [Sri C. Subramaniam]

திரட்டி எத்தகைய மாறுதல்களையும் செய்து கொள்ளலாம். அதுவும் சட்ட ரீதியாகவே செய்து கொள்ளலாம் என்று நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த அரசியல் அமைப்பு கம்யூனிஸ்ட்களுக்குப் பிடிக்காததாக இருக்கலாம். ஆனால் சட்ட ரீதியாக, அமைதியான முறையிலேயே, சமூகமான முறையிலேயே எந்தவிதமான மாறுதல்களையும் செய்துகொள்ள நம் நாட்டு அரசியல் அமைப்பில் வசதியிருக்கும்போது பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டு கிளர்ச்சி செய்து அரசியல் விஷயங்களிலும், பொருளாதார விஷயங்களிலும், சமுதாய விஷயங்களிலும் மாறுதல்களைச் செய்ய வேண்டிய அவசியமே நம் நாட்டில் கிடையாது.

"ஆனால் வேறு வேறு நாட்டில் அவற்றின் அரசியல் அமைப்பில், பலாத்காரக் கிளர்ச்சியை அமைத்துக் கொண்டு சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் மாறுதல்களை ஏற்படுத்த முடியும் என்கின்ற சூழ்நிலை இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலை நம் நாட்டில், நமது அரசியல் அமைப்பின்கீழ் கிடையாது என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"ஆகவே இந்த நாட்டில் பலாத்காரத்தைக் கொண்டு தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்வதற்கு யாருக்குமே அவசியம் இல்லை. அதுவும் பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்றவர்கள்தான் அதிகாரத்தில் இருக்க முடியும் என்ற நிர்ப்பந்தத்தை அரசியல் அமைப்பின் கீழே ஏற்படுத்திய பிற்பாடு பலாத்காரத்திற்கு துளிக்கூட இந்த நாட்டில் இடமில்லை. ஆனால் ஒரு சிறு கூட்டத்தினர் தங்கள் கொள்கையை மெஜாரிட்டி மக்கள் ஆதரிக்க மாட்டேன் என்கிறார்களே என்பதற்காக, பலாத்காரக் கிளர்ச்சிகளை அமைத்துக் கொண்டு மக்கள் எல்லோர்பேரிலும் தங்கள் கொள்கையைப் புகுத்த வேண்டுமென்று விரும்பினால் அதற்கு அரசியல் அமைப்பின்கீழ் வேலை செய்கின்ற நாங்கள் இடமளித்துக் கொண்டிருக்க முடியாது.

"ஆகையால் இன்றைக்கு பலாத்காரத்தை பிரசாரம் செய்கின்ற பத்திரிகைகளாக இருந்தாலும் சரி, நாடகங்களாக இருந்தாலும் சரி, புஸ்தகங்களாக இருந்தாலும் சரி அவற்றை அனுமதித்துக்கொண்டிருக்க முடியாது. அனுமதிப்பதும் நமது அரசியல் அமைப்புக்கு ஒத்ததாக இருக்காதென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"ஆகையால் இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த நாடக மசோதாவின் ஷரத்துக்களைப் பார்ப்போமேயானால் இது நாட்டிலே சமுதாயத்துறையிலும் மற்ற இதர துறைகளிலும் எந்தவிதமான மாறுதல்களைச் செய்வதற்கும், நாடகம் மூலமாகவோ அல்லது வேறு எந்த சாதனங்கள் மூலமாகவோ பிரசாரம் செய்வதற்கு இது தடையாக இராது.

"அதுவும் முக்கியமாக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒன்றை சந்தேகத்திற்கு இடமின்றி வெகு ஸ்பஷ்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது அரசியல் அமைப்புப்படி எந்த வகையில் வேண்டுமானாலும் பிரசாரம் செய்வதற்கு பூரண சுதந்திரம் இந்த நாட்டில் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மந்திரிகளைப்பற்றி இன்றைக்கு பல பொய்யான அவதூறுகள், பல பொய்யான அபாண்டங்கள் எல்லாம் கட்டிவிடப்படுகின்றன. எப்படிப்பட்ட அவதூறுகளை வேண்டுமானாலும் அபாண்டங்களை வேண்டுமானாலும் இனிமேலும் கட்டிவிடலாம். புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலியவற்றில் எழுதலாம், நாடகங்களிலும் நடிக்கலாம். பொது வாழ்வில் ஈடுபட்ட பின்னர் எப்படிப்பட்ட அவதூறுகளையும், அபாண்டங்களையும் பொறுமையுடன் ஏற்று சகித்துக்கொண்டு அவற்றால் உணர்ச்சி பாதிக்கப்படாமல் ராஜ்ய நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டியதுதான் புத்திசாலித்தனமானது என்பது எங்களுக்குத் தெரியும். மக்கள் கடைசியில் உண்மை எது என்பதை உணர்ந்து தங்கள் தீர்ப்பைக் கொடுப்பார்கள். ஆகவேதான் மந்திரிகளைப்பற்றி எவ்வளவு அவதூறாக நாடகங்களிலே நடித்துக்

காட்டினுலும், அதற்காக நாங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்போவது கிடையாது, என்ற உறுதியை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"நாங்கள் சொல்கின்ற வார்த்தைகளில் நாங்கள் நடந்துகொண்டு வருகின்ற முறையில், நாங்கள் செய்துவருகின்ற காரியங்களில் மக்களுக்கு நம்பிக்கை இருப்பதினுல்தான் எங்களை அவர்கள் அதிகாரத்தில் வைத்திருக்கிருர்கள். நாங்கள் நடந்துகொண்டு வருகின்ற முறையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்ருல், அவர்களுடைய ஆதரவை எங்களுக்குக் கொடுக்கக்கூடிய யோக்கியதை எங்களுக்கு இல்லையென்று அவர்கள் நினைத்தால் எங்களை அதிகாரத்திலிருந்து தள்ளிவிட்டு மற்றெருவரிடம் அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய பூர்ண உரிமையையும் மக்களிடமே கொடுத்திருக்கிருேம். முதல் மந்திரியைக்கூட தோற்கடிக்கக்கூடிய சக்தியை மக்களுக்குக் கொடுத்திருக்கிருேம். ஆகவேதான் சிறிதுகூட கவலையின்றி நான் இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இந்த உறுதியைக் கொடுக்கிறேன். சர்க்காரில் இருக்கக்கூடிய மந்திரிகளைப்பற்றி எவ்வளவு அவதூருனவையாக இருந்தாலும்சரி, பொய்யானவையாக இருந்தாலும்சரி, அபாண்டமானவையாக இருந்தாலும்சரி, நாடகங்களிலே நடித்துக்காட்டினுல் அவற்றிற்காக இந்த நாடக மசோதாவை வைத்துக்கொண்டு எந்த விதமான நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்குக் கிடையாது. எப்படிப்பட்ட அவதூருக இருந்தாலும், அபாண்டமாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் மக்களிடையே பதில் சொல்லி அவர்களின் நம்பிக்கையைப் பெறுவது முக்கியம் என்பதை நாங்கள் உணர்வோம். அதற்கு மேலும் மக்களுக்கு எங்கள் பேரில் நம்பிக்கை இருந்தால் நாங்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கக்கூடிய தகுதியைப் பெற்றவர்களாகவும் உடையவர்களாகவும் ஆவோம். ஆகையால் கனம் ராமமூர்த்தி அவர்களும், கனம் கல்யாணசுந்தரம் அவர்களும், மற்றக் கட்சிக்காரர்களும் நான் சொல்லுவதை நம்பலாம். ஆகவே மற்றவர்கள் எங்களை அவதூறுகள் செய்யாமல் காப்பாற்றிக்கொள்ள, அதுவும் குறிப்பாக கம்யூனிஸ்டுகள் தெருக்கூத்துக்களைப் போட்டு மந்திரிகளைத் திட்டுவதைத் தடுக்கக்கூடிய வகையிலும், அவர்கள் கிளப்பிவிடுகின்ற பொய்யான அபாண்டங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் இந்த மசோதா எந்தக் காலத்திலும் உபயோகிக்கப்படமாட்டாது என்று நான் உறுதியாக அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்காரில் இருக்கக்கூடிய மந்திரிகளைப்பற்றி திட்டினுலும், அரசாங்கத்தைப்பற்றி பல பொய்யான வதந்திகளைக் கிளப்பிவிட்டாலும் அதற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்போவதில்லை. அதற்காகவேதான் இரண்டாவது ஷரத்தின் கடைசியில் சில விளக்கங்கள் கொடுத்திருக்கிருேம். அதுவும் குறிப்பாக முதல் விளக்கத்தில் இதைப்பற்றித் தெளிவாகவே சொல்லியிருக்கிருேம்.

"அதே சமயத்தில் சமுதாயத்தில் ஏற்படுத்தப்படவேண்டிய மாறுதல்களையெல்லாம் பலாத்காரத்தின் மூலமாகத்தான் செய்ய முடியுமென்கின்ற நம்பிக்கை யாருக்காவது இருந்தால், அவரது கொள்கைக்கு, அவரது லட்சியத்திற்கு நம் நாட்டில் இடமில்லை. இப்பொழுது இருக்கக்கூடிய சர்க்கார் அதைத் தடுத்தேயாகவேண்டும். எங்கள் கொள்கைப் பிரகாரம் அதைத் தடுக்கத்தான் தடுப்போம். இந்தக் கொள்கையை அடிப்படையாக கொண்டுதான் இந்த நாட்டு அரசியல் அமைப்பே ஏற்படுத்தப்பட்டிருக்கிற து.

"தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிற நாடக மசோதாவின் ஷரத்து இரண்டில் உள்ள முதல்நான்கு பிரிவுகளின்படி பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய எந்தப் பிரசாரமாக இருந்தாலும் சரி, நாடகத்தின் மூலமாக கலை என்ற போர்வைக்குள் பலாத்காரத்தைப் பிரசாரம் செய்ய முற்பட்டாலும்கூட அது தடுக்கப்பட்டே தீரும். அதற்காகவே அவற்றை ஏற்படுத்தியிருக்கிருேம். ஆனுல் எங்களுடைய அடிப்படைக் கொள்கையையே ஒப்புக்கொள்ளாததின் காரணமாக பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய எந்த நாடகமும் தடை செய்யப்படும் என்று சொல்லக்கூடிய ஷரத்துக்களைத்தான்

21st December 1954] [Sri C. Subramaniam]

கம்யூனிஸ்ட்கள் பலமாக, அதுவும் வன்மையாக கண்டிக்கிருர்கள். ஆகவே தான் அதைப்பற்றி நான் முதலிலேயே ஆச்சரியப்படவில்லை என்று சொன்னேன்."

Sri P. JEEVANANDAM :—" கனம் தலைவர் அவர்களே, பலாத்காரத்தைப் பிரசாரம் செய்யக்கூடிய எல்லாவற்றையும் தடுத்தே ஆக வேண்டுமென்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னுர். அப்படியானுல் தாடகை வதத்திலிருந்து ராவண வதம் வரை பலாத்காரத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் ராமாயணத்தை தடுப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

*THE HON. SRI C. SUBRAMANIAM :—" பெரிய கலைஞராகிய கனம் பி. ஜீவானந்தம் அவர்களே இம்மாதிரி கேள்வி கேட்டதுபற்றி நான் ரொம்பவும் வருந்துகிறேன். பலாத்காரத்தை செய்யும்படி தூண்டக்கூடிய நாடகங்கள் தடை செய்யப்படும் என்று சொன்னுல் நாடகத்திலேயே பலாத்காரமான காட்சிகளே காட்டக்கூடாது என்பது அர்த்தமல்ல. இன்றைக்குப் பல இடங்களிலே பார்க்கிறேம். மக்கள் பலாத்காரத்தைக் கைக்கொள்ளாவிட்டால், பலாத்கார அடிப்படையில் புரட்சியை நடத்தாவிட்டால் அவர்களுக்கு விமோசனமே கிடையாது, அவர்களுக்கு நல்வாழ்வே கிடையாது என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆகவே, இந்த முறையில் பலாத்காரத்தின் மூலம்தான் மோட்சம், சுபிட்சம் என்று சொல்லி மக்களை பலாத்காரத்திற்குத் தூண்டிவிடும் நாடகங்களையே தடை செய்கிறேமே தவிர பலாத்காரத்தை எந்த இடத்திலும், எந்த விதமாகவும் நாடகத்தில் சித்தரித்துக் காட்டக்கூடாது என்று இந்த மசோதா தடை செய்யவில்லை. அது இதனுடைய நோக்கமும் அல்ல. ஷரத்துவாரியாக ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் இந்த மசோதாவைப் படித்துப் பார்த்திருந்தால் இதை நன்கு உணர்ந்திருப்பார். இப்பொழுது ஏதோ நான் பேசும்போது குறுக்கிட வேண்டுமென்பதற்காக எழுந்திருந்து இந்தக் கேள்வியைப் போட்டாரே தவிர வேறு ஒரு காரணமும் இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

" ஆகவே கலை, முன்னேற்றம் என்ற பெயரில் மக்களிடையே பலாத்கார மனப்பான்மையை ஏற்படுத்திக்கொண்டு வருவதை இந்த மசோதா மூலம் சர்க்கார் தடுக்கின்றனரே என்றுதான் கம்யூனிஸ்டுகள் எதிர்க்கின்றனர். பலாத்காரத்தைக்கொண்டு நம்முடைய சமுதாயத்திலே எந்தவிதமான மாறுதல்களையும் செய்யக்கூடாது என்பது இந்த நாட்டு அரசியல் அமைப்பின் கொள்கை. நம் சர்க்காரின் கொள்கையும் ஆகும். ஆனுல் பலாத்காரம் ஒன்றின் மூலமாகவேதான் இந்த நாட்டிலுள்ள சமுதாயத்திலே பல மாறுதல்களைத் திணிக்க முடியும் என்பது கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தம். இதனுல்தான் இத்தனை முரண்பாடுகளும், மோதல்களும் ஏற்பட்டிருக்கின்றன.

" இன்று அரசியல் அமைப்பிலே இருக்கக்கூடிய சில விஷயங்கள் நமக்கு முற்றிலும் விரோதமாக இருக்குமென்று நினைத்துக்கொண்டு அதை உடனடியாக மாற்றவேண்டுமென்பதற்காக பலாத்காரத்தில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. அதிலுள்ள வேறு ஷரத்துக்களைக்கொண்டு பார்லிமெண்டில் நமக்கு விரோதமாகவுள்ள ஷரத்துக்களையே மாற்றி அமைத்துக்கொள்ளக்கூடிய ஜீவாதாரமான உரிமையை மக்களுடைய் பிரதிநிதிகளின் கையில் கொடுத்திருக்கும்போது அந்த மாறுதல்களைச் செய்வதற்கு பலாத்காரம் அவசியமா, என்றும் நாம் யோசித்துப்பார்க்கவேண்டியிருக்கிறது. கம்யூனிஸ்டுகளின் கொள்கை எதையும் பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட கிளர்ச்சி ஒன்றினுல்தான் முடியும் என்று இருக்கலாம். ஆனுல் எந்தத் துறையில் வேண்டுமானுலும்சரி, எப்படிப்பட்ட மாறுதல்களைச் செய்யவேண்டுமானுலும்சரி பலாத்காரத்தைக் கைக்கொள்ளவேண்டிய அவசியமே இல்லை என்ற கொள்கை கொண்டவர்களாக நாம் இருக்கின்ற காரணத்தால் இந்த இரு கட்சியாருக்குமிடையே சமாதானத்திற்கே இடமில்லை. அவர்கள் கொண்ட கொள்கை பிரகாரம், இந்த நாட்டிலுள்ள சமுதாயத்தையே பெரும் அளவில் பாதிக்கக்கூடிய பலாத்காரத்தை நாடகம்

[Sri C. Subramaniam] [21st December 1954

மூலமாகப் பிரசாரம் செய்வது தடுக்கப்படும் என்று நாம் ஒரு மசோதாவை கொண்டு வந்தால் அவர்களுக்கும் நமக்கும் அடிப்படைக் கொள்கையிலேயே வேற்றுமை இருப்பதன் காரணமாக அவர்கள் அந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கையையே பலமாக எதிர்க்கின்றார்கள். ஆகவேதான் அவர்களுக்குச் சமாதானமாக விட்டுக்கொடுத்துக்கொண்டு இந்த மசோதாவில் ஓரளவு பலாத்காரத்தை அனுமதிக்கலாம் என்ற நிலைமையில் நாங்கள் இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் வாதத்தை நன்கு கவனித்துப் பார்த்தால் அவர்களுடைய ஆட்சேபணை எல்லாம் இந்த மசோதாவிலுள்ள ஏதோ ஒரு ஷரத்தைப்பற்றியது அல்ல, ஏதோ இந்த நாடகக் கலையே நசிந்துவிடப் போகின்றதே என்ற கவலையினால் எழுந்ததும் அல்ல என்பது நன்கு தெரியும். இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கையையே அவர்கள் எதிர்க்கும்போது அவர்களுடைய எதிர்ப்பு எங்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கே ஒரு எதிர்ப்பாகத்தான் கருதுகிறேன். ஆகவே கம்யூனிஸ்ட்களின் ஆட்சேபத்தை, எதிர்ப்பை, கொள்கை எதிர்ப்பாகவும், அரசியல் எதிர்ப்பாகவும்தான் நான் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியது அவர்களுடைய கொள்கைக்கு எதிராக எங்கள் கொள்கையை ஆதரித்து எங்களை தங்கள் பிரதிநிதிகளாக சபைக்கு அனுப்பியிருக்கும் மக்கள்தான். மக்களுடைய கொள்கை வெற்றி பெற வேண்டுமென்றால் அவர்களுடைய பிரதிநிதிகளாகிய நாங்கள் எங்களது கொள்கையிலிருந்து சிறிதும் விட்டுக் கொடுப்பதிற்கில்லை. ஆகவேதான் கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பை சமாளிக்க நாங்களும் தயாராக இருக்கிறோமே தவிர அவர்களுடைய கொள்கைக்கு விட்டு கொடுக்கக்கூடிய நிலைமையில் சிறிதும் இல்லை. அவர்கள் பதவிக்கு வந்த பின்னர் அவர்கள் கொள்கைப்படியே நடக்கும் சக்தி பெற்றவர்கள் அவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அதைப்போலவே நாங்களும் இன்றைக்கு அதிகாரத்தில் இருக்கும்போது எங்கள் கொள்கையை விட்டுக் கொடுப்பதற்கில்லை என்பதை அவர்கள் உணரவேண்டும். அரசியல் அமைப்பில் அடங்கியுள்ள கொள்கைப் பிரகாரமே இந்த நாடக மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை அதை நன்கு அலசிப் பார்த்தால் தெரியும்.

11-45 a.m. " மக்களிடத்தில் எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. யதேச்சாதிகாரத்தால், பலாத்காரத்தால் எந்த மாறுதலையும் துரிதமாகக்கொண்டு வரமுடியும் என்பது ஓரளவு உண்மையாக இருக்கலாம். ஆனால் அந்த அடிப்படையில் ஏற்படுகின்ற மாறுதல்கள் சாஸ்வதமானதல்ல. ஏற்பட்ட மாறுதலை நீடிக்கச் செய்யவும் பலாத்காரத்தை எப்போதும் கைக்கொண்டேயாகவேண்டும். ஆனால் நாங்கள் கடைப்பிடிக்கின்ற ஜனநாயகம் அப்படிப் பட்டதல்ல. எந்த மாறுதலும் சிறிது மெள்ளவே நடந்தாலும்கூட அமைதியான முறையில், சமாதான முறையில் சட்ட ரீதியான முறையில் இருக்கின்ற சமுதாயத்திற்கு எந்த விதமான தீங்கும் ஏற்படாத வகையில் வரப்போகின்ற சந்ததியார்களுக்கும் சுபிட்சம் விளைவிக்கின்ற முறையில் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற பிரதிநிதிகள், மக்களிடமே அப்பிரச்னையையே நன்கு எடுத்துச் சொல்லி அந்த மாறுதல்களைச் செய்யவேண்டியது ரொம்பவும் அவசியமாகும். இதனால் இன்றைக்கு இருக்கக்கூடிய தலைமுறையினர் மிக அதிகத் தியாகம் செய்யவேண்டியதில்லை. வரப்போகின்ற தலைமுறையினரும் மிக அதிகக் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டிய நிலைமையும் ஏற்படப் போவதில்லை. ஆகவே நம்முடைய ஜனநாயகக் கொள்கைப்படி நடந்து சென்றால் முன்னேற்றம் மெதுவாகப் போவதாகத் தோன்றினாலும், அது நிரந்தரமான மாறுதலாகவே இருக்கும். சமாதானமான முறையில் ஓரளவு நாம் தியாகம் செய்வதன் மூலம் பின்னால் சுபிட்சத்திற்கு வழி செய்தவர்களாவோம்.

" எதிர்க்கட்சி தலைவர் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் சீனாவின் ஜனநாயகத்தைப்பற்றி எல்லாம் படித்துக் காட்டினார்கள். அது இன்றைய விவாதத்திற்கு சம்பந்தப்படாதது என்றாலும்கூட, அவர் குறிப்பிட்டதன் காரணமாக ஒரு விஷயத்தை நானும் குறிப்பிட விரும்புகிறேன். சீனாவில்

21st December 1954] [Sri C. Subramaniam]

இருக்கக்கூடிய, அதுவும் ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய, ஜனநாயகத்தைப் பற்றி அவர் எடுத்துச் சொன்னார். நிச்சயமாக அந்த ஜனநாயகத்திற்கும், நம் நாட்டின் ஜனநாயகத்திற்கும், வித்யாசம் உண்டு. மக்கள் எல்லாம் சேர்ந்து பெருவாரியாக யாரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்களோ அவர்கள் மக்களின் நலனுக்காக ஆட்சி செலுத்தவேண்டியது நம் நாட்டு ஜன நாயகம். ஆனால் ஒரு சிறு பகுதியினர் தங்கள் கொள்கையை பெரும் பான்மையான மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்கூட பலாத்காரத்தின் அடிப்படையில் கிளர்ச்சி செய்து, புரட்சியை ஏற்படுத்திக்கொண்டு அந்தக் கொள்கையை புகுத்த விரும்புகிறார்கள். அது அவர்கள் ஜன நாயகம். மீறுபவர்கள் துப்பாக்கி முனையிலும், தூக்கு மேடையிலும்தான் அழிக்கப்படுவார்கள். துப்பாக்கி முனையிலும் தூக்கு மேடையிலும் ஜன நாயகத்தை நிலை நாட்டுவதை நாங்கள் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. மேலும் அதிகாரத்தில் ஒரு சிறு பகுதியினர் இருந்துகொண்டு இதர மக்களைகயிற்றினால் கட்டிவிட்டு கயிறு நீளத்திற்குச் சுதந்திரம் கொடுத்து விட்டு, அதுதான் சுதந்திரம், அதுதான் ஜனநாயகம் என்று சொன்னால் அதை ஒத்துக்கொள்ளவும் நாங்கள் தயாராக இல்லை. இப்படிப் பட்ட அடிப்படையில் இருக்கக்கூடிய முக்கியமான முரண்பாட்டின் காரணமாகத்தான், அடிப்படைக் கொள்கையில் இருக்கக்கூடிய அபிப்பிராய பேதத்தின் காரணமாகத்தான் அந்தப் பகுதியிலிருந்து இந்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது."

*** SRI S. C. C. ANTHONY PILLAI:—"I rise on a point of explanation. The Minister has been trying to justify the Bill on the basis of the Constitution of India. The Constitution of India does permit freedom of speech to canvass the necessity of altering the system of society by revolution. If this is permitted on the platform, why should this Ministry forbid it in the theatre or stage—that is the thing that I would like him to explain. Thus the works of Karl Marx advocating the need of revolution are not banned and cannot be banned under the Constitution of India."**

* THE HON. SRI C. SUBRAMANIAM :—"ஸ்ரீ அந்தோணி பிள்ளை அவர்கள் எந்த அரசியல் அமைப்பை படித்தார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நமது அரசியல் அமைப்புப்படி பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டு எப்பொழுதும் பிரசாரம் செய்யமுடியாது. மேடையிலும் பிரசாரம் செய்ய முடியாது. வேண்டுமானால் ஸ்ரீ அந்தோணி பிள்ளை அவர்கள் மேடையிலேறி பிரசாரம் செய்து பார்க்கலாம். சட்டம் எப்படி இருக்கிறது என்று நன்கு உணர்ந்துகொள்ள முடியும். நமது அரசியல் அமைப்பின்கீழ் மேடையிலும் சரி, வேறு எந்தவிதமாகவும் சரி பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய பிரசாரம் செய்யமுடியாது. இந்தச் சபையில் வேண்டுமானால் செய்ய முடியும்."

MR. SPEAKER :—"நான் இருக்கிறேன். இங்கும் செய்யமுடியாது. உங்கள் இருவருக்கு மத்தியில் நான் ஒருவன் இங்கு இருக்கிறேன் என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியவேண்டும்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—"இங்கே சர்க்கார் குறுக்கிட முடியாது. அதைத்தான் நான் சொன்னேன். சபாநாயகர் தான் குறுக்கிடமுடியும்..

"ஆகவே இப்பொழுதுள்ள அரசியல் அமைப்புப்படியே பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய வகையில் எப்படிப்பட்ட பிரசங்கத்தின் மூலமும் பிரசாரம் செய்யமுடியாது என்பதை அங்கத்தினர்கள் எல்லோரும் உணரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதற்குப் பிற்பாடு இரண்டாவதாக இருக்கக்கூடிய எதிர்ப்பு திராவிடக் கட்சியின் எதிர்ப்பாகும்."

[21st December 1954

Sri S. RAMALINGAM :—" ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். கனம் மந்திரி அவர்கள் சுமார் 45 நிமிஷங்களாக கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி கண்ட கண்டபடி பேசியிருக்கிருர். அவைகளுக்கு எல்லாம் பதில் சொல்லுவதற்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி உண்டா என்று கேட்கிறேன்."

Mr. SPEAKER :—" அவர் 30 நிமிஷங்களாகத்தான் பேசிக் கொண்டிருக்கிருர்."

*** The Hon. Sri C. SUBRAMANIAM** :—" அதற்கு அடுத்த படியாக இருக்கக்கூடிய எதிர்ப்பு திராவிடக் கட்சியின் எதிர்ப்பு என்று குறிப்பிட்டேன்."

Sri P. RAMAMURTHI :—" திராவிடக் கட்சி என்று ஒன்றும் இல்லை. திராவிட பார்லிமெண்டரி கட்சியாகும்."

*** The Hon. Sri C. SUBRAMANIAM** :—" நான் திராவிடக் கட்சி என்று குறிப்பிடும் இடங்களிலெல்லாம் திராவிடப் பார்லிமெண்டரி கட்சியையே குறிப்பிடுகிறேன்."

Sri S. SWAYAMPRAKASAM :—" கனம் மந்திரி அவர்கள் பேசும்போது அடிக்கடி திராவிடக் கட்சி, திராவிடக் கட்சி என்று குறிப்பிட்டு வருகிருர். அது திராவிடக் கட்சியில்லை. திராவிட பார்லிமெண்டரி கட்சியாகும் என்று நான் அதன் தலைவர் என்ற முறையில் சொல்லிக் கொள்ளுகிறேன்."

*** The Hon. Sri C. SUBRAMANIAM** :—" ரொம்ப சந்தோஷம். திராவிடப் பார்லிமெண்டரி கட்சியின் சார்பில் பேசியவர்களுடைய—நான் எல்லோரையும்பற்றி குறிப்பிடவில்லை—முக்கியமான ஒரு சிலருடைய எதிர்ப்பானது அவர்களது கொள்கையின் அடிப்படையில்தான் எழுந்திருக்கிறது என்பதை எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். 'திராவிட நாடு தனித்து இயங்க வேண்டும், வட நாட்டுடன் திராவிட நாடு சேர்ந்திருக்கக்கூடாது, அதோடு திராவிட நாட்டிலேயே திராவிடர் அல்லாத ஒரு பகுதியினர் இருந்து கொண்டிருக்கிருர்கள், அவர்கள் எல்லாம் திராவிட நாட்டிலிருந்து ஓட்டப்படவேண்டும், அவர்கள் இங்கே வசிக்க இடம் கொடுக்கக்கூடாது' என்கின்றதான ஒரு சில அடிப்படையான கொள்கையை வைத்துக்கொண்டு அவர்களுடைய கொள்கைக்கு இது குறுக்கே வந்து நிற்கின்றது என்ற காரணத்திற்காக இதை எதிர்க்கின்ருர்கள்.

" எங்களைப் பொறுத்த வரையில் அதுவும் குறிப்பாக காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் இந்தியாவின் பூர்ண ஒற்றுமையிலேயே அது நம்பிக்கை கொண்டிருக்கிறதே தவிர வட நாடு, திராவிட நாடு என்றெல்லாம் பாகுபாடு செய்வதையே அது விரும்பவில்லை. காங்கிரஸ்காரர்கள் இந்தியாவின் பூரண ஒற்றுமையில்தான் நம்பிக்கை கொண்டவர்கள். இங்கு இருக்கும் எல்லா மக்களின் உரிமையும், எல்லா மக்களின் சுதந்தரமும் சமமாகவே பாதுகாக்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டவர்கள். எனவே நாங்கள் பிரிவினை மனுேபாவத்திற்கே இடம் கொடுக்கமாட்டோம். ஆகவே அந்தக் கொள்கை அடிப்படையிலும் நாங்கள் விட்டுக்கொடுக்க முடியாது. ஆனல் ஒரு விஷயத்தை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டில் இருக்கக்கூடிய எல்லா பிற்போக்கான சமூகங்களையும் முன்னுக்குக் கொண்டு வரவேண்டியது அவசியம். குறிப்பாக திராவிடர்கள் மிகவும் பிற்போக்காக இருந்தால் அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்வது சர்க்காரின் கடமையாகும். அதற்கு எத்தகைய சக்திகள் தடையாக இருக்குமானுலும் அந்தத் தடைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்பதையும் பூர்ணமாக ஒப்புக்கொள்ளுகிருேம். ஆனல் 'திராவிட நாடு

21st December 1954] [Sri C. Subramaniam]

திராவிடருக்கே, மற்றவர்கள் யாரும் இங்கே இருக்க முடியாது, இருக்கக் கூடாது' என்று சொல்லக் கூடிய கொள்கையை மாத்திரம் எங்களால் புரிந்துகொள்ள முடியாது. அதை என்றைக்கும் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளாது.

"ஆகவே இந்த ராஜ்யத்தில் வாழ்கின்ற எல்லா மக்களும் பூர்ண சுதந்திரத்தோடு, பூர்ண உரிமைகளோடு சுமுகமாக, அமைதியான முறையில் ஒருவர்க்கொருவர் சகோதர மனப்பான்மையுடன் கூட வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலை எதுவோ அதை அமைத்துக் கொடுப்பதற்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்துவதும் அதற்கான திட்டங்களை அமைத்து, அவற்றை பிரசாரம் செய்வதும் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக இருக்கிறது."

SRI K. VINAYAKAM:—"On a point of order. இங்கு என்ன நடக்கிறது? கனம் மந்திரி அவர்கள் மசோதாவைப்பற்றி ஏதாவது பேசுகிறாரா? அல்லது அரசியல் வகுப்பு நடத்துகின்றாரா? கம்யூனிஸ்ட்கள் கொள்கை என்ன? திராவிடக் கட்சியின் கொள்கை என்ன என்றெல்லாம் யார் கேட்டார்கள்."

MR. SPEAKER:—"இந்த மசோதா எதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று விளக்கிக் கொண்டிருக்கிறார்."

SRI K. VINAYAKAM:—"அரை மணி நேரமாக அதைத்தான் விளக்கிக்கொண்டிருக்கவேண்டுமா? இதை காங்கிரஸ் கட்சி பிளாட்பாரம் என்று எண்ணிக்கொண்டு அவர் பேசி வருகின்றாரா?".

MR. SPEAKER:—"He is replying to the debate."

SRI S. RAMALINGAM:—"ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் திராவிட பார்லிமெண்டரிக் கட்சியின் கொள்கையைப்பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் அவர்களுடைய கொள்கையா என்று நான் தலைவர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்."

MR. SPEAKER:—"அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அது ஒரு பர்சனல் எக்ஸ்ப்ளநேஷன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM:—"கனம் சபாநாயகர் அவர்களே, நான் இன்றைய விவாதத்திற்கு பதில் சொல்லும்போது நான் புரிந்துகொண்டபடி எதிர்ப்புக்குக் காரணங்கள் என்னென்ன என்பதைச் சொல்லி அவற்றிற்கு ஆதாரமே இல்லையென்று சமாதானம் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஒரு சமயம் ஸ்ரீ விநாயகம் இங்கு இருந்தால் என்னைவிடத் திறமையாக இந்த விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசுவார் என்று நினைக்கிறேன். ஆனால் அதற்கு அவர் கொஞ்ச நாள் காத்திருக்க வேண்டும். மக்களுக்கு அவர்களிடத்தில் நம்பிக்கை ஏற்பட்டு"

SRI K. VINAYAKAM:—"அப்பொழுதும் நான் அந்தக் கட்சியில் சேரமாட்டேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM:—"அது எனக்கு நன்றாக தெரியும். இந்தப் பக்கத்தில் அவருக்கு இடமில்லையென்பது அவருக்கே நன்றாகத் தெரியும்." (சிரிப்பு.)

SRI K. VINAYAKAM:—"என்னை மந்திரியாக இருக்கும்படி அவருடைய குருவே கூப்பிட்டார். அப்பொழுதும் நான் போகவில்லையே."

[21st December 1954

*THE HON. SRI C. SUBRAMANIAM :—" அப்பேர்ப்பட்டவர்கள் வரமாட்டார்கள் என்று நன்ருகத் தெரிந்திருப்பதன் காரணத்தால்தான் நம்பிக்கையோடு ஆசை வார்த்தை காட்டிப் பார்க்கலாம் என்று சொல்லி யிருக்கலாம். ஆனுல் அதை நம்பி அவர் வந்திருந்தால் அவர் கதி என்ன ஆயிருக்கும் என்பது தெரிந்திருக்கும்." (சிரிப்பு.)

SRI K. VINAYAKAM :—" அப்பொழுதும் கட்சிக்கு கட்சி மாறி மந்திரியாக இருக்கமாட்டேன்."

*THE HON. SRI C. SUBRAMANIAM :—" எப்படியிருந்தாலும் இந்தக் கட்சியில் அவருக்கு இடமில்லே. அவர் எந்தக் கட்சியில் இருந் தாலும், அல்லது தனித்தேயிருந்தாலும் மக்கள் அவர் பேரில் நம்பிக்கை வைத்து அவரை ஆதரித்து அவரும் மந்திரியாகி என்னேவிடக் கெட்டிக் காரத்தனமாக அவர் பேசுவதைக் கேட்க நான் ஆவல் உள்ளவனுக இருக்கிறேன். அப்பொழுது நான் இங்கே இல்லாவிட்டாலும் கூட மேலே (விசிட்டர் காலரியில்) உட்கார்ந்துக்கொண்டு அவர் பேசுவதைக் கேட்பேன் என்று அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு.)

" அடுத்தபடியாக இன்றைக்கு இந்த மசோதாவிற்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பெல்லாம் கொள்கை அடிப்படையில் இருக்கக்கூடிய அபிப்பிராய பேதத்தின் காரணமாகத்தான் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் எல் லோரும் நன்கு அறிய வேண்டும். ஆகவேதான் நான் சபையினருக்கு எடுத்துச் சொல்ல விரும்புவது, இப்பொழுது இருக்கக்கூடிய அரசியல் அமைப்பின்கீழ் இந்தச் சட்டம் இருக்க வேண்டியது ரொம்பவும் முக்கிய மாகும். இந்த நாட்டிலே பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் பிர சாரம் செய்யப்படுவதைத் தடுக்கவேண்டியது சர்க்காரின் கடமை. ஒரு பகுதிக்கும் மற்ருெரு பகுதிக்கும் கலகம் ஏற்படாமலும், ஒரு சாரார் மற்ருெரு சாராரின்மீது துவேஷத்தை உண்டுபண்ணும் வகையில் பிரசாரம் செய்துகொண்டு வீண் துவேஷத்தில், வீண் கலவரத்தில் நாட்டு மக்களின் சக்தியெல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உபயோகப் படாமல் வீணுக அழிந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் சர்க்காரின் கடமை என்கின்ற காரணத்தினுல்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது. அதே சமயத்தில் இந்தச் சட்டம் எந்தவித மான மதப் பிரசாரங்களுக்கோ அல்லது சமுதாய சீர்திருத்தப் பிரசாரங் களுக்கோ தடையாக இருக்காது என்பதை நான் எடுத்துச்சொல்லி யிருக்கிறேன். இம்மாதிரி தடை செய்வது இந்தச் சர்க்காரின் எண்ணமும் அல்ல என்று திருப்பித் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன்.

" திராவிட நாட்டுக் கொள்கைக்கு விரோதமாக குறுக்கே நிற்பது அதற்குத் தடை விதிப்பது இந்த சட்டத்தின் நோக்கமும் அல்ல. ஆனுல் நாட்டினுள்ள ஒரு பகுதியினருக்கும் மற்ருெரு பகுதியினருக்கும் துவே ஷம் உண்டுபண்ணும் வகையில் பிரசாரம் செய்து வருவதையும் மக்க ளிடையே பகைமை உணர்ச்சியையும் உண்டுபண்ணி அவர்களே பலாத் காரத்தில் ஈடுபடும்படி செய்வதையும் சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சர்க்கார் குறுக்கிட்டு நாட்டிலே ஒரு சுமுகமான சூழ்நிலேயை, மக்கள் எல்லோரும் சகோதர மனேபாவத்தோடு வாழக்கூடியதொரு சூழ்நிலேமையை உண்டுபண்ணிக் கொடுப்பது சர்க்காரின் கடமையாக இருக்கின்ற காரணத்தால்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக் கிறது.

" ஏற்கெனவேயே ஸ்ரீ விஞயகம் அவர்கள் பொறுமையை இழந்து கனம் மந்திரி அவர்கள் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருக்கிருர்களே என்று கேட்டுவிட்டார். இப்பவும் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு தான் உட்கார்ந்துகொண்டிருக்கிருர். சென்ற இரண்டு நாள் விவாதத் தில் பல அங்கத்தினர்கள் இந்த மசோதாவிற்கு பலமான ஆட்சேபணைகளே எல்லாம் எழுப்பி விட்டார்கள். அவர்கள் இரண்டு நாட்களில் எழுப் பிய ஆட்சேபணைகளுக்கெல்லாம் நான் முப்பது நிமிஷங்களில் சமாதானம்

21st December 1954] [Sri C. Subramaniam]

சொல்லியாக வேண்டும். அதோடு இங்கு பேசிய எல்லா அங்கத்தினர்களுக்கும் நான் பதில் சொல்லியாகவேண்டும். அதோடு அவர் பேசியதையெல்லாம் நான் எப்படி பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தேனே அதைப்போலவே அவர்களும் நான் பேசுவதைக் கொஞ்சம் பொறுமையுடன் கேட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டும். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் கூட அதை சகித்துத்தான் தீரவேண்டும். அது நமது தலை விதி.''

Sri S. Ramalingam :—" கனம் மந்திரி அவர்கள் தலை விதி 11-55 a.m.
என்று சொல்லலாமா ? ''

Mr. Speaker :—" தலை விதி என்று சொன்னால் என்ன ? ''

*** The Hon. Sri C. Subramaniam** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த மசோதா ரொம்பவும் அவசியமானதாகும். இதை எதிர்த்துப் பேசுகின்ற காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு விஷயம் சொன்னார். "இந்த மசோதாவை எதற்காகக் கொண்டு வரவேண்டும், இது வரையில் எத்தனை நாடகங்கள் பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் நடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன என்று கனம் மந்திரி அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுப்பார்களா" என்றெல்லாம் பேசினார். என்னால் அவருடைய வாதத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு நாடகம் நடிக்கப்பட்டது. அதிலே பலாத்காரத்தைப் பற்றி பிரசாரம் செய்திருந்தார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால் வேறு எத்தனை நாடகங்கள் நடிக்கப்பட்டிருக்கின்றன என்று ஒருக்கால் கேட்கலாம். இங்கே நமது நாட்டின் அரசியல் அமைப்பு இருக்கிறது. அதிலே சிலவைகள் ஆட்சேபகரமானவைகள் என்று குறிப்பிடபட்டிருக்கின்றன. நாம் இப்பொழுது இருக்கக்கூடிய அரசியல் அமைப்புப்படியேதான் வேலை செய்துவருகிறோம். ஆகவே அந்த அரசியல் அமைப்பை உறுதிப்படுத்தும் வகையில் அதில் குறிப்பிட்டுள்ளபடி பலாத்காரத்தைத் தூண்டும் வகையில், ஒரு பகுதியினருக்கும், மற்றொரு பகுதியினருக்கும் துவேஷத்தை உண்டுபண்ணும் வகையில் எந்த நாடகங்களும் நடிக்கக்கூடாது என்று ஒரு மசோதா கொண்டு வந்தால் அதை எதிர்க்கின்றவர்கள் இந்த நாட்டின் அரசியல் அமைப்பையே எதிர்க்கின்றவர்கள் என்றுதான் கொள்ளவேண்டும். அந்த எதிர்ப்பை நாங்கள் பொருட்படுத்திக் கொண்டிருக்கவும் முடியாது. மேலும் தற்போது ஒரு நாடகம் நடிக்கப்பட்டது அதில் சில ஆட்சேகபரமான விஷயங்கள் இருக்கின்றன என்பதற்காக அதைத் தடுக்க ஒரு சட்டம் கொண்டு வந்தால், பின்னர் மற்றொரு நாடகம் வரும். அதில் வேறு சில ஆட்சேபகரமான விஷயங்கள் இருக்கும். உடனே அதைத் தடுக்க மற்றொரு சட்டம் கொண்டுவரும் படியாக இருக்கும். இப்படியாக திருப்பித் திருப்பிச் சட்டத்தை கொண்டு வரவேண்டியதாக இருக்குமே தவிர வேறு பயன் இருக்காது. ஆகவே தான் சென்ற காலத்தை மட்டும் கணக்கெடுக்காமல், தற்காலத்தையும், வருங்காலத்தையும் எண்ணி ஆட்சேபகரமானவைகள் என்னென்ன என்பதைக்கொடுத்துவிட்டு அந்தக் கொள்கையின்படி பிரசாரம் செய்யும் வகையில் நாடகம் நடிக்கப்பட்டால் அது தடை செய்யப்படும் என்று சொல்லும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவேதான் பலாத்காரத்தை தூண்டும் வகையில் இது வரையில் நடத்திக்காட்டப்பட்ட நாடகங்கள் எத்தனை என்று கணக்கெடுத்துப் பார்ப்பதற்கே அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பலாத்காரத்தைப்பற்றி பிரசாரம் செய்வது ஆட்சேபகரமானதா இல்லையா என்பதே பிரச்னை. பலாத்காரத்தைப்பற்றி பிரசாரம் செய்யும் நாடகமும் தடை செய்யப்பட வேண்டுமா வேண்டாமா என்பதே பிரச்னை. தடை செய்யக்கூடாது என்பவர்கள் மசோதாவை எதிர்க்கத்தான் செய்வார்கள். அரசியல் அமைப்பில் விசுவாசம் வைத்து அவற்றைத் தடுக்கத்தான் வேண்டுமென்று சொல்லுபவர்கள் இந்த மசோதாவை ஆதரிக்கத்தான் செய்வார்கள். அதை விட்டு

விட்டு எத்தனை நாடகங்கள் பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் நடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் கொடு என்று கேட்பது வாதத்திற்காக சொல்லப்பட்டாலும்கூட கொஞ்சங்கூட பொருத்த மில்லாதது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுவரை யிலும் அது மாதிரியாக எந்தவிதமான நாடகமும் நடிக்கப்படவில்லை யென்றாலும்கூட, இனிமேலும் நடிக்கப்படக்கூடாது என்பதுதான் எங்கள் கொள்கை. இது வரையிலுமே நடித்துக் காட்டப்படவில்லையென் பவர்கள் எதற்காக இதை எதிர்க்கவேண்டும் ? நடித்துக் காட்டப்பட்டால் தானே தண்டிக்கப்படுவார்கள். ஆகவே இனிமேலும் நடித்து பலாத் காரத்தைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்யக்கூடாது என்பதற் காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்படுகின்றது என்று எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"ஆகவே இந்த மசோதாவின் கொள்கை அடிப்படையில் வேற்றுமை உடையவர்கள் இதை எதிர்த்தேதான் தீருவார்கள். அவர்களுடைய எதிர்ப்பை மற்றவர்கள் சமாளித்தேதான் தீரவேண்டும். நாட்டு மக்க ளிடம் நம்பிக்கை உள்ளவர்களெல்லாம் மக்களின் ஆதரவையே நம்பி ஆட்சி புரியும் ஜனநாயகத்தை விரும்புகின்றவர்கள் எல்லாம், அந்த ஜனநாயக அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கும் அரசியல் அமைப்புக்குப் பூரண விஸ்வாஸத்துடன் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்பு கின்றவர்களெல்லாம் இந்த மசோதாவை ஆதரித்தே ஆகவேண்டும். அதே சமயத்தில் எந்த அடிப்படைக் கொள்கையை வைத்துக்கொண்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த அடிப்படைக் கொள்கைக்கே விரோதமான, எதிரிடையான கொள்கையை உடையவர் களின் எதிர்ப்பையும் உடைத்தெறிந்து இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri S. DAIVASIGAMONEY :—"கனம் சபாநாயகர் அவர்களே, இதுவரையில் கனம் மந்திரி அவர்கள் இந்த மசோதாவின் கருத்து பலாத்காரத்திற்குத் தடையாக இருக்கிறதென்று சொன்னார். இந்த மசோதா இல்லாமலேயே பலாத்காரத்தை தடுப்பதற்கான சட்டங் கள் இப்பொழுது இல்லையா என்று அவரைக் கேட்கிறேன்."

***The Hon. Sri C. SUBRAMANIAM** :—"இந்த சட்டத்தை பிரேரிக்கும்போதே அதைப்பற்றி நான் விளக்கம் கொடுத்திருக்கிறேன். அதை அவர் ஒப்புக்கொள்ளவில்லையென்றால் நான் திருப்பிச் சொல்ல வேண்டியதில்லை."

Sri S. SWAYAMPRAKASAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, இதுவரையில் கனம் மந்திரி அவர்கள் கூறியவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தேன். நான் எந்தக் கட்சிக்குத் தலைமை வகிக் கிறேனோ அந்தக் கட்சியின் சார்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்கு எல் லாம் கனம் மந்திரி அவர்கள் சரியான பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் சொன்னது போல வடநாடு, தென்னாடு, திராவிடர், திராவிடரல்லா தார், போன்ற பல கொள்கை அடிப்படையில் இந்த மசோதாவை நாங்கள் எதிர்க்கவில்லை. அதுவும் குறிப்பாக நான் சட்டத்தைப் பற்றியே பேசினேன். இந்தச் சட்டத்தை நாம் ஒப்புக்கொண்டால் இன்றைய சமுதாய வளர்ச்சியையே அது பாதிக்கும் என்று குறிப்பிட்டேன். சமு தாய வளர்ச்சிக்காக, சமுதாய முன்னேற்றத்திற்காக இனிமேல் எந்த நாடகமாவது நடித்துக் காட்டப்பட்டால் அந்த நாடகமே தடை செய்யப்பட்டு விடக்கூடிய ஆபத்து இதனால் இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அப்படிச் செய்வது தர்மமா, நியாயமா என்று கேட்டேன். அதுவும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நாடகத்தைத் தடுத்துவிடலாம். குறிப்பாக இந்த நாடகத் தினால் அமைதிக்குப் பங்கம் வரலாம் என்று சொல்லி ஒரு ஹெட் கான்ஸ்டேபிள்கூட அந்த நாடகத்தை நடக்கவிடாமல் தடுத்துவிடக்கூடிய அதிகாரத்தைக் கொடுக்கிறோம், இது சரியல்ல என்று குறிப்பிட்டேன்.

21st December 1954] [Sri S. Swayamprakasam]

நான் எழுப்பியது இரண்டே இரண்டு பிரச்னைகள்தான். இந்த இரண்டுக்கும் கனம் மந்திரி அவர்கள் யாதொரு பதிலும் சொல்லவில்லை. அதைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri M. KALYANASUNDARAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் அவருக்கே உரித்தான நிதான புத்தியோடு மிகச் சாதுர்யமாகப் பேசிய விஷயங்களை, அவர் யோசனைப்படியே ஆத்திரப் படாமல் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் தான் சொல்லும் ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு உள்நோக்கம் வைத்துப் பேசுகின்றாரே தவிர இந்த மசோதாவை எதற்காகக் கொண்டுவர வேண்டுமென்பதற்கு அவரால் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. ஆகவே மற்றக் கட்சிக்காரர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளுக்கு நேர்முகமாக சமாதானம் சொல்ல முடியாத காரணத்தால் வேறு வேறு உபாயங்களைக் கையாண்டு வேண்டாத பிரச்னைகளையெல்லாம் எழுப்பியிருக்கிறார். அத்தோடு எதிர்க்கட்சி அங்கத்தினர்களிடையே பிளவை உண்டுபண்ணும் வகையிலும் அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய திராவிட பார்லிமெண்டரி கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பிளவை உண்டாக்கும் முறையில் பேசியிருக்கிறார். அது அவசியமில்லாத முயற்சி. எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களுக்கும் அவர் சாமர்த்தியம் நன்றாகத் தெரியும். குறிப்பாக இந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும், கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும்சரி, திராவிடப் பார்லிமெண்டரிக் கட்சியிலிருந்தும் சரி, பேசியவர்கள் இந்த மசோதாவிலுள்ள அடிப்படையான ஆட்சேபகரமான விஷயங்களைப்பற்றித்தான் பேசினார்கள். அதை மறைத்துவிட்டு கனம் மந்திரி அவர்கள் அக்கட்சிகளுக்கிடையே பிளவை உண்டாக்கும் முறையில் பேசி விட்டதினால் மாத்திரம் அவர்களது உள் நோக்கம் வெற்றிபெற முடியாது என்பதை கனம் மந்திரி அவர்கள் உணரவேண்டும்.

"கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி அனாவசியமான சில விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். இப்படி இவர் பேசுவதன் மூலமாக அந்த ஸ்தாபனத்தையே மாற்றுவது சுலபமல்ல. கம்யூனிஸ்ட் கட்சி இந்த தேசத்தில் மட்டுமல்ல, வேறு பல பல தேசங்களிலும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இவர்தான் தெரிந்துகொள்ளவேண்டுமென்பது அல்ல. ஆனால் ஒரே ஒரு முக்கியமான உண்மையையாவது கனம் நிதி மந்திரி அவர்கள் ஒப்புக்கொண்டாரே என்று நான் சந்தோஷப்படுகிறேன். அதாவது தற்பொழுது கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தை விரும்பவில்லை பலாத்காரத்தைத் தூண்டும் பிரசாரங்களைச் செய்யவில்லை என்பதையாவது ஒப்புக்கொண்டார்களே என்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன்."

Sri K. P. KUTTIKRISHNAN NAIR :—"May I know whether a commentary on the speech of the Hon. Minister can be allowed ?"

Mr. SPEAKER ;—"The hon. Member may refer to Rule 74 of the Assembly Rules."

Sri M. KALYANASUNDARAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, எனக்குப் பதில் கூறுவதற்கு உரிமை உண்டு. ஆனால் மந்திரி அவர்கள் எடுத்துக்கொண்ட முக்கால் மணி நேரம் நான் எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டொரு நிமிஷத்தில் முடித்துக்கொண்டுவிடுவேன், யாரும் குறுக்கிடாவிட்டால். இடையூறு செய்தால் அதனால் எவ்வளவு நிமிஷம் நேரமாகின்றதோ அவ்வளவு நிமிஷம் அதிகமாகப் பேச என்னைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்களின் பேச்சிலிருந்து அவர் கொஞ்சம் தூரதிருஷ்டியோடு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரியலாம். நேற்று தோழர் ராமமூர்த்தி அவர்கள் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய எந்த விதமான நாடகங்களும் நடித்து

காட்டப்படாமலிருக்கும்போது எதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார். பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய நாடகங்கள் எதுவும் நடக்கவில்லை என்பதை கனம் நிதி மந்திரி அவர்களே இன்றைக்குப் பதில் சொல்லும்போது ஒப்புக்கொண்டுவிட்டார்கள். இருந்தாலும்கூட இன்றைக்கு இருக்கும் அரசியல் அமைப்புப் பிரகாரம் வரும் காலத்திலும் கூட யாரும் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய நாடகங்களை நடிக்கக்கூடாது. என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டதாகக் கூறினார்கள். வருங்காலத்தில் ஒருக்கால் நிலைமை என்ன ஆகுமென்று சொல்லமுடியாது, என்ற அரசியல் காரணத்திற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்றும் சொன்னார்."

* **The Hon. Sri C. SUBRAMANIAM** :—"கனம் ராமமூர்த்தி சொன்னவற்றை நான் ஒப்புக்கொண்டதாக ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கூறினார். அவர்களுடைய கற்பனையில் நான் ஒப்புக்கொண்டதாக வேண்டுமானால் சொல்லலாமே தவிர நான் ஸ்ரீ ராமமூர்த்தி சொல்லியது எதையும் ஒப்புக்கொள்ளவில்லை."

Mr. SPEAKER :—"**Let the hon. Member be brief in his remarks.**"

Sri M. KALYANASUNDARAM :—"இவ்வளவு நேரம் நிதானமாக பேசிய கனம் நிதி மந்திரி அவர்கள் இப்பொழுது என் ஆத்திரப்படவேண்டுமென்று கேட்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி பலாத்கார பிரசாரம் பண்ணுவதற்கு உரிமை வேண்டுமென்று கேட்கிறது என்று சொல்லுகிறார். அப்படி கேட்பது எங்கள் கொள்கையாக இருந்தால், மந்திரிக்கு அதிகாரம் இருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் வேறு எந்தக்கட்சியாக
12-05 p.m. இருந்தாலும் தடைசெய்வதற்கு. இன்னும் ஆந்திர மாகாணம் பிரிவதற்கு முன் கம்யூனிஸ்டுகள் சட்டசபையைப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரத்திற்கு வரவேண்டுமென்று பார்த்தார்கள் என்று திருத்திக்கூறுவது அர்த்தமில்லாத ஒரு விஷயமாகும். கனம் சுப்ரமணியம் அவாகள் மெஜாரிடி பலத்தைக்கொண்டு எந்தவிதமான சட்டத்தையும் கொண்டுவந்துவிடலாம் அதற்கு இந்தப் பக்கத்திலுள்ளவர்கள் பொறுப்பாக இருப்பதற்கில்லை என்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்."

Sri T. SHANMUGAM :—"கனம் மந்திரி அவர்கள் பேசும்போது சொன்னார்கள் திராவிட பார்லிமெண்டெரி கட்சி கொள்கை . . ."

Mr. SPEAKER :—"கனம் அங்கத்தினர் அவருடைய திருத்தம் வரும்போது பேசலாம்."

"I cannot allow every hon. Member to speak now. I wish to know from the hon. the Deputy Leader of the Opposition Sri M. Kalyanasundaram whether he is withdrawing his amendment."

Sri M. KALYANASUNDARAM :—"I am sorry I have to press it."

Mr. SPEAKER :—"Then I shall put it to vote. The question is—

'*After* the words "be taken into consideration", *insert* the words "this day one year".'"

The amendment was put and declared lost.

21st December 1954]

A poll was demanded and the House divided as follows :—

Ayes—48.

Sri D. Dasarathan.
,, S. Swayamprakasam.
,, S. C. C. Anthony Pillai.
,, K. Vinayakam.
,, A. Ratnam
,, V. Gopala Gounder.
,, S. Deivasigamoney.
,, N. Rathina Gounder.
,, M. P. Subramaniam.
,, P. Rangasami Reddiar.
,, P. Rathnaswami Pillai.
,, T. Shanmugam.
,, A. Govindasamy Nayagar.
,, P. Kandaswami Gounder.
,, S. P. Thangavelu.
,, A. Veloo.
,, K. S. Lakshmipathi Naicker.
,, R. Rangaswami Gounder.
,, M. Narayana Kurup.
,, K. T. Sreedharan.
,, C. Kunhirama Kurup.
,, M. Palaniyandi.
,, M. Narayanan Nambiar.
,, N. Paramasiva Udayar.
Sri P. Kunhirama Kidav.
,, O. Koran.
,, P. Ramamurthi.
,, M. Kalyanasundaram.
,, K. P. Gopalan.
,, C. Kandasamy.
,, P. Jeevanandam.
,, K. T. Raju.
,, S. Ramalingam.
,, S. Vadivelu.
,, K. C. Gopalan Unni.
" V. Madanagopal.
,, N. Sivaraj.
,, A. K. Subbiah.
,, K. V. Ramasamy.
,, T. S. Ardhanari.
,, P. Venkatesha Sholagar.
,, N. K. Palanisami.
,, K. Madhavan Nambiar.
,, E. T. Kunhan.
,, R. Krishnan.
,, P. Chockalingam.
" M. Manickasundaram.
,, S. Pakkiriswami Pillay.

Noes—107.

The Hon. Sri K. Kamaraj Nadar.
,, C. Subramaniam.
,, A. B. Shetty.
Sri K. Rajaram.
,, C. Rajam Ramaswamy.
,, B. Bhakthavatsalu Naidu.
,, P. G. Karuthiruman.
,, V. C. Palanisami Gounder.
,, B. K. Nallasamy.
,, N. Mahalingam.
,, P. K. Thirumurthi.
,, R. Kuppuswami.
,, S. R. Arumugam.
,, P. S. Rangaswami Naidu.
,, P. Varadarajulu Naidu.
,, S. Lakshmana Gounder.
,, P. G. Manickam.
The Hon. Sri Shanmuga Rajeswara Sethupathi Raja.
Sri N. Ramakrishana Ayyar.
,, K. Venkataswami Naidu.
,, U. Krishna Rao.
,, A. M. Sambandam.
,, M. R. Ramachandran.
,, O. Venkatasubba Reddi.
,, T. P. Elumalai.
,, V. K. Ramaswamy Mudaliar.
,, R. A. Nataraja Mudaliar.
,, S. Panchaksharam.
,, H. M. Jagannatham.
,, A. K. Masilamani Chettiar.
,, K. G. Munuswamy Gounder.
,, R. Thangavelu.
,, A. Ramachandra Reddiar.
,, K. S. Ardhanareswara Gounder.
,, M. P. Periaswami.
,, A. Sambasivam.
Sri P. M. Munuswami Gounder.
,, O. A. Nanjappa.
The Hon. Sri S. S. Ramasamy Padayachi.
,, B. Parameswaran.
Sri T. K. Rama.
,, M. S. Munisamy Pillay.
,, V. S. Chinnasami Naidu.
,, A. Iyanar.
,, V. S. Sivaprakasam.
,, V. Muthu.
,, S. Thinakaraswami Thever. 12-10 p.m.
,, V. Chinnayya.
,, T. V. Sannasi.
,, Antony Peter.
,, N. Rajagopal.
,, R. M. Palaniappan.
,, T. R. Varadan.
,, M. D. Thiagaraja Pillai.
,, S. Arumugam Pillai.
,, O. Chengam Pillai.
,, G. Narayanaswami Naidu.
,, M. Marimuthu.
,, M. C. Muthukumaraswami.
,, L. Anandan.
,, V. Krishnaswamy Padayachy.
,, G. Vagheesam Pillai.
,, A. S. Sahajananda.
,, K. Parthasarathy.
,, M. Jagannathan.
,, P. S. Krishnasamy Ayyangar.
,, G. Govindan.
,, AR. A. RM. Chokkalingam Chettiar.
,, S. Jayarama Reddiar.
,, M. Kandasamy Padayachi.
,, R. Krishnaswami Naidu.
,, P. Chellathurai.

Noes—107-cont.

Sri K. Shanmugam.
,, R. V. Swaminathan.
,, M. G. Shenker.
,, P. Urkavalan.
,, T. Ganayathi.
,, A. Vaikuntam.
,, R. S. Arumugham.
,, V. Arumugham.
,, P. B. K. Raja Chidambaram.
,, J. L. P. Roche Victoria.
,, P. Selvaraj.
,, K. Ramaswami Doss.
,, S. N. Somayajulu.
,, I. K. Subramania Pillai.
,, K. Ishwara.
,, K. P. Kuttikrishnan Nair.
,, K. H. Bomman.
,, V. K. Kannan.
Sri Samia Koorayar.
,, W. J. Fernandez.
,, N. Gopala Menon.
,, V. R. Nagarajan.
,, E. K. Sankara Varma Raja.
,, K. Arangannthan.
,, M. Venugopala Gounder.
,, A. Appu.
,, A. Muthuswami.
,, M. Kattimuthu.
,, T. Manavalan.
,, K. Kunhi Mohamed Shafee.
,, T. D. Muthukumaraswamp Naidu.
,, K. R. Viswanathan.
,, V. Balakrishnan.
,, M. Dharmalingam.
,, V. Govindaswamy Naidu.

Neutral—Nil.

12-20 p.m. Ayes—48 ; Noes—107 ; Neutral—*Nil.*

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

'*After* the words " be taken into consideration " *insert* the words " this day three months ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'*For* the words " be taken into consideration ", *substitute* the words " be dropped ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'*Add* at the end of the motion the words " and be dropped for the present ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" Now I will put the main motion to the vote of the House. The question is—

'That the Madras Dramatic Performances Bill, 1954 (L.A. Bill No. 37 of 1954) is amended by the Select Committee be taken into consideration.' "

The motion was put and carried.

MR. SPEAKER :—" Now we will take up clause by clause consideration of the Bill. Now we will take up clause 3 first. Or if it is the desire of the House to take up clause 2 we will take it up first. Let us take clause 2."

SRI K. P. KUTTIKRISHNAN NAIR :—" May I request you, Sir, to give a clarification on Rule 74 referred to by you. According to Rule 74 the mover of a substantive motion and the mover

of an adjournment motion shall have the right of reply. The explanation to that rule under item (2) says : 'an amendment to a resolution'. That is not a substantive motion and the mover of the amendment has no right of reply."

MR. SPEAKER :—" This is not an amendment to a resolution. This is a main motion moved by the Hon. Minister. It is a substantive motion.

" Now let us take clause 2."

Clause 2.

MR. SPEAKER :—" The question is—

'That clause 2 do stand part of the Bill.' "

SRI R. KRISHNAN :—" Mr. Speaker, Sir, I move—

'That item (1) be deleted.' "

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, Sir, I move—

'That in item (1) for the word " likely " in line 2, the word " intended ", be substituted.' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

SRI M. KALYANASUNDARAM :—" Mr. Speaker, Sir, I move—

'That items (1) (i), (1) (ii) (1) (iii) *and* (1) (iv) *be deleted.'* "

SRI. S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, I move—

'That in item (1) (i) the words " or its authority in any area " be omitted.' "

SRI K. T. SREEDHARAN :—" I second the amendment, Sir."

SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, I move—

'That in item (1) (i) after the word " State ", the words " or part " be inserted.' "

SRI K. T. SREEDHARAN :—" I second the amendment, Sir."

SRI V. GOPALA GOUNDER :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item* (1) (ii) *the words* " *or any offence involving violence* " *be omitted.*' "

SRI M. P. SUBRAMANYAM :—" I second the amendment, Sir."

SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item* (1) (ii) *for the words* " *an offence* ", *the words* " *any cognizable offence* " *be substituted.*' "

SRI M. P. SUBRAMANYAM :—" I second the amendment, Sir."

SRI C. KANDASAMY :—" Mr. Speaker, Sir, I move that—

(1) '*In item* (1) (iv) *in line* 1, *for the words* " *any section of the citizens* ", *the words* " *any community or nationality* " *be substituted.*'

(2) '*In item* (1) (iv) *in line* 2, *for the words* " *any other section of the citizens* ", *the words* " *any other community or nationality* ", *be substituted.*' "

SRI A. RATNAM :—" I second the amendments, Sir."

SRI S. DAIVASIGAMONEY :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item* (1) (iv) *for the words* " *citizens of India* " *occurring in line* 1, *the words* " *citizens of the State of Madras* ", *be substituted.*' "

SRI A. RATNAM :—" I second the amendment, Sir."

SRI S. DAIVASIGAMONEY :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item* (1) (iv) omit *the words* " *of the citizens of India* " *occurring in the end.*' "

SRI A. RATNAM :—" I second the amendment, Sir."

SRI A. RATNAM :—" Mr. Speaker, Sir, I move—

'*That item* (1) (v) *be omitted.*'"

SRI S. DAIVASIGAMONEY :—" I second the amendment, Sir."

SRI P. S. KRISHNASAMY AYYANGAR :—" Mr. Speaker, Sir, I move—

'*That after the expression* " *religious beliefs* " *in item* (v) *the words* " *or religious rites* " *be inserted.*' "

The amendment was duly seconded.

21st December 1954]

SRI V. MUTHU :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item (1) (v) the words " is deliberately intended to " be omitted.*' "

The amendment was duly seconded.

SRI S. RAMALINGAM :—" Mr. Speaker, Sir, I move—

'*That for item (1) (v) the following be substituted :—*

" (v) *slander intentionally and malicious the rcversed religious characters whom the people held as God.*" ' "

The amendment was duly seconded.

SRI V. GOPALA GOUNDER :—" Mr. Speaker, Sir, I move—

'*That in item (1) (v) after the word " deliberately ", the words " and maliciously " be inserted.*' "

SRI M. P. SUBRAMANYAM :—" I second the amendment, Sir."

SRI S. DAIVASIGAMONEY :—" Mr. Speaker, Sir, I move—

' That in item (1) (v) for the words " citizens of India ", the words " citizens of the State of Madras " be substituted.' "

SRI A. RATNAM :—" I second the amendment, Sir."

SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, Sir, I move—

'*That for item (1) the following be substituted :—*

" (1) '*objectionable performance*' *means any play, pantomime or other drama—*

(i) *which is grossly indecent or obscene or intended for blackmail and declared by order to be an objectionable performance under section 4; or*

(ii) *which is likely to promote feelings of communal hatred among the people of India.*" ' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

SRI V. MUTHU :—" Mr. Speaker, Sir, I move—

'*That Explanation I under item (1) be omitted.*' "

The amendment was duly seconded.

SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, I move—

' *That in item (1), Explanation I, the words " or because such performance expresses disapproval of or fair comment on, any existing custom or usage in society " be added at the end.*' "

SRI K. T. SREEDHARAN :—" I second the amendment, Sir."

SRI S. DAIVASIGAMONEY :—" Mr. Speaker, Sir, I move—

' *That in Explanation I under item (1) the words " or so made with a view to diffuse knowledge and enlightenment to the public " be added at the end.*' "

SRI A. RATNAM :—" I second the amendment, Sir."

SRI V. GOPALA GOUNDER :—" Mr. Speaker, Sir, I move—

' *that after the existing Explanation II under item (1) the following new Explanation be inserted :—*

" *Explanation III.—A performance shall not be deemed to be objectionable merely because words are uttered or signs or visible representations are made in the course thereof either expressing disapprobation or criticism of any superstitious beliefs of any class of the citizens of India or tending towards the promotion of social justice or reporm* ".' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, Sir, I move—

' *That at the end of item (2) the words " by tickets " be added.*' "

12-30 p.m. SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" The main motion as well as the amendments are before the House for discussion."

SRI P. RAMAMURTHI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஷரத்து ஆட்சேபகரமான நாடகம் என்ன என்பதைக் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது. ஆகவே இதில் முக்கியமான அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. இதைப்பற்றி பேசக்கூடிய காலத்தில் மந்திரியார் பலாத்காரமா இல்லையா என்ற கேள்வியை எழுப்பி கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கும் வகையில் பேசியிருக்கிறார். இந்தப் பிரச்னையை முழுக்க முழுக்க அலசிப் பார்த்தால் புரியும். முக்கியமாக இந்த ஷரத்து என்னவென்று ஆராயவேண்டும். **' In this Act, unless the context otherwise requires (1) " objectionable performance " which is likely to (1) incite any person to resort to violence or sabotage for the purpose of overthrowing or undermining the Government. '**

21st December 1954] [Sri P. Ramamurthi]

அதாவது ஒரு நாடகம் யாரையாவது பலாத்காரத்தில் தூண்டக்கூடியதாய் இருக்கலாம். அப்படிப்பட்ட நாடகத்தை தடைசெய்யவேண்டும் என்றிருக்கிறது. 1789-ம் ஆண்டில் நடந்த பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றியோ அல்லது சோவியத் புரட்சியைப் பற்றியோ நாடகம் நடக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே அன்றையதினம் ஏற்பட்ட புரட்சிகளை அப்படியே நாடகத்தில் தத்ரூபமாகக்காட்சிகளை அமைத்து சித்தரித்துக் காட்டினால் கம்யூனிஸ்டுகள் ஜனங்களிடையே பலாத்காரத்தைத் தூண்டுகிறார்கள் என்று அதிகாரிகள் கூறி நாடகத்தைத் தடைசெய்து விடுவார்கள். **'It may incite any person'** என்று இன்றைக்கு அதிகாரிகள் கருதினால் அந்த நாடகத்தைத் தடைசெய்துவிடலாம். ஆகவே குறிப்பிட்ட அதிகாரியின் உள்ளத்திலே அந்த நாடகம் பலாத்காரத்தைத்தூண்டிவிடுகிறது என்று கருதினால் அந்த நாடகத்தை நிச்சயம் தடை செய்வார்கள். அதாவது அதைத் தடை செய்வதும், செய்யாததும் அந்த அதிகாரியினுடைய தன்னுணர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. அரசாங்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற பலாத்கார எண்ணத்தை ஜனங்களிடத்தில் புகுத்தக்கூடியது என்று சொல்லி அந்த நாடகத்தை தடை செய்யக்கூடிய உரிமையைப் பெற்றிருக்கிறது. இன்று ஜனநாயகம் பற்றி பிரமாதமாக நிதி மந்திரி அவர்கள் பேசினார். இந்த நாட்டில் எப்படிப்பட்ட ஜனநாயகம் நிலவி வருகிறது வோட்டு வாங்கிய பிறகு எதையும் செய்ய முடியும் என்று பிரமாதமாக பேசுகிறார்கள். ஏதோ செய்துவிட்டதாகவும் உரிமை கொண்டாடுகிறார்கள். ஆனால் நாட்டில் என்ன நடக்கிறது? நிலச்சுவான்தார்கள் விவசாயிகளுக்கு ஒரு உதவியும் அளிக்காமல் அவர்களை துன்புறுத்துகிறார்கள். ஆனால் உங்களுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கிறோமென்று பேச்சளவில்தான் மந்திரிகள் சொல்லுகிறார்கள். தவிர நடைமுறையில் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. விவசாயிகள் மேலும் மேலும் கடன்பட்டு அதைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கும்போது பெருநிலச்சுவாந்தார்கள் அந்தக் கடன்களை திருப்பிக் கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். அதேசமயத்தில் இந்த நாட்டில் ஜனநாயகம் உச்சாணியில் இருக்கிறதென்று இந்தச் சட்டசபையில் பேசப்படுகிறது. இந்தப் பிரசாரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு உரிமை இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தச் சட்டசபையில் எந்த விஷயத்தைப் பற்றி மந்திரி பேசினாலும் அது சபையில் நடக்கும் விவாதத்தைப்பற்றியதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும்சரி அவை பத்திரிகையிலே பத்தி பத்தியாக வரும். ஆனால் எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசினால் ஒரு பத்திகூட வராது. இதற்குப் பெயர் ஜனநாயகம். ஆகவே பிரஸ் கமிஷன் ரிப்போர்ட் சொல்லுகிறபடி மூன்று லக்ஷ ரூபாய் இருந்தால்தான் ஒரு பத்திரிகை நடத்தமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரி மூன்று லட்சம் வைத்திருப்பவர்களுக்குத்தான் இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கிறது. அதுபோகட்டும் பலாத்காரம் என்று குறிப்பிட்டு அதிகாரிகள் அந்த நாடகத்தின்மீது இந்தவிதமான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டால், அந்த நாடகத்தைத் தடுத்துவிடமுடியும். ஒரு நாடகம் நேரடியாக பலாத்காரத்தை தூண்டிவிடுவதாக இல்லாமல் இருந்தபோதிலும் கூட பலாத்காரத்தை ஏற்படுத்தக்கூடும் என்று நினைத்தால் அதிகாரிகள் தடை செய்வதற்கு சாத்தியம் இருக்கிறது. இந்த செக்ஷனில் மேலும் என்ன சொல்லப்படுகிறதென்றால் **'is deliberately intended to outrage the religious feelings of any class of the citizens of India by insulting or by blaspheming or profaning the religion or the religious beliefs of that class** என்று **Indian Penal Code Section 295(A)** இருக்கக்கூடிய வாசகத்தை அப்படியே போட்டுவிடவில்லை. அதோடு கொஞ்சம் சேர்த்திருக்கிறார்கள். **'deliberately intended . . . that class'** அவ்வாறு சேர்க்கப்பட்ட பிறகு தான் **is deliberately intended** இந்த ஷரத்தில் போடப்பட்டது. **Blaspheming or profaning** என்று இந்த ஷரத்தில் கூறப்பட்டிருக்கிறது. **Dictionary** ல் இவைகளுக்கு என்ன அர்த்தம் என்று நான் பார்த்தேன். **Blaspheming** என்பதற்கும் **profaning** என்று அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டதாக இருக்கிறதே தவிர இதில் வேறுவிதமான அர்த்தம் கொள்வதற்கில்லை.

[Sri P. Ramamurthi] [21st December 1954

" இன்றைக்கு மத நம்பிக்கை நாடகத்தின் மூலமாக எங்கே குறைந்து விடுமோ என்று நினைத்து அம்மாதிரி நாடகங்களை தடுப்பதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டதென்று கனம் நிதி மந்திரி அவர்கள் பேசியதிலிருந்து ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய முற்போக்குக் கருத்துக்களை சித்தரிக்கும்படியான நாடகத்தை சமுதாய வளர்ச்சி ஏற்படுவதற்காக நடத்தப்படும் நாடகத்தை இந்த மசோதா நிறைவேற்றினால் அவைகளைத் தடுத்தாலும் தடுத்துவிடலாம். பழைய காலத்தில் இருக்கக்கூடிய சமுதாய அமைப்பில் நெருப்பை கடவுளாக மதித்து வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் மனித சமுதாய வளர்ச்சியின் காரணமாக ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் அக்கினி என்று சொல்வதில்லை நெருப்பாக கொள்வதில்லை. ஆனால் இந்த ஷரத்தில் **Blaspheming or profaning** என்ற வார்த்தைகளை இந்த ஷரத்தில் சேர்த்துக்கொண்டால் இம்மாதிரியான முற்போக்கு நாடகங்களை தடை செய்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட ஒரு ஷரத்து இந்த மசோதாவில் இருந்தால் மக்களிடையே நல்ல கருத்துக்களைப் புகட்டவே முடியாது. இம்மாதிரி நாடகங்களை தடை செய்வதற்கு யாரிடத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா கலெக்டரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இம்மாதிரி ஜில்லா அதிகாரிகள் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் நட்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் இந்த ஜில்லாவிலுள்ள நிலப்பிரபுவிடம் நட்பு வைத்திருக்கலாம். அங்கு விவசாயிகளை பாதிக்கக்கூடிய ஒரு முற்போக்கான விஷயம் அடங்கிய ஒரு நாடகம் நடப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த நிலப்பிரபு சாதாரணமாக அந்த நாடகம் நிலச்சுவாந்தார்களைத் தாக்குவதாக இருக்கும் என்று கலெக்டரிடம் சொல்லி தடைசெய்துவிடுவார்கள். இம்மாதிரி பெரிய பெரிய நிலச்சுவாந்தார்கள் கலெக்டரிடம் நட்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இப்படிப்பட்ட அதிகாரியிடம் நாடகங்களைத் தடைசெய்வதற்கான அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் அது ஒரு மோசமான நிலைமையை ஏற்படுத்திவிடும். இதில் மிகப் பெரிய ஆபத்திருக்கிறது. இந்த ஷரத்தில் சொல்லக்கூடிய வார்த்தைகள் அதாவது **likely to, intended to** என்ற வார்த்தைகள் மிகவும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதாய் இருக்கிறது. ஏனென்றால் அதிகாரிகளின் மனதிலே ஒரு நாடகம் மக்களின் ஒரு சாராரை பாதிக்கக்கூடும் என்று தவறாகக் கருதினாலும்கூட அவர் அந்த நாடகத்தை தடை செய்ய அதிகாரம் இருக்கிறது. மேலும் '**which is deliberately intended to outrage religious feelings**' என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன ? இதை எவ்விதமாகவேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ள லாம். ஆதலால் நாங்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, this is a most important clause of this Bill and I shall deal with my amendments one by one. The object of my first amendment is to delete the words ' or its authority in any area ' in item (1) (i) of this clause. My second amendment runs as follows :—

> 'In item (1) (i) *after* the word "State", *insert* the words " or part. ' "

12-40 p.m. These two amendments are complementary to each other. Sub-clause (i) as amended would read as follows :—

> 'incite any person to resort to violence or sabotage for the purpose of overthrowing or undermining the Government established by law in India or in any State or part.'

I submit that that will be sufficient because any such attempt ' to incite any person to resort to violence or sabotage ' will constitute a very serious offence but if we add the words ' authority in any

area ', it becomes very wide and very vague. What is the authority in any particular area? We know that there are special provisions in the Indian Penal Code. I believe it is section 188 which makes any attempt to prevent or obstruct any public servant in the discharge of his duties an offence. Therefore, if this sub-clause is intended to protect him in the discharge of his duties, that section would suffice. As things stand now, the ' authority ' may mean anything. It may mean the village official. Therefore, my submission is that any such obstruction must be with the intention of undermining the State or threatening its existence. If it is retained as it is, it will give too wide an interpretation.

" Then, Sir, I come to my third amendment which says—

" In item (1) (ii), *for* the words " an offence " *substitute* the words " any congnizable offence " . '

I do not know whether all offences including the offence which involves violence are cognizable. Assault may be an offence which involves violence. Therefore, I want to restrict the scope of sub-clause (ii) to very serious offences involving violence and that is why I have added the word ' cognizable ' which, I think, is a formal amendment in keeping with the spirit of the clause.

" Then, I come to my fourth amendment which says—

' In item (1), Explanation I, *add* at the end the words " or because such performance expresses disapproval of or fair comment on any existing custom or usage in society ".'

This would, in effect, give the same kind of protection that is given to political criticism, to matters relating to social criticism also. The amendment moved by Messrs. Gopala Gounder and M. P. Subramaniam relates to the same object.

" Yesterday I stated that sub-clause (v) is a very wide provision which, if it stands as it is to-day, would create a great deal of confusion because we have not till now begun to make ' faith or belief ' a punishable offence. Even the Hon. Minister in his reply has stated that there are individuals or people in India to-day who believe in the cult of violence. By this, I do not mean to suggest that the Government should ban such people or such organization. My argument is that one may believe in the cult of violence but it is not punishable so long as it does not involve any overt act which affects the society, peace or order or the existence of the State. Much more so in the case of ' religious belief ' which is vague. One may have his own religious belief or feeling or faith but so long as it does not affect society and so long as such belief does not incite a section of the people to resort to acts of violence or other acts which may affect the State, it should not be made an offence. Therefore, my submission is that either ' the faith by itself or the feeling by itself ' should not be made an offence. Moreover, the word 'class' is used in this sub-clause. We know that we have different systems of religious belief—known systems. I do not

want to narrate them now. What is the definition of the word 'class'? Will it include a certain number of persons? These are things which are left vague. If at all the Government want to retain such a clause, my submission is that the Government should intervene only when feelings of a section of the people are wounded to such an extent as to make that section of the people indulge in an overt act prejudicial to the peaceful existence of society or the State. As it is, the mere fact of 'wounding' which we cannot measure, is a very vague term.

"Then, Sir, it is well-known in the law of libel that criticism or fair comment is not punishable. That principle has been accepted so far as the Explanation goes because it says that 'to get redress by peaceful means—political or social justice—' is not an offence. Now, I would ask, why should not the Government extend the same concession to matters of social reform or comments on the existing custom or usage which is not liked by anybody? Why should there not be any peaceful persuasion of people by organizing dramatic performances and preparing them towards a more progressive system? Therefore, it is highly essential that that concession should be extended to social reforms also. Otherwise, we would not have been what we are to-day. We have known many doughty champions of social reforms who have popularized art by staging dramas and other performances. It is to cure that defect that my amendment is intended and it serves the purpose. I believe the Government will not have any objection to accept this amendment because it is a very reasonable amendment restricting only the abuse of power conferred on Collectors. Sir, as I said before, in view of the fact that the provisions of this Bill are to be interpreted by District Collectors and not by religious pandits, we must see that the scope of the Bill is restricted as far as possible. If an Explanation is given that 'fair comment' is not an offence, when the High Court Judge or the officer considers the question, his attention will be pointedly drawn towards it. He will consider that question in detail and he will be able to come to a judicial decision."

12-50 p.m. * SRI N. GOPALA MENON :—" Mr. Speaker, Sir, it was rather amazing to me to listen to the hon. Leader of the Opposition objecting to this clause and to the Bill as a whole. Sir, a Bill or a legislation for the purpose of restricting dramatic performances has been in vogue from the Roman period and every civilized country in the modern world has got a legislation of this kind. During the Roman period, it would be a surprise for us to know that a husband could seek a divorce from his wife if she attended a theatre without his permission. In the early days, it was the church that was controlling all the theatres and dramatic performances and if any person participated in a dramatic performance which was contrary to orthodox performances, he would not be given sacrament nor even a decent Christian burial. The Christian faith was so harsh on such performances and the persons who performed

21st December 1954] [Sri N. Gopala Menon]

them. Later, Sir, we find in England the Government stepping in and legislating not only for the persons who actually participate in these plays but also for theatres where these performances have to be played. There have been legislations throughout the world in every country regarding dramatic performances.

" The object of this legislation is that the drama is used as a vehicle for the purpose of propagating religious and political views and if Government want to safeguard society against going into wrong paths, they must necessarily step in and legislate to prohibit such objectionable performances being staged. It is, therefore, necessary to see that objectionable performances are not performed. It is somewhat amazing to me to listen to the long speeches of several Members saying that the Bill encroaches upon the rights of the people. In fact, my own view is that the clauses in the Bill are not sufficiently stringent as they ought to be. It is the duty of any Government which want to have an orderly evolution of society to see that objectionable performances which are against the sentiments of the religious faiths of the people ought to be banned. There should be provision for the purpose of prohibiting performances which are calculated to overthrow the foundations of society. If Government are not providing for that, there will be many performances staged with a view to overthrow or subvert the Government. If dramatic performances are not properly controlled, no man, no politician, no religious head will be free in any society and any person may caricature another person as a debauched person and unfit to lead the people though he may be held in high reverence by a large section of the people. If the Government are absolutely powerless to check such unrestrained acts by persons who do not have the good of the society at heart, then, Sir, the Government will be abdicating one of their primary functions. I, therefore, think that these various clauses ought to be there. I do think that there ought to be many more clauses also included so that provisions of the Bill may properly be enforced.

" Sir, I also feel that there are certain provisions in this Bill to which pointed reference has been made by some of the hon. Members from the Opposition with which I greatly agree. This is more or less a preventive Bill—a Bill which seeks to prevent objectionable performances being staged and to punish those persons who actually perform plays which are objectionable. The person who ought to prevent such acts should not be a police official. If Government have any faith in democratic institutions, they ought to give the power of preventing such acts to popular men who have been elected by the people. Sir, it is the old bureaucratic method to have everything vested in the authority of the District Collector and the Commissioner of Police. In the olden days, the Government trusted in every matter only their own officials and subordinates. But those days are gone. Now, we are having democratic institutions. It may be our people err. Many of them may err in

the beginnings of democracy. We do err and we learn by mistakes. It may be that some of our people may be corrupt. It may be that some of our people are amenable to several kinds of influences. But these things will have to be gone through if we want democracy. I think that it is not at all proper to give powers to the District Collector or to the Commissioner of Police to ban dramatic performances as has been provided in the Bill. Instead of the Police Commissioner the Government could vest such powers in the President of a District Board or the Mayor of the Corporation or other representative persons. After all, these people have got the welfare of the people at heart as anybody else. I cannot understand how a Police Commissioner can scan a particular drama and say whether it is good or bad. He has not got the necessary training. I can understand the Director of Public Instruction or the Mayor of Madras who moves with the people doing this job because he knows what art is, and judge what is good and what is not good. The old mentality of trusting officials and not trusting people must go. In fact, I was very much surprised to listen to the speech of a very respected and experienced Member of this House and who occupied for a long time the Treasury Benches to the effect that when a District Magistrate issued an order, the Government ought not to interfere with it, that they should wait till a report was received from the former and that they should deal with the matter in a leisurely way. Such things were done in olden days. The sooner we get rid of these things the better will it be. Therefore, I would earnestly appeal to the Members of the House and to the Government to see that the power of banning dramatic performances which are objectionable, of scanning which is good and which is bad, should be vested in persons who are elected or who represent the people in one capacity or other. If Government do not do that, there is a great deal of justification in the statements that have been made."

Mr. SPEAKER :—" The House will be adjourning at 1 p.m. for lunch. I wish to know whether the hon. Member is finishing his speech."

* Sri N. GOPALA MENON :—" I am just finishing my speech. Let us, Sir, broadbase or democratise the whole thing. We must take the people into our confidence. Some people may say that it will not be for good. I know that in the days of Dyarchy even Ministers were suspected. I know, Sir, European Executive Councillors paid greater heed to their Secretaries rather than to the words of Ministers. That was because they could not believe popular leaders. Now there must be a complete change in the outlook. I would earnestly appeal to those in authority to see that the Police Commissioner and the District Magistrates do not have anything to do with the working of this legislation. Their only duty

21st December 1954] [Sri N. Gopala Menon]

should be merely to carry out the mandate of the people. It is not the duty of the officials to tell the people what they ought to do and what they ought not to do."

MR. SPEAKER :—" The House will now rise and meet again at 2-30 p.m."

The House then rose for lunch.

(After lunch—2-30 p.m.)

* **SRI P. RANGASWAMI REDDIAR** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலையில் கனம் மந்திரி அவர்கள் பேசும்போது வடநாடு, தென்னாடு என்றும், திராவிட நாடு பிரிவினையை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த நாடகக் கட்டுப்பாடு மசோதாவை எதிர்க்கிறார்கள் என்றும் சொன்னார். ஓரளவு அதில் உண்மை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவானது ராதா ராமாயணம் நாடக அடிப் படையை வைத்துக்கொண்டு கொண்டு வரப்பட்டது என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். அந்த நோக்கத்தைப்பற்றி நேற்று நான் சொன்னேன். எப்படி இருந்தபோதிலும் ராமாயணம் இந்த நாட்டில் இதுவரையில் நடந்து வந்திருக்கிறது. வடநாட்டு ஆரியன் ஒருவன் திராவிட நாட்டு மன்னனாகிய ராவணனைக் கொன்றான் என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டுவந்தது. அப்படியே நடிக்கப்பட்டும் வந்தது."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Are we again going into a general discussion, Sir? It is better the hon. Member does not go into a general discussion again."

MR. SPEAKER :—" Let the hon. Member confine his remarks to the clause."

* **SRI P. RANGASWAMI REDDIAR** :—" அதாவது இரண்டாவது க்ளாசில் ஐந்தாவது சப்-க்ளாசை விலக்க வேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது மத சம்பந்தமான நாடகங்கள் அல்லது ஒரு தனிப்பட்ட வகுப்பை புண்படுத்தக்கூடிய விஷயங்கள் அடங்கிய ட்ராமாக்களை கட்டுப்படுத்த, தடைப்படுத்தவேண்டும் என்பது. அதாவது 'அப்ஜெக்ஷனல் பர்பார்மென்ஸ்' என்று கருதப்படும் ட்ராமாக்களை தடை செய்யவேண்டும் என்பதற்கு ஒரு திருத்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த க்ளாஸை ஏன் ஒமிட் செய்வேண்டும் என்பதைப் பற்றி சுருக்கமாகச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

" நமது இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதிய '**Letters from a Father to his daughter**' என்ற புஸ்தகத்தின் கடைசியில் அவர் எழுதியிருக்கிறார் அதாவது :

'In the Ramayana we are told that Rama was helped by monkeys in South India and Hanuman was the great hero of the monkeys. It may be that the story of the Ramayana is really a story of the fights of the Aryans against the people of the South whose leader was Ravana. Probably the " monkeys " were the dark people who lived in Southern India.

* * * *

'The Mahabharata came long after the Ramayana. It is much bigger book. It tells not of the fight between Aryans and Dravidians but of a great fight between Aryans and Aryans.'

[Sri P. Rangaswami Reddiar] [21st December 1954

" இது இந்தியா பிரதம மந்திரி அவர்கள் எழுதிய புஸ்தகத்தில் எழுதியிருப்பது. 13—12—1954-ம் தேதி டெல்லியில் **Hindi Literary Symposium**-த்தில் பேசியதில் இறுதியாக அவர் இந்நாட்டின் போராட்டத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார், அதாவது

'Sri Nehru referred to the dramatic parodies of Ramayana in Tamil Nad and said : " We should find out what is at the back of these developments. Such a parody of Ramayana, for instance, is intended to tell the audience that the people of the North have suppressed them not only to-day but they have done so for thousands of years and that, if they get an opportunity, they will do so again ". *Mail*, dated 15th Decemeber 1954.'

" அதுதான் ஜவஹர்லால் அவர்களுடைய கருத்தும். கம்ப ராமாயணத்தில் இருப்பது வேறு, சமஸ்கிருத ராமாயணத்தில் இருப்பது வேறு. அதனால்தான் இப்பொழுது ராமாயணத்தை வால்மீகி எழுதிய படி நடத்திக் காட்டுகின்றார்கள். ஆகவே உண்மையை நடத்திக்காட்ட வேண்டும் என்பதை தடை செய்வதால் அது மக்களின் மனதைப் புண்படுத்துகிறது. திராவிடர்களின் உயர்வையும் ஆரியர்களின் தாழ்வையும் சித்தரித்து நடத்தப்பட்டு வருகிற நாடகங்களை கட்டுப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தினுடைய கருத்தாக இருந்தால் அது மிகவும் வருந்தத்தக்கது. இராமலிங்கசுவாமிகள் ' மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் ' என்று கூறியுள்ளார். ஹிந்து மதம் என்றால் என்ன என்பதற்கு இன்னும் யாரும் சரியான விளக்கம் கொடுக்கவில்லை. பலவிதமான புராணங்களை அடிப்படையாகக் கொண்ட ஒன்று நீண்டகாலமாக மக்களிடம் மதம் என்று ஒருவித உணர்ச்சி நிலவி வந்துகொண்டிருக்கிறது. அதுதான் இந்து மதமா ? மக்களிடையே இப்பொழுது மதமான பேய் பிடித்து ஆட்டிக்கொண்டு வருகிறது. அந்த ' மதமான பேய் பிடியாது இருக்கவேண்டும் ' என்பதற்காகத் தான் ராதா அவர்கள் ராமாயணத்தை நடத்திக்காட்டி மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் பேயை விரட்டிக்கொண்டிருக்கிறார். சம்பூர்ண ராமாயணத்தை நடத்திக்கொண்டு மக்களிடத்தில் பேய் பிடிக்கவேண்டும் என்று சிலர் நடத்தி வருகிறார்கள். இதில் அரசாங்கம் மத்தியில் தலையிடாமல் இருந்தால் நல்லது அவர்கள் எதை வேண்டுமானாலும் நடத்தட்டும் அவர்களை யார் கேட்கிறார்கள் என்றிருக்கவேண்டும். பிறகு நாட்டில் சர்ச்சைகளும் குழப்பமும் ஏற்படுவதற்கு இடம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

" செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்த்தேன். தன்னுடைய ராமாயணம் வால்மீகி ராமாயணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கிறது என்று ராதா கனம் நிதி மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறார். அப்படி இருக்கும்போது இந்த ஐந்தாவது க்ளாசிற்கு இடமில்லை. அத்துடன் நிறுத்தி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் தொடர்ந்து ஐந்தாவது கிளாஸை வைத்து சட்டமாக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. இப்பொழுது ' விடுதலை ' பத்திரிகையில் ஒரு துண்டு பிரசுரம் என் கையில் கிடைத்திருக்கிறது. அதைப்படிக்க நான் விரும்பவில்லை. அதிலிருக்கும் விஷயம் பெரும்பாலும் இந்த நாடகத்தைப் பார்க்காத மனதுகளை புண்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அதில் யுத்தகாண்டம் 118-வது சருக்கம், அண்ணங்கராச்சாரியார் மொழி பெயர்ப்பு, பக்கம் 426-427 என்று பக்கம்கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் இதை பரிசீலனை செய்யவேண்டும். அதில், சீதையினுடைய கற்பைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையோ இல்லையோ அதைப்பற்றி நான் பேசுவதற்குத் தயாராக இல்லை. அந்த மாதிரியான பிரசாரத்தைச் செய்யவேண்டும் என்பது என்னுடைய விருப்பம் அல்ல. உண்மையை எவ்வளவு நாளுக்குத்தான் மறைக்க முடியும். கலாச்சார போராட்டம், ஆரிய திராவிடப் போராட்டம், நாளுக்கு நாள் அதிகரித்து சர்க்காருக்கு அதிகப்படியான தொல்லையைக் கொடுக்கும் என்பதை மட்டும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது கடவுளைப் பற்றியும் மதத்தை பற்றியும் தமாஷாவாகப் பேசப்படுகிறது. அதைப்பற்றி நமது நாட்டில் சாதா

21st December 1954] [Sri P. Rangaswami Reddiar]

ரணமாக எல்லோராலும் சொல்லப்படுகிறது. அதாவது 'நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாற்றியே சுற்றிவந்து முணுமுணு என்று சொல்லும் மந்திரம் ஏதடா? நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்று சித்தர் சொல்லியிருக்கிறார். இந்த மாதிரி நாடகத்தில் சொன்னால் டிராமாவில் 'அப்ஜெக்ஷனெபிள் மேட்டர்' என்று சொன்னால் அது பொருந்தாது. அது அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொருத்தது. அவரவர்களுடைய மனப்பான்மைக்குத் தக்கவாறு இரண்டொரு கருத்துக்களை மக்களிடத்தில் புகுத்தவேண்டுமென்று நாடகக்காரக்கள் கருதுவது குற்றமாகாது. ஆகவே இவ்விதம் நாடகங்களை தடை செய்தால் மக்கள் முற்போக்கு அடைய முடியாது. அவ்விதம் முற்போக்கு அடையவேண்டுமென்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லாமல் போய்விடும்.

"இந்தக் கிளாஸை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது என்று சொல்லுகிறார்கள். நாட்டில் இந்த நாடகங்களின் மூலமாக மூட நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பணக்காரன் ஏழை என்று இருப்பதும், அடிமை என்று இருப்பதும், ஆண்டவன் என்று இருப்பதும் கடவுள் சம்மதம் என்று மதத்தின் பெயரால் கூறுகிறார்கள். இதை அறிவு உலகம் ஒப்புக்கொள்ள முடியாது. இவைகளை நம்பி இதுவரையில் இருந்தது பரவாயில்லை. ஆனால் இனிமேலும் அப்படி நம்பி இருக்கவேண்டும் என்று சொன்னால் அது முடியாத காரியம். கடவுளுக்கும் சமுதாயத்திற்கும் சம்பந்தம் இல்லை. மக்கள் செய்யும் வேலைகளுக்கெல்லாம் இந்த மதம் குறுக்கே நிற்கிறது. இதைத்தான் நாடகத்தின் மூலமாக எடுத்துக் காட்டவேண்டும் என்று சொல்லுகிறார்கள். பணக்காரர் ஏழை என்றும், முதலாளி தொழிலாளி என்றும் இருக்கும் அமைப்பை மாற்ற நாடகம் மூலமாக நடத்திக் காண்பிக்கிறார்கள். திராவிடக்கட்சிக்காரர்கள் மகாநாடு நடத்துகின்றார்கள். பகலில் மகாநாடுகள் நடத்தி மக்களிடம் தலைவர்கள் கருத்துக்களை சொல்லி வருகிறார்கள். இரவில் மூட நம்பிக்கையை சுலபமாகப் போக்கிவிடவேண்டும் என்று நாடகங்களை நடத்தி காண்பிக்கிறார்கள். இந்த நாடகங்கள் எல்லாம் ஆட்சேபகரமானவைகள் என்று சொன்னால் இவர்கள் இவைகளை நடத்த முடியாமல் போய்விடும் என்பதை சர்க்கார் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆகவே இந்த திருத்தத்தை அதாவது ஒன்றுவது கிளாஸை ஒமிட் செய்யவேண்டும் என்னும் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்."

MR. SPEAKER :—"This is a most important clause and so I will allow as many Members as possible to speak on this. I do not think afterwards there will be many to speak and the other clauses can be passed very easily. But one thing, I shall put this clause to the vote of the House at about 3–45 p.m. Sri K. T. Raju may speak now. I want the hon. Member to be as brief as possible."

*SRI K. T. RAJU :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது கிளாஸ் 5-வது உபஷரத்துடன் இந்த மசோதா சட்டமாக்கப்படப்போவதால் நாட்டிலே தவறான ஒரு நடவடிக்கையில் மக்கள் இறங்கவேண்டியதாயிருக்கும் என்றுதான் சொல்லவேண்டும். 5-வது பிரிவிலே குறிப்பிட்டிருக்கிறபடி மதவுணர்ச்சி எந்தவிதமாக கருதப்படுகிறது என்பது புரியவில்லை. மத நம்பிக்கையுடையவர்களின் மனம் புண்பட்டால் அந்த நாடகத்தைத் தடைசெய்யலாம் என்று ஷரத்து கூறுகிறது. இந்த ஷரத்து அப்படியே சட்டமாக்கப்பட்டால் நியாயமாகவே நல்ல கருத்துடையவர்கள் ஏதோ ஒருசில மாறுபட்ட கொள்கையைக்கொண்டு நாடகங்களை நடித்தலும் அவைகள் தடை செய்யப்படுவதற்கு தூண்டுதலாக இருக்கும். 2-40 p.m.

"தமிழ்நாட்டிலே சாதாரணமாக மத நம்பிக்கையுடையவர்கள் குறிப்பாக தங்களுக்கு பெரிய இழுக்கு ஏற்பட்டுவிடுமோ, அவர்களின் மனம் புண்படக்கூடிய நிலைமை எங்கு வந்துவிடப்போகிறதோ என்று மதத்தைப் பாதுகாக்கவேண்டி இவ்விதமாக ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உண்மையாகப் பார்க்கப்போனால் மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இவர்களுக்கு வேண்டியதில்லை. வீபூதி வீரமுத்தும், அணுகுண்டு அய்யாவும் இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால் நிரந்திரமான ஒரு தொழிலையே அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்துவிடலாம். ஆனால் அவர்களுக்கு மதத்தின் மீது அவ்வளவு நல்ல எண்ணம் இருக்கமுடியாது. ஆகையால் இதுமாதிரியாக ஒரு ஷரத்தினால் மனது புண்பட்டுவிடும் என்று கருதி ஒரு நாடகத்தை தடுத்துவிடமுடியும். அதற்கு வகைசெய்கிறது இந்த ஷரத்து. ஜில்லா கலெக்டர் நல்லவராக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு வேண்டியவர்களோ அல்லது அங்கு இருக்கிறவர்கள் கிளர்ச்சி செய்வார்களானால், அந்த நாடகம் மனதைப் புண்படுத்துகிறவகையில் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு அவர்கள் இணங்கி அந்த நாடகத்தைத் தடுத்துவிடலாம். ஆகையால் தவறான சட்டம் செய்வதால் தவறான காரியங்கள் நடப்பதற்கு இடம் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

"இந்த மசோதா பிரேரேபிக்கப்படும்போது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சாதாரணமாக நாடகத்தின் மூலம் எதிர்ப்புப் பிரசாரம் செய்கிறார்கள் என்று. இருந்தாலும் அவைகளைத் தடைசெய்யப் போவதில்லை. எல்லா ஜில்லாக்களிலும் உத்திரவு கொடுக்கும் அதிகாரி கலெக்டராக இருந்தால் அவர்கள் கண்டிப்பாக நடந்துக்கொள்வார்கள். கலெக்டர் இருக்கும் நிலையிலே மற்ற அதிகாரிகள் இருக்கமுடியாது. நமது நிதி அமைச்சர்கூட மந்திரியாக இல்லாமல் இருந்தால் கலெக்டராகப் போகலாம் என்று சொன்னார்கள். உண்மையிலே அவர்கள் கருதலாம். மத எதிர்ப்புப் பிரசாரத்தை அனுமதிக்கலாம் என்று. ஆனால் இந்தச் சட்டம் அதிகாரியின் கையில் கொடுக்கும்போது அவர்கள் அப்படி நினைக்கமாட்டார்கள். மதம் எதுவென்றும் சரியாக விளக்கப்படவில்லையாதலால் தவறான ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு ஏதுவாகும். மதத்தை ஆதரிப்பவர்கள் என்று சிலர் இப்படி காரியங்களைச் செய்வதற்கு இந்தச் சட்டத்தின் மூலம் ஆபத்து விளைவிக்கக்கூடும் என்று சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படி சிக்கலையும், குழப்பத்தையும் ஏற்படுத்தக்கூடாது. மதத்தையோ, கடவுளையோ பாதுகாத்துக் கொள்வதற்கு, வீபூதி வீரமுத்துவோ, அணுகுண்டு அய்யாவோ வேண்டியதில்லை. இவர்களைப் பாதுகாத்துக் கொண்டால் போதும்."

2-47 p.m. SRI A. GOVINDASWAMY NAYAGAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் வந்துள்ள 2-வது கிளாஸ், 5-வது ஷரத்து ஆனது நாடகங்களையே கொலைசெய்யும் வகையில் இருக்கிறதென்று ஆட்சேபணையைத் தெரிவிக்க விரும்புகிறேன். கனம் நிதி மந்திரி அவர்கள் காலையில் பேசும்போது அரசியல் கண்ணோட்டத்தோடுதான் எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். கம்யூனிட்டு கட்சி பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதேசமயத்தில் திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்களையும் திராவிடநாடு பிரியவேண்டும் என்று சொல்வதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் திராவிடநாடு தனியாகப் பிரிய அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது.

'**Article 3, Parliament may by law :**

(*a*) **form a new State by separation of territory from any State or by uniting two or more States or parts of States or by uniting any territory to a part of any State ;**

(*b*) **increase the area of any State ;**

(*c*) **deminish the area of any State ;**

(*d*) **alter the boundaries of any State ;**

(*e*) **alter the name of any State.'**

21st December 1954] [Sri A. Govindaswamy Nayagar]

நிதி மந்திரி அவர்கள் அரசியல் சட்டத்தைப் படிக்காதவர்கள் அல்ல. உண்மை தெரிந்தும் சொல்லியிருக்கிறார். பாகிஸ்தான் பிரியும் காலத்திலும் இப்படித்தான் எதிர்ப்பு ஏற்பட்டது. அப்படியேதான் ஆந்திரர்களும் நம்மைவிட்டு பிரிந்து சென்றார்கள். வடநாடும், தென்னாடும் பிரியத்தான் போகிறது. கிளாஸ் 2, 5-வது ஷரத்துப்படி ஆட்சேபகரம் என்று சொல்லி அந்த நாடகத்தை அதிகாரி தடைசெய்துவிடலாம். அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் அதிகாரி ஒரு நாடகத்தை குற்றமுடையது என்று சொல்லும்முறையில்தான் இந்த ஷரத்து அமைந்திருக்கிறது. மத சம்பந்தமான நாடகத்தில் வேஷம் போடுகிறவர்கள் மதங்களை ஆதரிக்கிறவர்களாக இல்லை. ஏற்கெனவே இந்தப் புராண சம்பந்தமான நாடகங்களெல்லாம் ஆபாசங்கள் நிறைந்தனவாக இருக்கின்றன. சர்க்கார் இன்றையதினம் மதசம்பந்தமான நாடகங்கள் நடத்தப்படவேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால் அப்படிப்பட்ட நாடகங்களில் எல்லாம் ஆபாசங்கள் நிறைந்தனவாக இருக்கின்றன. சர்க்கார் இன்றையதினம் மதசம்பந்தமான நாடகங்கள் நடத்தப்படவேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால் அப்படிப்பட்ட நாடகங்களில் சுப்ரமண்யத்திற்கு இரண்டு மனைவிகள் என்று நடித்துக் காட்டப்படுகிறது. (ஒரு கனம் அங்கத்தினர்: 'இந்த சுப்ரமண்யத்திற்கா) நான் மந்திரி சுப்ரமண்யத்தை குறிப்பிடவில்லை ஆண்டவன் சுப்ரமண்யத்தைத் தான் குறிப்பிடுகிறேன். (சிரிப்பு.)

"இப்பொழுது நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகத்தில் (குமார விஜயத்தில்) இவ்வித காட்சிகள் வருகின்றன. ஒருவன் இரண்டு தாரங்களை மணந்துகொள்வது அரசியல் சட்டத்திற்கு விரோதமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் குமார விஜயத்தைப் பார்க்கும்போது ஆண்டவன் சுப்ரமண்யத்திற்கே இரண்டு மனைவிகள் இருப்பதாக காட்டும்போழுது ஏன் நாமும் இரண்டு மனைவிகளை மணக்கக்கூடாது என்ற உணர்ச்சி நாடகம் பார்க்கிறவர்களுக்கு ஏற்படாதா? ஆகையால் சட்டப்படி இந்த நாடகத்தை தடுத்து நிறுத்தவேண்டாமா என்று கேட்கிறேன். மேலும் ஒரு அதிகாரி சைவராக இருந்தால் அவர் சைவசம்பந்தமான நாடகத்தைத்தான் சம்மதிப்பார். அதிகாரி வைணவ நாடகத்தைப் பார்த்தால் அவருடைய மனது புண்படக்கூடிய சில காட்சிகள் இருக்கலாம். சம்பூர்ண ராமாயணம் நாடகத்தில் கூட வடகலை நாமம், தென்கலை நாமம் பிரச்னை உண்டாக்கிவிடுகிறது. ஐய்யப்பன் நாடகத்தில் டாக்டர் குருசாமி, டாக்டர் ரங்காச்சாரி முதலியவர்களால் தீர்க்கமுடியாத வயிற்றுவலி விபூதியால் தீர்ந்து விட்டதாக காட்டப்படுகிறது. இதை டாக்டர் குருசாமி பார்த்தால் அவரது மனம் புண்படாதா? இன்னும் வைத்தியக் கல்லூரி மாணவர்களையும், அதைப் பராமறிக்கும் அரசாங்கத்தையும் கிண்டல் செய்வதாக இல்லையா? இவ்விதமான ஆபாசமான காட்சிகளால் நாட்டு மக்களையே ஏமாற்றுகிறார்கள்.

"காலம்சென்ற கல்கி அவர்கள் எழுதிய கள்வனின் காதலி நாடகத்தில் ஒரு போலீஸ் அதிகாரி ஒரு நிரபராதியை தண்டிப்பதாகவும், அதே குற்றவாளி, பிறகு கொள்ளை, கொலை முதலிய குற்றங்களைச் செய்துவிட்டு, போலீஸ்காரர்களைக் கட்டிப்போட்டுவிட்டு சிறையிலிருந்து தப்பி விடுகிறான். இதைப் பார்க்கும் போலீஸ் அதிகாரிகளின் மனம் புண்படாதா? ஆதலால் இதைத்தடை செய்யவேண்டுமென்றால் ராஜாஜி அவர்கள் நிச்சயமாக சம்மதிக்கமாட்டார். இந்த நாடகத்தின் மூலம், கொலை, கொள்ளை, போலீஸ் அதிகாரியை அவமதித்தல் முதலிய காட்சிகள் வருகிறது. இந்த நாடகம் தடைசெய்யப்படுமா?

"அடுத்து டம்பாச்சாரி என்று ஒரு நாடகம் இருக்கிறது. இது பல பல காலமாக நம் நாட்டில் நடித்துக் காட்டப்பட்டு வந்திருக்கின்றது. 2-50 p.m.
ஆனால் அந்த நாடகத்திற்கும்கூட இதனால் ஆபத்து ஏற்படும்.

"அடுத்து 'மேனகா' என்று ஒரு நாடகம் இருக்கிறது. அந்த மேனகையில் ஒரு டெபுடி கலெக்டரின் பையன்—அவன் ஐய்யங்கார் குடும்பத்தைச் சேர்ந்தவன்-ஒரு முஸ்லிம் பெண்ணை மணப்பதாக இருக்கிறது. அதுவும் கூடத் தடை செய்யப்பட்டு விடக்கூடிய ஆபத்து ஏற்படும்.

"இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்துவது என்பது சரியல்ல. இதையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன் என்றால் ஒருசமயம் நிதி மந்திரி அவர்களுக்குக் கோபம் வரும். ஆனால் மசோதாவிலுள்ள ஷரத்துக்கள்தான் மிகப் பயங்கரமானதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பினேன்.

"சமூகத்திலுள்ள ஊழல்களையும், நமது புராணங்களிலுள்ள ஆபாசங்களையும் எடுத்துக் காட்டி மக்களது மூட நம்பிக்கையைப் போக்குவதற்கு ஸ்ரீ எம். ஆர். ராதா அவர்கள் நாடகத்தின் மூலமாக சிறந்த தொண்டு செய்து வருகிறார். ஆனால் மதுரையில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் இந்தச் சபையில் சில நாளைக்கு முன் குறிப்பிடும்போது ராதாவின் நாடகத்தை யார் தடை செய்யவேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்களோ அவர்களை ரௌடிகள் என்று சொல்லாமல், கருத்துப் பிரசாரம் செய்துவரும் ஸ்ரீ ராதாவை ரௌடி என்று குறிப்பிட்டது எவ்வளவோ பேர்களுடைய மனதைப் புண்படுத்தியிருக்கிறது என்பதை அவர் நன்கு உணரவேண்டும். ஆனால் ஒரு விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் மனதில்பட்ட உண்மையை மறைக்காமல் சொல்லிவிட்டார். இதிலிருந்து யார் ரௌடி என்பது மக்களுக்கே நன்கு தெரியக்கூடிய ஒரு சந்தர்ப்பம் உண்டாயிற்று. மதுரையில் சில காலிகள் கலாட்டா செய்தனர் என்பதற்காக ராதாவின் நாடகத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன் தற்போது கொண்டுவரப்படுகிற இந்த மசோதாவை வாபஸ் பெறவேண்டும். அல்லது இந்த மசோதாவின் இரண்டாவது ஷரத்திலுள்ள நாலு, ஐந்தாவது செக்ஷன்களை வாபஸ்பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

***Sri R. KRISHNAN** :—"മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ഈ ബില്ലിന്റെ രണ്ടാമത്തെ വകുപ്പ് പാടെ തള്ളിക്കളയണമെന്നുള്ളതാണ് എന്റെ ഭേദഗതി. കാരണം, കലയുടെ കലവറയുടെ താക്കോൽ കലക്ടരുടേയും പോലീസ് കമ്മീഷണരുടെയും കയ്യിൽ കൊടുക്കുന്ന ഒരു വകുപ്പാണിതു്. ജനങ്ങളുടെ കലാബോധത്തെ ചോദ്യംചെയ്യുന്ന ഒരു ഏർപ്പാടാണിതു്. കല കലയ്ക്കുവേണ്ടി എന്നു വിശ്വസിച്ചിരുന്ന കാലമെല്ലാം പോയി. ഇന്നു കല മനുഷ്യന്നുവേണ്ടി, സമുദായത്തിന്നുവേണ്ടി ആണ്. സമുദായത്തെ പ്രതിഫലിപ്പിക്കുന്നതാണ് കല. കഴിഞ്ഞ കാലത്തെ സമുദായത്തെ പ്രതിഫലിപ്പിച്ചിരുന്നു കഴിഞ്ഞ കാലത്തെ കല. ഇന്നു സമുദായസ്ഥിതി വളരെ മാറിയിട്ടുണ്ടു്. സമുദായം വളരെ വളർന്നിട്ടുണ്ടു്. അതനുസരിച്ചു കലയും വളർന്നിട്ടുണ്ടു്. അതു മുന്നോട്ടു പോയ്ക്കൊണ്ടിരിക്കയാണ്. സമുദായസ്ഥിതിക്കനുസരിച്ചു കല മാറിയില്ലെങ്കിൽ കലയ്ക്കു ജനങ്ങളെ ആകർഷിക്കാൻ സാധ്യമല്ല. കഴിഞ്ഞ കാലത്തു വളരെ കേമമായി ആളുകൾ ഘോഷിച്ചിരുന്ന പല കഥകളും നാടകങ്ങളും ഇന്നു ആർക്കും രസിക്കാത്തവയായി മാറിയിട്ടുണ്ടു്.

"മലയാളത്തിൽ ഇന്നു എത്രയോ പുതിയ പുതിയ നാടകങ്ങൾ പൊന്തിവരുന്നുണ്ടു്. ഒരിക്കൽ കണ്ടവർ വീണ്ടും വീണ്ടും കാണാൻ കൊതിക്കുന്നു. പല പ്രാവശ്യവും കണ്ടിട്ടും മതിയാകാതെ ആളുകൾ തിക്കിക്കൂട്ടുകയും ടിക്കറ്റു കിട്ടാതെ മടങ്ങിപ്പോവുകയും വളരെ സാധാരണമാണ്. ഇന്നത്തെ സമുദായനിലയെ ചിത്രീകരിക്കുന്നതുകൊണ്ടാണ് ഈ നാടകങ്ങൾ ജനങ്ങളെ ഇത്രയധികം ആകർഷിക്കുന്നതു്. അത്തരം നാടകങ്ങളെയെല്ലാം തടയാനുള്ള അധികാരം കലക്ടരേയും പോലീസ് കമ്മീഷണരേയും ഏല്പിക്കുക എന്നു പറഞ്ഞാൽ അതു സമുദായവളർച്ചയെ തടയാൻ ശ്രമിക്കലാണ്. അതുകൊണ്ടാണ് ഈ വകുപ്പ് പാടേ തള്ളിക്കളയണമെന്നു ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു്. ഗവൺമെണ്ട് ഈ കാര്യം ഗൌരവമായി ചിന്തിക്കുമെന്നു വിശ്വസിച്ചുകൊണ്ടു് ഞാൻ ചുരുക്കുന്നു."

3-p.m. ***Sri E. T. KUNHAN** :—"മിസ്റ്റർ സ്പീക്കർ, 'സർ, നമ്മുടെ നാട്ടിലെ അധഃപതിച്ചുകിടക്കുന്ന ജനസമൂഹത്തിന്റെ പുരോഗതിക്കു തടസ്സമാണ് ഈ ബില്ലന ഈ ബില്ലിനെ ജനങ്ങൾ ഒന്നടക്കം എതിർക്കുന്നതായിട്ടാണ് കാണുന്നതു്. ഇതു് ജ. ദ്രോഹത്തിന്നുവേണ്ടിയുള്ള ഒരു നിയമമാണ്. ഇവിടെ സംസാരിച്ച എല്ലാ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർമാരും അതു എടുത്തുപറഞ്ഞിട്ടുണ്ടു്. എന്തിനാണ് ഇങ്ങനെ ജനദ്രോഹപരമായ, ജനങ്ങളാൽ വെറുക്കപ്പെട്ട ഒരു ബില്ല് കൊണ്ടുവന്നു രണ്ടുമൂന്നു ദിവസം വാക്പ്രതി

വാദം നടത്തി സമയം കളയുന്നതെന്നു മനസ്സിലാകുന്നില്ല. കഴിഞ്ഞ തവണ ശ്രീ സി. രാജഗോപാലാചാരി ഒരു പുതിയ വിദ്യാഭ്യാസപദ്ധതി കൊണ്ടുവന്നു. ഇന്നാട്ടിലെ സാധുക്കൾക്കും അധഃപതിച്ച ജനവിഭാഗങ്ങൾക്കും വിദ്യാഭ്യാസം സിദ്ധിക്കുന്നതിന്നു അതു തടസ്സമായി നില്ക്കുമെന്നു കണ്ടു ജനങ്ങൾ ആരംഭം മുതല്ക്കേ അതിനെ എതിർത്തിരുന്നു. ഈ അസെംബ്ലിയും എതിർത്തു. നാടുനീളെ ജനങ്ങൾ അതിനെ എതിർക്കുകയും അതിന്റെനേരെ കാക്കിച്ചു തുപ്പുകയും ചെയ്തു. അതിന്നുശേഷമാണ് ഇന്നത്തെ വിദ്യാഭ്യാസമന്ത്രി ഈ അസെംബ്ലിയിൽ ഒരു പ്രസ്താവന ചെയ്തുകൊണ്ട് അതു പിൻവലിച്ചത്. അതിന്നുവേണ്ടി ഒട്ടുവളരെ പണവും ചെലവുചെയ്തു. അതുപോലെതന്നെ നാട്ടുകാർക്കെതിരുള്ള ഒന്നാണ് ഈ നാടകബില്ലും. ഇങ്ങനെ ജനങ്ങളാൽ വെറുക്കപ്പെട്ട ഒരു ബില്ല് നിയമമാക്കണമെന്നു ഗവമ്മേണ്ട് ശാഠ്യം പിടിക്കുന്നതെന്തിനെന്നു മനസ്സിലാകുന്നില്ല.

"ഇന്നു സമുദായത്തിന്റെ ഏററവും അടിത്തട്ടിൽ കിടക്കുന്ന ജനവിഭാഗങ്ങൾക്കു പോലും ഒരു ഉണർവ്വ് ഉണ്ടായിട്ടുണ്ട്. നാടകങ്ങളും മററു കലാപരിപാടികളും അതിന്നു വളരെ സഹായിക്കുന്നുണ്ട്. അതിനെ തടയാനുള്ള ഒരു നിയമമാണിത്. ഞാൻ ഇയ്യിടെ ഒരു കലാപരിപാടി കാണുകയുണ്ടായി. മലബാറിലെ കാലിമേയ്ക്കുന്ന ഹരിജൻ കുട്ടികൾ ഓണാഘോഷത്തിൽ നടത്തിയതായിരുന്നു ആ ഡ്രാമ. അതിൽ നാടുവാഴിയുടെയും ജന്മിയുടെയും ശങ്കരാചാര്യരുടെയും പാട്ട് ഇവർ അഭിനയിച്ചിട്ടുണ്ടായിരുന്നു. ജാതിയുടെ പേരിൽ ജനവിഭാഗങ്ങളെ അകററിനിർത്തുന്ന സമ്പ്രദായത്തെ അതിൽ ഭംഗിയായി ചിത്രീകരിക്കുകയുണ്ടായി. എങ്ങിനെയാണ് ഈ ജാതികൾ ഉണ്ടായത് ? മലബാറിലെ നായന്മാരെത്തന്നെ എടുത്തുനോക്കാം. നായന്മാരുടെ കൂട്ടത്തിൽ എത്രയോ ഇനക്കാരുണ്ട്. തുന്നാരൻ നായർ, വിളക്കിത്തല നായർ, വെളുത്തേടത്തു നായർ, ആത്തുരൻ നായർ ഇങ്ങനെ ഓരോ തൊഴില് ചെയ്യുന്നതിന്നുവേണ്ടി ഓരോ വിഭാഗത്തെ പ്രത്യേക പേരുകളും കൊടുത്തു അകററിനിർത്തിയിട്ടുണ്ട്. ജന്മിയുടേയും നാടുവാഴിയുടേയും അടിമവൃത്തി ചെയ്യുന്നതിന്നുവേണ്ടി സൃഷ്ടിച്ചിട്ടുള്ള ജാതികളാണ് ഇവയെല്ലാം. ഈ ജാതിവ്യത്യാസങ്ങളുടെയെല്ലാം ഉള്ളു പൊളിച്ചു കാട്ടിയ ഒരു നാടകമായിരുന്നു അത്. ഹരിജനിൽപ്പെട്ട പറയസമുദായത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം ഒരു ചട്ടമുണ്ട്. അതായത്, നാട്ടിലെവിടെയെങ്കിലും ഒരു കാലി ചത്തിട്ടുണ്ടെങ്കിൽ അതിനെ തദ്ദേശത്തെ പറയൻ കൊണ്ടുപൊയ്ക്കൊള്ളണമെന്നാണ് മാമൂൽ. ചത്ത കാളയെ പറയൻ തിന്നു കൊള്ളണം. അതു അവന്റെ വിശപ്പു പോക്കാൻ വേണ്ടിയല്ല. ചത്ത കാള ചീഞ്ഞു നാറി ജന്മിക്കു വിഷമമുണ്ടാകാതിരിക്കാൻ വേണ്ടി. ഈ മാമൂലുകളേയും ചട്ടങ്ങളേയുമെല്ലാം ആ കുട്ടികൾ ഭംഗിയായി അഭിനയിച്ചു കാണിക്കുകയുണ്ടായി. ഈ ചട്ടങ്ങളെല്ലാം ഉണ്ടാക്കിയത് നാടുവാഴികളും ജന്മിമാരുമാണ്. അതിനെ ഈ നാടകത്തിൽ നല്ലവണ്ണം തെളിയിച്ചിട്ടുണ്ട്. ഇങ്ങനെയുള്ള നാടകങ്ങളുടെ ഫലമായി ജനങ്ങൾക്ക്, പ്രത്യേകിച്ചും സമുദായത്തിന്റെ അടിത്തട്ടിൽ കിടക്കുന്ന ജനങ്ങൾക്ക്, വലിയ ഉണർവ്വ് ഉണ്ടായിട്ടുണ്ട്. അങ്ങനെയുള്ള നാടകങ്ങളെ തടയുന്നതു ദ്രോഹമാണെന്നു പറഞ്ഞുകൊണ്ടു ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു."

* **Sri A. S. SAHAJANANDA** :—"கனம் தலைவர் அவர்களே, 3-05 p.m.
இந்த நாடக சட்டமானது மிகவும் இன்றியமையாதது. இது நாடக சம்பந்தமாக வந்தது அல்ல. அரசியல் காரணமாகத் தான் இது வந்ததாக நினைக்க வேண்டியதாக இருக்கிறது. மற்றொருவருடைய மனதைப் புண்படுத்த வேண்டும் என அதைத் தடுக்க பிரமாதமாக ஒரு சட்டம் வேண்டாம் என்று சொல்வது நியாயமல்ல. சாதாரணமாக கிராமங்களில் சென்று பார்த்தால் தெரியவரும், எந்த அளவில் ஜனங்களுடைய மனது புண்படும்படியாக நாடகங்கள் நடத்திக் காட்டப்படுகின்றன என்பது. சென்ற வருஷம் சிதம்பரம் உசுப்பூரில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தினார்கள். அப்பொழுது அங்கு பாமர ஜனங்கள் வந்தவுடன் அங்கு இருவர் குறவன் குறத்தி வேடம் பூண்டு அரசாங்கத்தையும் காங்கிரஸ் அங்கத்தினர்களையும் இழிவாகப் பேசி அவர்கள் மேல் குறைகளைச் சொல்லி வந்தார்கள். இதுதான் கிராமங்களில் நடந்து வருகிறது. இந்த மாதிரி கிராமங்களில் நடக்கும் விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கு வேண்டிய அதிகாரம் கலெக்டருக்கு மாத்திரம் இருந்தால் போதாது. டிபுடி கலெக்டர், மாஜிஸ்ட்ரேட், சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்களுக்கும் இருக்க வேண்டும். அங்

குள்ள போலீசாருக்கும் இந்தமாதிரியாகப் பேசுவதைத் தடுக்கக்கூடிய அதிகாரம் இருக்கவேண்டும். பிறருடைய மனதைப் புண்படுத்தும் வகையில் நாடகங்களை நடத்தி வரும்போதும் இந்தச் சட்டம் வேண்டாம் என்று சொல்வது நியாயமாகுமா என்று கேட்கிறேன்.

"கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது ராமாயணத்தை நாடகமாக நடத்தி வருகிறார்கள். அதையும் மாற்றி நடித்து வருகிறார்கள். ராமாயணத்தில்தான் எல்லாவிதமான தாத்பர்யங்களும் தத்வார்த்தங்களும் அடங்கி இருக்கின்றன. வேதம், ஆகமம், இதிகாசம், இன்னும் பலவற்றின் தத்வார்த்தங்களும் அதில் அடங்கி இருக்கிறது. தெய்வத்தினிடத்தில் யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ அவருக்கு ராமாயணத்தில் நம்பிக்கை இருக்கும். நான் ராமாயணத்தைப் படித்திருக்கிறேன். இதிகாசங்கள் படித்திருக்கிறேன். எனக்கு தெய்வ நம்பிக்கை உண்டு. பல புராணங்களைப் படித்திருக்கிறேன். ராமாயணத்தைப் படித்த ஒவ்வொருவரும் சீதையை தெய்வமாகக் கொண்டாடி வருகிறார்கள். ஹிந்து மதத்திலுள்ளவர்கள் எல்லோரும் ராமாயணத்தை படித்திருப்பார்கள். ஆனால் சீதையை சிறைப்படுத்தி இருப்பதைப்பற்றி இப்போது சிலர் இழிவாகப் பேசுகிறார்கள். ராமாயணத்தில் சீதை மூன்று தடவைகளில் சிறைப்பட்டிருக்கிறாள். அதாவது முதலில் தேவமாதர்கள் சிறையை தவிர்க்க அது ராவணனிடம் சிறையிருந்தார்கள். பிறகு இரண்டாவது பிரிவாக வால்மீகியினிடம் அனுப்பினார். அது பாரதந்திரியத்தை வெளியிடுகைக்காக. கடைசியில் பூமி வெடித்து மறைந்தார்கள். அது சேஷத்துவர்தைக் காட்டுவதற்காக இப்படிப்பட்ட தத்வார்த்தங்கள் ராமாயணத்தில் இருக்கின்றன. இன்னும் பல ரகசியங்கள் ராமாயணத்தில் இருக்கின்றன. அவைகளைப்பற்றி சரியாக உணராமல் குறை கூறுகின்றார்கள். ஆகவே அப்படிக் குறைகள் சொல்லாமல் இருப்பது நல்லது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் நான் ராமாயணத்தை நன்றாகப் படித்திருக்கிறேன். அதன் சில தத்வார்த்தம் எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் என் மனம் புண்படுகிறது."

Sri K. VINAYAKAM :—"கனம் மெம்பர் அவர்கள் மசோதா சம்பந்தமாக பேசாமல் வேறு எதையோ பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பெரியவர், அவர் . . ."

Mr. SPEAKER :—"அவர் இந்த சட்டசபையில் 1925-ம் வருஷம் முதற்கொண்டு மெம்பராக இருக்கிறார். அவருக்கு எல்லாம் நன்றாகத் தெரியும்.

Sri K. VINAYAKAM :—"அவர் இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தத்தைப்பற்றிதான் பேசவேண்டும். பொதுவாகப் பேசக் கூடாது."

***Sri A. S. SAHAJANANDA** :—"நான் இந்த திருத்தத்தின் பேரில்தான் பேசுகிறேன். அதாவது ஐந்தாவது பிரிவு இருக்கிறதே அது அப்படியே இருக்கவேண்டும் என்றுதான் பேசுகிறேன். மத சம்பந்தமாக ப்புண்படுத்தும்படியாக இருக்கக்கூடாது என்றுதான் நான் பேசுகிறேன்.

"சீதையை எடுத்துக்கொண்டு போகும்போது அவள் ஏன் ராவணனை எரித்து சாம்பலாக்கியிருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது. இதற்கும் ஒரு தத்வார்த்தம் இருக்கிறது. அதற்கு முன்பு, திருப்பார்க்கடலில் மகா விஷ்ணு பள்ளிகொண்டிருக்கும்போது தேவர்கள் சென்று பிரார்த்தித்தார்கள். அப்போது ராவணனை ஒரே பாணத்தால் கொன்றுவிடுவேன் என்று ராமர் சொல்லிக்கொண்டிருந்தது லட்சுமியாகிய சீதைக்கு தெரியும். அந்த வார்த்தையை நிறைவேற்றுவதற்குத்தான் தன்னை ராவணன் தூக்கிசென்றபோது அவனை எரிக்காமல் இருந்தாள். அந்த வேலையை ராமர் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் அப்படி சீதை இருந்தாள் என்பது ராமாயணத்தின் ரகஸ்யத்தில் இருக்கிறது. அதை இப்போழுது திரித்துப் பேசுகிறார்கள். அதன் மேல் ராமாவதாரம் வந்து

21st December 1954] [Sri A. S. Sahajananda]

ராமாயணம் நடந்தது. தான் சாம்பலாக்கி விட்டால் தேவர்களுக்குச் சொன்ன வாக்கு பலிதமாகாமல் போய்விடுமோ என்பதற்காகத்தான். சீதை ராவணனை சாம்பலாக்காமல் பொறுமையாக இருந்தாள்.

" ராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும்போது சீதையின் கட்டளைப் படி அக்னி பகவான் அங்கு ஒரு மாயா சீதையை சிருஷ்டித்து வைத்தான் ராவணன் தூக்கிச் சென்றது உண்மை சீதையல்ல. மாயா சீதை தான். கூர்ம புராணம்,

'' இருவரும் அகன்ற அற்றம் நோக்கிய
இலங்கை வேந்தன்
அருமறை பறையும் முக்கோல்பகவனு யருகினெய்த
திருவனுள் ஐயன் வேள்வித்தீயினில்
ஒளிப்பச் செந்தி
மருவருமாதயா சீதை வகுத்து முன்
விடுத்த தன்றே. '

அவ்விதம் அங்கு ஒரு மாயா சீதையை அமைத்து வைத்துவிட்டுச் சென்றார்கள். கடைசியில் மாயா சீதையைத் தான் நெருப்பில் அனுப்பியிருக்கிறார்கள். பிறகு உண்மை சீதை வெளியில் வருகிறாள். அதற்காகத் தான் ஒரு வேள்வித் தீயையும் அமைத்தார்.

'' அங்கியங்கடவுள் ராமன் முன்னெய்தி
அரக்கன் முன் கவரவந்துரலும்
பொங்கு நீள் வேள்விதழற்புக அனியன்
புணர்த்திய மாயையை யரக்கன்
மங்கையென்றெண்ணி கொணர்ந்தனன் அந்த
மாயை ஈண்டிழிந்ததும் மற்றென்பால்
தங்கிய சீதையிவள் அவன் தீண்டில்
சாம்பராம் கற்பின் வேந்தழலால். '

இவ்விதம் ஒரு மாயா சீதையை ராவணன் எடுத்து சென்றான்."

Sri P. RATHINASWAMY PILLAI :—" கனம் அங்கத்தினர் சொல்லும்போது மாயா சிதையைத் தூக்கிக் கொண்டுபோனார் என்று சொன்னார். அது மாயா சீதைதான், உண்மை சீதையல்ல என்று எந்தப் புராணத்தில் சொல்லி இருக்கிறது என்று கேட்கிறேன்."

Mr. SPEAKER :—'' ராமாயணப் பிரசங்கத்தை வெளியில் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு மசோதாவைப்பற்றியும் திருத்தத்தைப் பற்றியும் பேசுங்கள்."

*** Sri A. S. SAHAJANANDA** :—" பிறகு சீதை காட்டிற்குச் சென்றதைப்பற்றி குறை கூறுகிறார்கள். அதனுடைய அர்த்தம் வேறு. வைணவ சம்பிரதாயத்தைப்பார்த்தால் அது நன்றாகத் தெரியும். புருஷாகாரத்தை வால்மீகி பெற சீதாப்பிராட்டியை வேண்டுமென்றே வனத்திற்கு அனுப்பினார்கள். அதாவது

' நல்லுயிர்த்தோழனுய் வான்மீகி நற்றவம் செறிவனத்துய்த்தி '

என்ற செய்யுளில் கூறப்பட்டிருக்கிறது. கேட்பவர்கள் இதை கவனிப்பார்களா. அதே சமயத்தில் வால்மீகி ரிஷி வந்து என்ன சொல்லுகிறார் என்றால், ' அம்மா உம்மை காட்டிற்கு போக விடவில்லை, என்னிடம்தான் விட்டார்கள் ' என்று சொல்லுகிறார்.

" அனகனும் ராமன் தேவியென்றும் நீ அமலையென்றும்
ஜனகன் மாமகள் நீ யென்றும் சமாதியில் உணர்ந்தேன் தக்க
உனையவன் காட்டில் விட்டானல்லன் என்னிழையே விட்டான்
, என நினையாங்கள் வைகும் இடத்தில் எம்மோரும் போதி '

என்பதால் வான்மீகி அருள்செய்யவே விடப்பட்டதாம்.

" மற்றொரு உதாரணம் கொடுக்கலாம் என்றிருக்கிறேன். இதற்கு ஒரு கதை ராமாயணத்தில் இருக்கிறது. அதையும் திரித்துக் கூறுகிறார்கள். சம்புவன் என்னும் ஒரு பிராமணன் தன்னுடைய விரோதி பிராமணனைக் கொல்வதற்கு மாரணயாகத்தை செய்தான். ஏனென்றால் பிராமணன் பிராமணனைக் கொல்லக்கூடாது. அதற்காக அவன் மாரணயாகத்தைச் செய்தான். மாரணயாகம் என்றால் அது ஒரு சூத்ர யாகம். சேன யாகம் அபிசார யாகம் என்றும் சொல்வார்கள். அவ்விதம் சூத்ர யாகம் செய்தால் எதிரியைக் கொல்லலாம். இதைத் திரித்து சம்புவன் என்ற சூத்ரன் தன்னுடைய எதிரியைக் கொல்ல தவம் செய்தான் என்று சொல்லுகிறார்கள். இது தவறு. சென்னையில் ஆமில்டன் பிரிட்ஜ் என்று ஒன்றிருக்கிறது. அதனை சொல்லத் தெரியாமல் அம்பட்டன் வாராவதி என்று சொல்லிவந்தார்கள். இறுதியில் அது பார்பர்ஸ் பிரிட்ஜ் என்று டிராம்வே கம்பெனியார் டிராம்வேயுக்கு டிக்கட் அடித்தார்கள். அது போல் (பிராமண) சம்புவன், சூத்திர தவம் செய்ததை சம்புவென்னும் சூத்திரன் தவம் செய்தான் என்றும் அவனைக் கொன்றானென்றும் ராமர் மேல் பழியும் பிராமண துவேஷமும் உண்டாக்கினார்கள். இவ்விதமெல்லாம் சொல்லுவது தவறு. புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் எவ்வளவோ கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன. அவைகளைப் புரிந்துகொண்டுதான் நடக்க வேண்டும். அதற்கு நீண்ட காலப் படிப்பு வேண்டும். நான் ஐம்பது வருஷ காலமாக ராமாயணம் படித்துக் கொண்டு வருகிறேன். இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே மனது புண்படும்படியாக நாடகங்களை நடிக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அதனால்தான் இந்தச் சட்டம் அவசியம். இந்த ஐந்தாவது கிளாஸை நான் ஆமோதிக்கிறேன்."

3-13 p.m. **Sri A. RATNAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் இரண்டாவது ஷரத்திலே 5-வது விதியை நீக்கவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதைப்பற்றி மற்ற அங்கத்தினர்களும் அதிகமாகப் பேசி இருக்கிறார்கள். கனம் சகஜானந்த சுவாமிகளும் இந்த சபையிலே கதா காலட்சேபம் செய்திருக்கிறார்கள். இந்தக்காலத்தில் புராணப்படங்களை எடுபடுவதில்லை. இந்தக் காலத்தில் முற்போக்குக் கருத்துக்களைப் பேசுவதாலும் பாடுவதாலும்தான் நாடகம் எடுபடுகிறது. ஆனால் நமது சுவாமிஜி ராமயணத்தைப் பற்றி பெருமையாகப் பேசியுள்ளார்கள். ஆனால் இந்த ராமாயணத்தில் நீலன் என்றும் குண்டன் என்றும் நம் நாட்டு மக்களைக் குறிப்பிடுவனவாக இருக்கிறது. இவ்விதமாக பெயர் வைத்து ஆதிதிராவிடர்களைக் கேவலப்படுத்துகிறார்கள். இப்பொழுதும் இந்த விதமான பெயர்கள் இருந்து வருகின்றன. தாடகை என்று பெண்களைக் கேவலப்படுத்துகிறார்கள். நம் நாட்டில் 100-க்கு 99 ஆக பரிணமிக்கும் மக்களை அசுரர்களாக்கி சீரழிக்கிறார்கள். திராவிடர்களை குரங்கு என்றும் சூத்திரர்கள் என்றும் ராமாயணத்தில் கூறுவதை சுவாமிஜி மறுப்பாரா ?"

Sri A. S. SAHAJANANDA :—" கனம் ஸ்ரீ ரத்தினம் அவர்கள் ராமாயணத்தில் நீலன் என்றும் குண்டன் என்றும் வருவதாகச் சொல்லுகிறார்கள். குண்டன் என்ற வார்த்தையே ராமாயணத்தில் கிடையாது. ராவணன் பிராமணன். இதில் ஹரிஜனங்களைப் பற்றிபேச்சே கிடையாது."

Sri A. RATNAM :—" சுவாமியின் மனதைப் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. அவர் என் தலைவர். ஆதலால் அவரிடம் எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. இப்பொழுது கொண்டு வந்திருக்கும் என்னுடைய திருத்தத்தின் பிரகாரம் இந்தச் சபையில் ஏற்றுக்கொள்ளலாம். இந்தக் காலத்திலே மக்கள் முற்போக்குக் கருத்துக்களைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள். ஆனால் ஒரு சாரார் மாத்திரம் பழைய புராண நாடகங்களையே விரும்புகிறார்கள். வால்மீகி ராமாயணத்திலிருந்து தான் கம்பராமாயணம் வந்திருக்கிறது. ராதா ராமாயணமும் வால்மீகி ராமாயணத்தின் கருத்தைக் கொண்டதாகத்தான் இருக்கிறது. அப்படி

21st December 1954] [Sri A. Ratnam]

யிருக்கும்போது அரசாங்கம் இதை ஏன் தடை செய்தது என்று புரியவில்லை. அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்ட சுதந்திரம்கூட பறிக்கப்படுகிறது. இப்பொழுது கொண்டுவந்திருக்கும் மசோதாவில் கடவுள் நம்பிக்கையோ, ஆஸ்திகர்களை பாதிக்கக்கூடியவகையிலோ இருந்தால் அவைகள் தடை செய்யப்படும் என்றிருக்கிறது. ஜாதி மதத்தை அனுசரிக்கவேண்டியவர்களை ஆதரிக்கிறது இந்த அரசாங்கம். ஜாதி, மதம் முதலிய பாகுபாடுகள் இருப்பதால் இந்த நாட்டில் தீண்டாமைச் சட்டம் இருந்தும், இந்த ஆதிதிராவிட மக்களுக்குச் சுதந்திரம் கிடையாது. நேரம் கொடுக்காத காரணத்தினால் சீக்கிரமே முடித்துக்கொள்ளுகிறேன். ஆதலால் இந்த 16-வது திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

* **SRI T. SHANMUGAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திலேயே மிகவும் மோசமான அம்சம் அடங்கியது இரண்டாவது ஷரத்திலுள்ள ஐந்தாவது பிரிவுதான். 3-20 p.m.

" முதலாவதாக நம் ' ரிலிஜன் ' என்ன ? அந்த ' ரிலிஜன் ' எதைக் கடவுள் என்று கருதுகின்றது ? முஸ்லிம் மதத்திலுள்ள அல்லா போலவும், கிருஸ்துவ மதத்திலுள்ள ஏசுநாதர் போலவும் நமது ரிலிஜனில் ஏதாவது ஒரு கடவுள் இருக்கிறதா ? ஒன்றைத்தான் வழிபட வேண்டுமென்று ஏதாவது விதி இருக்கின்றதா, என்றெல்லாம் எல்லோரும் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். நமது மதத்திலே அறிவுக்குப் பொருந்தாதவைகள் எல்லாம் நிறைய இருக்கிறது. அதையெல்லாம் சொன்னால் ஸ்வாமி சகஜானந்தாவைப் போன்றவர்கள் மனம் புண்படுகிறதே என்று சொல்வார்கள். ஆனால் அறிவுக்குப் பொருந்தாதவைகள் இருக்கின்றதைக் கண்டு பலபேர்களுடைய மனம் புண்படுகிறது என்பது அவருக்குத் தெரியவேண்டும். குறிப்பாக ராமாயணத்தை எடுத்துக்கொண்டால் எவ்வளவோ ஆபாசங்கள் இருக்கின்றன. ஆனால் சற்று முன்பு பேசிய ஸ்வாமி சகஜானந்தா அவர்கள் என்னென்னவோ உள்ளர்த்தங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனான் என்று இருந்தால் இவர்கள் சீதையை எடுத்துக்கொண்டு போகவில்லை, மாயா சீதையைத்தான் எடுத்துப் போனான் என குருட்டு நம்பிக்கையிலே வியாக்யானம் வேறு செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் எப்படித் திருப்புவது என்பது தான் பிரச்னை."

MR. SPEAKER :—" குருட்டு நம்பிக்கையிலே என்றெல்லாம் ஒரு தனிப்பட்டவரை பற்றி குறிப்பிட்டு பேசாதீர்கள்."

* **SRI T. SHANMUGAM** :—" நான் எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால் இவர்களுக்கு எல்லாம் எப்படி ராமாயணத்திலே அறிவுக்குப் பொருந்தாதவைகள் எல்லாம் இருக்கின்றன என்று காட்ட வேண்டியது அவசியம் என்பதற்காகத்தான். ராதா ராமாயணத்தைப் பாருங்கள், ஒரு கட்டம் மிக அழகாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் அதைப் பார்க்க வேண்டும் (சிரிப்பு). அந்த நாடகத்தை நமது நிதி மந்திரி சுப்பிரமணியமும் கூடப் பார்க்க வேண்டும் (சிரிப்பு). என் அப்படிச் சொல்கிறேன் என்றால் அவர்கள் எல்லாம் அதை ரொம்ப ரசிப்பார்கள். அதில் சொல்லப்படுகிற கருத்தையெல்லாம் வரவேற்பார்கள் (சிரிப்பு). அதிலே ரொம்ப அழகாக எடுத்து நடித்துக் காட்டுகிறார்கள். நான் போய் பார்த்ததேன்.

" சீதை வால்மீகியின் குடிசையில் இருக்கும்போது அந்த ரிஷியானவர் ஒரு சமயம் சீதையின் குழந்தை வெளியே போயிருந்தவன் வரக்காணோம் என்பதற்காக கவலைப்பட்டு ஒரு துரும்பை கிள்ளிப்போட்டாராம். உடனே அந்தத் துரும்பு ஒரு குழந்தையாக உண்டாகிவிட்டதாம். ராமன் திரும்பி வந்து கேட்கிறான் ' ஏ ரிஷியே நான் ஒரு குழந்தையோடு

கூடத்தானே சீதையை இங்கு அனுப்பி வைத்தேன், இப்போது எப்படி இரண்டு குழந்தை இருக்கிறது என்று. அதற்கு ரிஷி சொல்ராராம், நான் ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு ஒரு குழந்தையை உண்டாக்கினேன் என்று. அடேடே, ஒரு துரும்பைக் கிள்ளி போட்டு ஒரு குழந்தையை உண்டாக்கக்கூடிய திறமை இருக்குமானால் எங்கள் அப்பா எங்களை எல்லாம் உண்டு பண்ணுவதற்கு எதற்காக பெரிய பெரிய யாகங்களை எல்லாம் செய்தார் என்று ராமன் சொன்னார் (சிரிப்பு). இப்படி அறிவுக்குப் பொருந்தாத பல விஷயங்கள் ராமாயணத்திலே இருக்கின்றன. பொய்யான பல கட்டுக் கதைகள் அவற்றை எல்லாம் ஒழித்துவிட்டு அறிவுக்குப் பொருந்தக் கூடியவற்றை எல்லாம் மக்களுக்குக் கொடுக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் ரொம்பவும் அவசியம். பழையன போகக்கூடாது என்று சொல்கின்றவர்கள் தான் இந்த மாதிரியான சட்டத்தை ஆதரிப்பார்கள். நாட்டு முன்னேற்றத்திற்கு நல்ல நல்ல புதிய புதிய மாறுதல்கள் வரவேண்டியது அவசியம். நமது நிதி மந்திரி கூட புதிய கருத்துக்கள் வரக்கூடாது என்று சொல்வதைப்பற்றி நான் வருந்துகிறேன். இவர் ரொம்பவும் பழைய காலத்து மனிதராக இருக்கிறாரே என்று எனக்கு ரொம்ப வருத்தம் உண்டாகிறது." (சிரிப்பு.)

" நமது நண்பர் ஸ்ரீ ரெங்கசாமி ரெட்டியார் கூட ரொம்ப அழகாக நமது புராணக் கதைகளிலுள்ள ஆபாசங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார். இன்னொன்று பாருங்கள்—ஏகலைவன் கதை. ஏகலைவன் ஒரு சூத்திரன். அவனுக்கு வில் வித்தை கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசை. துரோணரிடம் சென்று கற்றுக் கொடு என்று கேட்டானாம். அவர் நீ சூத்திரன் உனக்குக் கற்றுக்கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாராம். அவன் யோசித்துப் பார்த்தான். உடனே துரோணர் மாதிரி ஒரு சிலையைச் செய்து தன் முன்னால் வைத்துக்கொண்டு வில் வித்தை கற்றுக்கொள்ள ஆரம்பித்தான். இது துரோணருக்குத் தெரிந்து விட்டது. அர்ஜுனனை விட மிக நன்றாக வில் விட இந்த சூத்திரன் கற்றுக்கொண்டு விட்டானே என்ற ஆத்திரத்தில் நீ என் சிலையை வைத்துக் கொண்டு தானே கற்றுக் கொண்டாய், ஆகவே உன் வலது கை கட்டை விரலை குரு காணிக்கையாகக் கொடு என்று கேட்டாராம். இதைப் பாருங்கள். இது எவ்வளவு அக்கிரமம் (சிரிப்பு). இது மாதிரியாகவெல்லாம் பல கதைகள் இருக்கின்றன.

" இந்த மாதிரியான கதைகளை எல்லாம் ஒழித்து மக்களுக்கு அறிவு, நல்ல உயர்ந்த கருத்து இவைகள் எல்லாம் உண்டாக்க வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தையே கொண்டு வரக்கூடாது. அப்படியே கொண்டு வந்தாலும் இரண்டாவது ஷரத்திலுள்ள 5-வது பிரிவு போகவேண்டும். எந்த மாகாணத்திலும் இப்படிக் கொண்டு வராத போது நமது தமிழ் நாட்டில் மாத்திரம் இப்படி கொண்டு வரும்படி ஆயிற்றே என வருந்தி முடித்துக்கொள்ளுகிறேன்."

***Sri K. R. NALLASIVAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் எந்தக் கருத்தைக் கொண்டு இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகின்றதோ அந்தக் கருத்து ஓரளவு வெற்றி பெற்றுவிட்டது என்றே நான் நம்புகிறேன். ஏதோ ராதா நாடகம் நடக்கிறது, அதைத் தடுக்கத்தான் இந்த மசோதா கொண்டுவரப்படுகின்றது என மக்கள் நினைத்துக் கொள்ளவேண்டும். அதேசமயத்தில் வேறு சில உட் கருத்தைக்கொண்டு இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்பதே அவர்கள் எண்ணம் என்பது சர்க்காரின் போக்கிலிருந்து நன்றாக உணரமுடிகின்றது. உள்ளொரு கருத்து, வெளியொரு கருத்தாக அவர்கள் நடிக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையை விரும்புகிறார்களோ அந்தச் சூழ்நிலை ஓரளவு கிடைத்திருக்கிறது என்றே நான் நம்புகிறேன். வெளியிலுள்ள மக்கள் எல்லாம் இந்த மசோதா ராதாவின் ராமாயணத்தைத் தடை செய்யவே கொண்டு

21st December 1954] [Sri K. R. Nallasivam]

வரப்பட்டதாகக் கருதுகிறார்கள். சபைக்குள்ளும் ஒரு சாரார் அப்படித் தான் கருதுகிறார்கள். மதக் கருத்துக்களைக் காப்பாற்ற ராதாவின் ராமாயணத்தை மாத்திரம் தடை செய்வது இவர்கள் நோக்கமாக இருக்குமானால் அதற்கு இந்தச் சட்டமே தேவையிருக்காது. வேறு சில உட் கருத்தைக்கொண்டே இப்படிப்பட்ட சட்டத்தை இவர்கள் கொண்டு வருகிறார்கள் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கக்கூடாது என்பது என் அபிப்பிராயம். இதற்கு உதாரணமாக ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

" சமீபத்திலே ' பராசக்தி ' என்கின்ற சினிமாப்படம் வந்தது. அதில் நமது மதத்தைப்பற்றி பலபல இடங்களில் கிண்டல் செய்யப்படுகிறது. ஒருவன் உணவுக்குக் கஷ்டப்படுகிறான், உடனே அதில் மற்றொருவன் ' பஜகோவிந்தம் போடப்பா, உணவு கிடைக்கும் ' என கிண்டல் செய்கிறான். இங்கே வேண்டுமென்றே மதம் பரிகசிக்கப்படுகிறது. இதை சென்ஸார் போர்டுகள் வெட்டவில்லை. சென்ஸார் போர்டில் மத உணர்ச்சி உள்ளவர்களே அங்கத்தினர்களாக இல்லை என்று சொல்வதற்கில்லை. தெய்வ நம்பிக்கையுள்ள பலபேர்கள் தான் அதில் இருக்கிறார்கள். இருந்தாலும் கூட இந்த நாட்டிலுள்ள மதத்தை யார் வேண்டுமானாலும் பரிகசிக்கலாம், அதை யாரும் தடுக்க மாட்டார்கள் என்பது போலவே அது விடப்பட்டுவிட்டது.

" ஆனால் சமீபத்திலே மனிதனும் மிருகமும் என்ற ஒரு படம் வந்தது. அதில் ஒருவன் காந்திஜி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோரின் சிலை முன்பு நின்று கொண்டு' இந்த நாட்டிலே இப்படியா மனிதர்கள் உணவுக்கு வழியின்றி கஷ்டப்படவேண்டும், இதற்காகத்தானா இந்த நாட்டிற்கு இந்தத் தியாகிகள் பலவிதமான கஷ்டங்களைப்பட்டு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்கள் ' என்றெல்லாம் கேட்கும் ஒரு இடம் சென்ஸார் போர்டால் வெட்டப்பட்டுவிட்டது. இதிலிருந்து நாம் பிரத்யக்ஷமாக ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். மதத்தை எவ்வளவு கேவலப்படுத்தினாலும் அதற்காக சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொண்டது கிடையாது. எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அபிப்பிராயம் இல்லை. ஆனால் இதன் பேரில் சமுதாயத்தில் வேறுவிதமான அரசியல் கருத்துக்கள் புகுந்துவிடாதபடி தடுப்பதற்காகவே தான் இந்தச் சட்டத்தை சர்க்கார் கொண்டு வருகின்றது. இதை நாங்கள் ஆதரிப்பதற்கில்லை. ராமாயணத்தை தடுப்பதற்காக இதைக் கொண்டுவருவது போன்ற பாவனையில் நாட்டில் வளர்ந்து வரும் அரசியல் முற்போக்குக் கருத்துக்களுக்கே தடை போடக்கூடிய முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதால், அதிலும் குறிப்பாக இந்தச் சட்டத்தில் இரண்டாவது ஷரத்து இருப்பதால் இதை எதிர்த்து, அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

*SRI M. P. SUBRAMANYAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, சட்டத்தின் பூராவான உட்கருத்தே இந்த இரண்டாவது ஷரத்தில் தான் அடங்கியிருக்கின்றது. அதுவும் இந்த ஷரத்து 5 வது உட்பிரிவு மிக மிக முக்கியமானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஐந்தாவது பிரிவில் இங்குள்ள எந்த வகுப்பாருடைய மத உணர்ச்சியையும், மத நம்பிக்கையையும் புண்படுத்தும் வகையில் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் நடிக்கப்பட்டால் அது தடை செய்யப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஒரு சாராருடைய மத உணர்ச்சி, ஒரு சாராருடைய மத நம்பிக்கை என்றால் எந்தச்சாராருடைய மத உணர்ச்சி, எந்தச் சாராருடைய மத நம்பிக்கை என்று யார் தீர்மானிப்பது. ஆத்திரப்படுகின்றவனுக்கு அறிவுக்குறைவு ஏற்படும் என்ற கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மாதிரியாக உணர்ச்சி மேலிட்டவர்களுக்கும் நம்பிக்கையுள்ளவர்களுக்கும் அறிவுக் குறைவு ஏற்படுகிறது. ஒரு விஷயத்தில் நம்பிக்கை மிகுந்து போனால் அதிலுள்ள குறைபாடுகளை எல்லாம் காணக்கூடிய அறிவு திறனையும் அவர்கள் இழந்துவிடுகிறார்கள். எது உண்மை, எது பொய் என

அறிந்து பாகுபடுத்திக்கொள்ளும் சக்தியையும் இழந்துவிடுகிறார்கள். குறிப்பாகநமது ஹிந்து மதத்திலே பல ஆபாசமான புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. அதிலுள்ள குறைபாடுகளை எல்லாம் நாங்கள் எடுத்துக்காட்டும் போது மதத்தைப் பற்றி துஷ்பிரசாரம் செய்ய வேண்டுமென்ற கருத்தோடு அதனைச் செய்யவில்லை. மூட நம்பிக்கையில் இருக்கின்றவர்களுக்கு எல்லாம் அந்த ஆபாசமான கருத்துக்களை எடுத்துக்காட்டும் நம் மதத்திலுள்ள மாசுகளை எல்லாம் அகற்றவேண்டுமென்பதுதான் எங்கள் கொள்கை. அந்தத் துறையில் ஈடுபடுபவர்களின் நிலைமை இந்தச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

3-30 p.m. "நமது ஹிந்து சமுதாயத்தில் எல்லா துறையிலும் மதம் குறுக்கிடுகிறது. எந்த காரியம் சென்றாலும் இந்த மதம் குறுக்கிடுகிறது. அவ்விதம் மதத்தைக் கொண்டு வந்து குறுக்கிட்டால் இந்தக் காலத்தில் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது மதத்தைப் புண்படுத்துகிறது என்று சொல்லலாம். உதாரணமாக சிலை வணக்கம் கூடாது என்போரும், வேண்டுமென்று சொல்வோரும் இந்து மதத்தில் உள்ளனர். ஒன்றை வற்புறுத்தினால் மற்றொரு சாராருக்கு மனது புண்படும். அது எந்த அளவிற்கு மத உணர்ச்சியை புண்படுத்தும் என்பது யாரும் அறுதியிட்டு கூற இயலாது. ஆகவே மத விஷயமாக புண்படுகிறது என்று சொல்வதற்கு எந்த அளவுகோலும் இடையாது. மதத்தில் நம்பிக்கை வைத்துக்கொண்டு பல வருஷங்களாக காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படிதான் பழக்க வழக்கங்களும் நடந்து கொண்டு வருகிறது. சுமார் 2,500 வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட கதைகளை வைத்துக்கொண்டும் புராணங்களை வைத்துக் கொண்டும் இப்பொழுது நடக்க வேண்டும் என்று சொல்வது கூடாது என்று சொன்னால் அது புண்படச் செய்வதாகுமா ? இப்பொழுது முற்போக்கான காரியங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது சுய மரியாதைக்காரர்களுடையவும் கம்யூனிஸ்ட்களுடையவும் பிரச்னையல்ல. எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி முற்போக்குக்கு இந்த மசோதா தடையாக உள்ளது ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு இதை பார்க்கவேண்டும். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட பழக்க வழக்கங்களை வைத்துக் கொண்டு இப்பொழுது நடக்க வேண்டுமென்று அதற்கு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்றால் அது தவறு செய்வதாகும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக சமுதாய சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நடிக்கிறவர்களிடம் புராணத்தைப் பற்றியும் இதிகாசத்தைப் பற்றியும் பேசினால் அவர்கள் நம்ப மாட்டார்கள். மக்களும் நம்ப மாட்டார்கள். அப்படி நம்ப வேண்டும் என்றால் காங்கிரஸ் அரசாங்கம் தவறு செய்வதாகும், என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். முற்போக்கான நாடகங்களை நடத்திக் காண்பிப்பதை காங்கிரஸ் அரசாங்கம் விரும்பாவிட்டாலும் அதை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ராமாயணத்தைப் பற்றி நடிப்பதனால் ஹிந்து மதத்தை புண்படுத்தியதாகும் என்று சொன்னால் அதை யாரும் நம்பமுடியாது. அதை எப்படி வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளலாம்.

"அடுத்தபடியாக ஐந்தாவது உட்பிரிவிற்கு நான் கொடுத்திருக்கும் திருத்தத்தைப்பற்றி பேசும்போது அதாவது '**It is deliberately**' என்ற வார்த்தைகளுக்குப் பிறகு "**and maliciously**" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஒருவன் கெட்ட எண்ணத்துடன் செய்கையைச் செய்தால்தான் அவன் பேரில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். உத்யோகஸ்தர்கள் சரியானபடி நடக்க மாட்டார்கள் என்ற காரணத்தால் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். எந்த அளவில் புண்படுத்தப்படுகிறது என்பதற்கு எந்த அளவுகோலும் இல்லாமல் இருப்பதால் நிர்வாக உத்யோகஸ்தர்கள் தங்கள் மனதில் என்ன தோன்றுகிறதோ அதைக் கருத்தில் வைத்துக் கொண்டு எந்த நாடகத்தையும் தடை செய்து விடலாம். அப்படி இல்லாம

21st December 1954] [Sri M. P. Subramanyam]

லிருப்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இப்பொழுது இருக்கும் நிலைமையில் எந்தநாடகத்தையும புண்படுத்தக் கூடியது என்று சொல்லி விடலாம். அந்த முறையில் இந்தச் சட்டத்தை ஒப்புக்கொள்ள நான் தயாராக இல்லை. இந்தச் சட்டத்தை ஒப்புக்கொண்டால் மக்களின் முற்போக்கு அடைய வேண்டிய காரியங்களுக்கு தடையாக இருக்கிறது. அதனால்தான் இந்தச் சட்டத்தின் ஐந்தாவது ஷரத்தை அப்படியே நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். அதற்காகத்தான் நாங்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். நம் நாட்டிலுள்ள மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும். முற்போக்கான வேலைகள் துரிதமாக நடைபெற வேண்டும்.'' (முடிப்பதற்குள் மணி அடிக்கப்பட்டது.)

Sri C. KANDASAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தில் இரண்டாவது செக்ஷன்தான் மிகவும் முக்கியமான செக்ஷன். அதில் இருக்கக் கூடிய நிர்ப்பந்தம் பெரிய அளவில் இருக்கிறது. கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கும் வகையில் பலர் பலவகையில் பேசி விட்டார்கள். இருந்தாலும் சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். இன்று காலையில் கனம் நிதி மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது அவர் கூறிய வாதங்களைக் கவனித்தால் அது இன்னும் எங்களுக்கு இருக்கக் கூடிய அபிப்பிராயத்தையே பலப்படுத்தக் கூடியதாக இருந்தது. குறிப்பாக நாங்கள் கேட்டதற்கு நாடகத்தைப் பற்றிய லிஸ்டை கொடுக்க முடியாது என்றும் எந்த நாடகத்தில் பலாத்கார முறை தூண்டப்பட்டது என்பதைப் பற்றியும் லிஸ்ட் கொடுக்க முடியாது என்றும் கூறினார். வரப்போகிற காலத்தில் நாடகங்களில் நடப்பதைத் தடை செய்ய மசோதாவைக்கொண்டு வருகிறோம் என்றும் சொன்னார். அந்த அளவில் உண்மையை அவர் ஒப்புக் கொண்டதற்கு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். கம்யூனிஸ்ட் கட்சி பலாத்கார முறையைக் கொண்டுள்ளவர்கள் என்ற அடிப்படையில் இந்த செக்ஷன்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தமாதிரியான முடிவிற்கு வரவேண்டிய ஆஸ்பதம் என்ன என்பதுதான் எங்களால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்த நிலைமைக்கு வரவேண்டியதற்கு ஆஸ்பதம் என்ன ? கம்யூனிஸ்ட் கட்சி ஒரு நாளும் பலாத்காரத்தை விரும்பமாட்டார்கள். அவர்கள் ஜனங்களுடைய அபிப்பிராயப்படி நடக்கக்கூடியவர்கள். அவ்வித நிலைமையில் பலாத்காரம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. இந்த செக்ஷனை வைத்துக்கொண்டு அவர்களை அடக்குவது என்பது முடியாது. அவர்கள் வெறும் புழு, பூச்சிகள் அல்ல. இந்த செக்ஷனைக் கொண்டு, இந்தச்சட்டத்தைக்கொண்டு அவர்களைத் தடுத்து அடக்க முடியாது. அவர்களைப்பூச்சாண்டி காட்டி மறைப்பதும் சரியல்ல. இதைப்போலவே பல விஷயங்களில் அவர்கள் எதிர்க்கப்படுகிறார்கள். 3-40 p.m.

"நாடகங்கள் சம்பந்தமாக சொல்லும்போது இப்படிப்பட்ட சட்டத்தை இயற்றுவதற்கு ஆஸ்பதங்கள் என்ன என்பதுதான் தெரியவில்லை. அதற்குக் காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால் பின்னால் வரப்போகிற காலத்தில் இதற்கு அவசியம் ஏற்படும் என்று கற்பனை செய்து கொண்டு கம்யூனிஸ்டுகள் அவர்களுடைய பிரசாரங்களைத் தடுத்தால் என்ன செய்வது என்று ஒரு சட்டம் கொண்டு வருவது என்றால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்றைக்கு நீங்கள் அரசியல் சட்டத்தைப்பற்றி பிரமாதமாகப் பேசலாம். இந்த அரசியல் அமைப்பின்படி இவர்கள் எந்த அளவில் நடந்துகொண்டு வருகிறார்கள் என்பதையும் எந்த அளவில் இவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். நாங்களும் பார்த்துக்கொண்டு வருகிறோம். இந்த மூன்று வருஷ காலமாக இந்த மந்திரி சபை எந்த அளவில் அரசியல் சட்டத்திற்கு கௌரவம் கொடுத்து வருகிறது என்பது. மக்களுடைய வோட்டுகளைப் பெறுமல்கூட மந்திரிகளாக வர முடியும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். வோட்டுகள் வாங்காமல் கூட மந்திரிசபைக்கு வர முடியும் என்பதையும் காட்டி விட்டார்கள். அந்த முறையில் தான் சட்டத்தையும் கொண்டு வருகிறார்கள். வரப்போகும் தேர்தலில் தங்களுக்கு வேண்டாத கட்சியை அடக்குவ

[Sri C. Kanadasamy] [21st December 1954

தற்கும் எதிர்க்கட்சிகள் தங்களுடைய கொள்கைகளை சொல்லுவதற்கு இடம் கொடுக்காமல் அவைகளைத் தடுப்பதற்கும் இந்தச் சட்டத்தைப் பிரயோசனப்படுத்தலாம். அப்படி பிரயோசனப்படக் கூடிய அளவில் அதிகாரத்தை கலெக்டர்களுக்குக் கொடுப்பது என்பது சரியல்ல. இரண்டாவது கிளாஸ் 4-ஆவது உப பிரிவில் "**against any other section of the citizens of India**" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு விரிவான விளக்கம் கொடுக்கப்படவில்லை. ஜாதிக் கலவரங்களைக் கிளப்பும் போது அதைத் தடுக்க இந்தச் சட்டம் இயற்றபடுகிறது என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. இந்த செக்ஷனை வைத்துக்கொண்டு பின்னால் வியாக்யானம் செய்யப் பார்ப்பார்கள். எதிர்க் கட்சியின் பேரிலும், இந்த செக்ஷனை வைத்துக்கொண்டு, ஏழை விவசாயிகளின் பேரிலும் நடவடிக்கை எடுப்பதற்கு பிரயோசனப்படுத்திக் கொள்ளுவார்கள். இந்தச் சட்டம் மோசமான நிலைமைக்குக் கொண்டு போய்விடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால் இந்த செக்ஷனை எங்களால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அத்துடன் முதலாவது பிரிவில் இருக்கும் "**likely**" என்ற வார்த்தையையும் எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI S. DAIVASIGAMONEY :—" Sir, there are two amendments standing in my name: I would say a few words in justification of my amendments. In clause 2, sub-clause (1), items (iv) and (v), the words 'citizens of India' are used. I wish that the words 'citizens of the State of Madras' be substituted for those words. This legislation is a local or a special one and it is applicable only to the State of Madras. The term 'citizens of India' is a very broad one. It includes citizens of the Bombay State, the Andhra State and any other State. If a parody is enacted by any citizen outside the Madras State, we have no power to take action against that person. This legislation can contemplate an action only against a citizen of the State of Madras. The Bill itself says that it is applicable only to the State of Madras. Therefore, I submit that the words 'citizens of India' are unnecessary. There is also another argument against the use of the words 'citizens of India' in this sub-clause. Suppose some dramatic Society comes to the State of Madras and enacts a drama which it has already prepared and in that drama there are certain portions which may wound the feelings of the citizens of Madras, then, what is the action that the Government of Madras can take against that society? Some time ago the World Rearmament Force came here and they also enacted a drama. In respect of such dramas the State cannot expect the script or the contents thereof to be given to them. In case such dramas wound the feelings of some people, can the State take action with regard to it? Suppose a person wounds the feelings of a class of persons, can action be taken against him? Action can be taken only when there is an imminence or a likelihood of breach of the peace. If a drama is enacted in Pondicherry or outside the State of Madras, we cannot take action on the ground that there is a likelihood of breach of the peace. Suppose a drama deprecating the citizens of Madras or even the Government of Madras is enacted in the Andhra State, even then, we cannot take action. Therefore, I say that we should confine our action to the citizens of Madras.

There is another amendment of mine which runs as follows :—

'In Explanation I under item (1), add at the end the words "or so made with a view to diffuse knowledge and enlightenment to the public".'

From the speech of the Hon. the Finance Minister I find that he is in entire agreement with me. He agrees that dramas which are intended to diffuse knowledge among the public so that they may lead a better life will not be prohibited. Explanation I says—

'A performance shall not be deemed to be objectionable merely because in the course thereof words are uttered, or signs or visible representations are made, expressing disapprobation or criticism of any law or of any policy or administrative action of the Government with a view to obtain its alteration or redress by lawful means.'

I only wish to add at the end of the above Explanation, the words 'or so made with a view to diffuse knowledge and enlightenment to the public'. I hope these amendments will be accepted.''

MR. SPEAKER :—''After this clause is passed, I think I can finish the rest of the clauses in an hour.''

SRI S. SWAYAMPRAKASAM :—''கனம் அவைத் தலைவர் அவர்களே, நான் பேச விரும்புவது இரண்டாவது திருத்தங்கள்பற்றி. இதில் 5-வது ஷரத்தில் . . . என்று வருவதை என்று வருவதாக சேர்த்துக்கொள்ளவேண்டும். சமூகத்தைத் திருத்தவேண்டிய நாடகமாக இருந்தால் இந்தச் சட்டத்தைத் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறேன். இந்தத் திருத்தம் முக்கியமாக இருப்பதனால் கனம் நிதிமந்திரி அவர்களிடம் முறையிட்டுக்கொள்வதென்னவென்றால் இந்தத்திருத்தம் பூராவும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கிறேன். பொறுக்குக் கமிட்டியிலும் இதைப் பற்றிப் பேசினோம். ஆனால் என்ன காரணத்தாலோ, இதைப்பற்றி நிதி மந்திரியார் யாதொரு பதிலும் தெரிவிக்கவில்லை. எப்படியென்றால் சொன்னவற்றை அப்படியே ஒப்புக்கொள்வதாகத்தான் அர்த்தமாகும். அவருடைய மனது என்னவென்று அறிய முடியவில்லை. அவர் இப்பொழுது ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். ஹைக்கோர்டு ஜட்ஜாக இருப்பவரும் மனிதன்தான், கடவுள் அல்ல. நான் எப்பொழுதும் வக்கீலாக இருப்பதாகச்சொல்கிறேன். ஆகவே கனம் நிதி மந்திரியாரைத் தீர்ப்புத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **(Sri S. Ramalingam occupied the Chair)** என்று சொல்லப் படுகிறது. ஒரு சட்டம் கொண்டுவரவேண்டுமானால், மக்களுக்காக சட்டமா அல்லது சட்டத்திற்காக மக்களா என்று யோசித்துப்பார்க்கவேண்டும். மக்களுக்கு மதம் அவசியமா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டில் எத்தனை ஜாதி, எத்தனை மதம் என்று சொல்ல முடியாமல் நூற்றுக்கணக்கான மதங்களும், ஜாதிகளும் இருக்கின்றன. இந்தச் சட்டத்தில் மதம் என்பது என்ன என்று குறிப்பிடவேயில்லை. அப்படியிருக்கும்போது மதக் கொள்கையை மாத்திரம் எப்படி குறிப்பிட முடியும். மனிதன் எப்பொழுதும் மாற்றிக்கொள்ள முடியும் என்பதை சுவாமி சகஜானந்தா முன்பு சைவப்பழமாகக் காட்சி அளித்தார், இன்றைக்கு வீபூதிப்போய் வைணவ ராமபக்தராக காட்சி அளிப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைக்கு சமூக உணர்ச்சி மனிதன் அறிவுக்கு உகந்த முறையிலே மாறிக் கொண்டே போகிறது. ஆதலால் மதமும் மாறுகிறது. மனிதனை உணர்ந்து அதன்படி நடப்பதுதான் ஜனநாயகத்தின் முக்கியமான கடமையாகும். அப்பொழுதுதான் ஜனநாயகம் வெற்றியடைய முடியும். கடமையை மறந்து உரிமையை மட்டும் பேசினால் ஜனநாயகம் வளர்ச்சியடைய முடியாது.

மக்களுக்குப் பணி செய்கின்றவன் கடவுளுக்குப் பணி செய்கின்றவன் ஆகின்றான். மக்களுக்குச் செய்கின்ற பணி கடவுளுக்குச் செய்கின்ற பணியாக 3-50 p.m.

ஆகின்றது என்று கூறியிருக்கிறார்கள் நம் நாட்டவர்கள். அதனால்தான் என் கடன் பணி செய்து கிடப்பதே என்றார் ஒரு பக்தர். ஆகவே சாதாரணமாக மக்களுக்குப் பணி மட்டும் செய்து கொண்டேயிருப்போமானால் அதுவே மதம் என்ற முறையில் ஒரு சமுதாய சீர்திருத்த நாடகம் போடுகின்றேன். அந்த நாடகம் இந்தச் சட்டத்தால் தடை செய்யப்படுமா, நிச்சயமாகத் தடை செய்யப்படும் என்பதே எங்கள் அபிப்பிராயம்.

" அதோடு தமிழ் நாட்டில் சமுதாய வளர்ச்சிக்கான பல சீர்திருத்தக் கருத்துக்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றது. சமுதாயக் கட்டுக் கோப்பைக் குலைத்துவிட வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தால் அவைகள் வளரவில்லை. நல்ல எண்ணத்தால்தான் அவைகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. அப்படிப்பட்ட கருத்துக்களுக்கு எல்லாம் இந்தச் சட்டம் நிச்சயமாகத் தடை போட்டுவிடுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

" அரசியல் சட்டத்திற்கு விரோதமாகவே கூட இந்தச் சட்டம் அமுல் செய்யப்படுமென்று நான் பயப்படுகிறேன். நாட்டிலே பல பல முன்னேற்றம் நாளுக்கு நாள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் நான் சிறு பிள்ளையாக இருக்கிறபோது குடுமி வைத்துக் கொண்டிருப்பது மதக் கொள்கை என்று அறிந்திருந்தேன். குடுமி வைத்துக் கொண்டிருந்தால்தான் மத சம்பந்தமான காரியங்களைச் செய்ய அனுமதிப்பார்கள். இல்லாதுபோனால் கிராமத்திலுள்ளவர்களில் குடுமி வைத்துக் கொள்ளாதவர்களையே ஒதுக்கிவிடும் பழக்கம் கூட இருந்தது. இன்றைக்கு அந்தக் கருத்து அடியோடு மாற்றப்பட்டுவிட்டதைப் பார்க்கிறோம். இப்படி சமுதாயத்தில் பல பல மாறுதல்கள் எல்லாம் காலத்தை ஒட்டி ஏற்பட்டுக்கொண்டிருக்கும்போது இதுமாதிரியான சட்டம் வருவது ரொம்பவும் வருந்த வேண்டியதாகும். அதோடு இந்த ஷரத்து ரொம்பவும் மோசமானது. அதுவும் மதத்தைப் புண்படுத்தும் வகையில் என்று சொல்லும் செக்ஷன் ரொம்பவும் மோசமானது. யார் மனத்தைப் புண்படுத்தும் வகையில் என்பதற்குச் சரியான பதில் கொடுக்க முடியாது. ஆகவே இந்த செக்ஷனையாவது எடுத்துவிடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

Sri M. KALYANASUNDARAM :—" கனம் சார்மென் அவர்களே, இப்பொழுது நான் கொடுத்திருக்கக் கூடியதிருத்தங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகின்றேன். இரண்டாவது ஷரத்தின் முதல் பிரிவில் ஆட்சேபகரமான நாடகங்களுக்கு விளக்கம் செய்வதில் **'likely'** என்ற ஆங்கில வார்த்தைக்கு ஆட்சேபகரமானது என்று தீர்மானிப்பதில் சந்தேகம் ஏற்பட்டாலும் அது ஆட்சேபகரமானது என்று தீர்மானிக்கக் கூடிய அர்த்தம் கொடுக்கிறது. ஆகவேதான் அதை எடுத்துவிட்டு **'intended'** என்ற வார்த்தையை போட வேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இது நியாயமான திருத்தம். இந்தக் கருத்தை நிதி மந்திரி அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்தத் திருத்தத்தையும் ஒப்புக்கொள்வார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

" இன்னும் ஐந்தாவது ஷரத்தில் "

'. . deliberately intended to outrage the religious feelings of any class of the citizens of India by insulting or blaspheming or profaning the religion or religious beliefs of that class.'

இது மிகவும் விரிந்த அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இதற்கு முன் ஒரு விஷயம் விவாதத்திற்கு வந்த காலத்தில் கனம் மந்திரி அவர்கள் சொன்ன வார்த்தை எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. மதக் கருத்துக்களை மத சீர்திருத்த உணர்ச்சிகளைக் கொண்ட நாடகங்களைத் தடுக்க வேண்டிய எண்ணம் எங்களுக்குக் கிடையாது, வேண்டுமென்றே துவேஷத்தை உண்டாக்கக் கூடிய முறையில்,

பிற சமூகத்தாரைக் கிண்டல் செய்யக் கூடிய முறையில் நடிக்கப்படும் நாடகங்களைத் தடுக்க வேண்டுமென்பதே எங்கள் நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

" இந்தச் சட்டப்படி பார்த்தால் மதத்தைப்பற்றி எதாவது கொஞ்சம் குறைவாகச் சொல்லிவிட்டாலும் அது ஆபத்தாகப் போய்விடுமென்ற நிலைமையில் இந்தத் திருத்தம் இருக்கிறது என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

" என்னுடைய கையில் ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரி இருக்கிறது. அதில் **blaspheme** என்பதற்கு **Talk impiously, utter profanity about** என்று அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அறிந்தபடி அதன் பொருளைக் கொண்டு பார்த்தால் கொஞ்சம் பயபக்திக் குறைவாக பேசினாலே போதுமானது அந்த நாடகத்தைத் தடை செய்ய. அதைப் போலவே **Profane** என்பதற்கு **Treat (sacred thing) with irreverence or disregard** என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் பொருள்படி புனிதமிக்கதாகக் கருதக்கூடிய ஒரு பொருளை, தூய்மையானதாகக் கருதக் கூடிய ஒரு பொருளை கொஞ்சம் ஆட்சேபகரமான முறையில் குறைவாகப் பேசிவிட்டாலே போதும். இப்படிப்பட்ட விரிவான பொருளைக் கொண்ட வார்த்தைகள் இருக்குமானால் மத சம்பந்தமான மூட நம்பிக்கைகளை எடுத்துக் காட்டக் கூடிய வகையில் அல்லது புராதனக் கதைகளை தற்கால விஞ்ஞான அறிவு வளர்ச்சியை ஒத்து வைத்து எந்தக் கருத்தையும் எடுத்துச் சொல்வது கஷ்டமாகப் போய்விடும். ஆகவேதான் இந்த ஷரத்தை நான் பலமாக ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் ஷரத்தை அப்படியே ஒப்புக்கொண்டால் மதசம்பந்தமாகக் கருதக் கூடிய விஷயங்களை அல்லது மதத்தைச் சார்ந்திருக்கக் கூடியவர்களை புண்படுத்தும் என்ற முறையில் 4 p.m எல்லா முற்போக்குக் கருத்துக்களுக்குமே தடை ஏற்பட்டுவிடும் என்பது என் அபிப்பிராயம்.

" இங்கிலீஷ் டிக்ஷனரியில் ஆங்கில ஆசிரியர் கொடுத்திருக்கும் அர்த்தத்தைதான் இந்த வார்த்தைக்கு **(blaspheme ; profane)** எடுத்துக்கொள்ள முடியும். நாளைக்குக் கோர்ட்டுக்குப் போனால்கூட அந்த அர்த்தம்தான் செல்லுபடியாகும். கனம் நிதி மந்திரி அவர்கள் கொடுக்கும் அர்த்தம் செல்லுபடியாகாது. இந்த வார்த்தைகள் இருக்கும் வரையில் மத சம்பந்தமான எந்த நாடகத்தையும் நடத்த சாத்தியம் இல்லாமல் போய்விடும். அதோடுகூட சர்க்கார் எந்த சீர்திருத்தத்தை விரும்புகிறார்களோ அந்தச் சீர்திருத்தம்தான் அனுமதிக்கப்படும் என்ற நிலைமைக்கு வரும். ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் சீர்திருத்தங்களைச்செய்ய முடியாது. மத சம்பந்தமான எந்த சீர்திருத்தத்தையும் செய்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆனால் கம்யூனிஸ்ட்களுக்கு மத சம்பந்தமான நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் கிடையாது. அவர்களுக்கு தெய்வத்தை நம்ப வேண்டிய அவசியம் இல்லை. தன்னைத்தானே அவர்கள் பாதுகாத்துக்கொள்ளுவார்கள். மக்களுடைய மூடப் பழக்க வழக்கங்களை போக்கிவிடவேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை.

தன்படி திருத்தங்களைக் கொண்டு வந்தால் அதை விட்டுவிட்டு கனம் நிதி மந்திரி அவர்கள் காலையில் பேசும்போது கம்யூனிஸ்ட்களின் அடக்கு முறையைப் பற்றியும், பலாத்காரத்தைப் பற்றியும் ஒரு விரிவான பிரசங்கம் செய்கிறார். இதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு எதிர்க் கட்சியைப்பற்றிப்பேச ஆரம்பித்துவிட்டார். அவரைப்போல் பேசுவதற்கு எங்களுக்கும் உரிமை வேண்டும். இந்தமாதிரியான அடக்குமுறைச் சட்டம் பயன்படப் போவதில்லை. இந்தமாதிரியான சட்டங்களை இயற்றி அதனால் கம்யூனிஸ்ட் கட்சியை அடக்கிவிட முடியாது. எந்த அடக்குமுறை சட்டத்தினாலும் அவர்களை அடக்கிவிட முடியாது. அதில் அவர்கள் வெற்றியடையப்போவதும் இல்லை. கம்யூனிஸ்ட்களுக்கு மக்களுடைய சக்தியில் நம்பிக்கை உண்டு. ஜாதி மதம் சம்பந்தமாகக் குறுக்கிட்டு வெற்றியடைய வேண்டும் என்பது கம்யூனிஸ்ட்டுகளுக்கு கிடையாது. மத சம்பந்தமான

திருத்தத்தை எடுத்துவிட்டு மற்ற ஷரத்துக்களுக்கு எங்களுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

(Mr. Speaker in the Chair.)

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, various amendments have been moved to this clause and particularly a point was made that a differentiation has been made with reference to the first four items of sub-clause (1) of clause 2 and item (v) of that sub-clause. It was said that for the first four items the expression 'likely to create' is used whereas for the fifth item, the expression 'deliberately intended' is specifically used, I may tell hon. Members that we have adopted these expressions knowingly. As far as preaching of violence is concerned or incitement to commit offences involving violence is concerned, we have to take the effect as a whole rather than the intention. That is why in respect of these matters involving violence we have advisely used the expression 'likely to create'. I do not think we can remove that. As far as violence is concerned we cannot be going about finding out the intention of the people when as a matter of fact it is likely to incite people to commit violence or offences involving violence. Then it was said that if *bona fide* people wanted to reform society and for that purpose they wanted to enact dramas and propagate certain ideas that should not be prohibited. But in doing that if they deliberately hurt the feelings of the people, we cannot allow it. We have to intervene at that stage. That is why purposely a distinction has been made with reference to religious ideas and religious beliefs and with reference to propagating ideas involving violence and offences involving violence. That is the justification for making a difference between the first four items and the fifth item. As regards the first four items I do not think, I need explain the position any further than what I had already done when I submitted the report of the Select Committee and the Bill as amended for the consideration of the House and also when I replied this morning to the general discussion on the Bill.

" Then, Sir, with reference to item (v) certain apprehensions were raised and it is necessary for me to reiterate the stand of the Government on this question. As I have already stated, we have put in that clause words to show that it is not in the case of every drama, wherein disapprobation or even insult to religion, or profaning blaspheming religion or any such thing takes place, that the Government would interfere and say that the drama is objectionable but only when the drama is used deliberately for certain purposes, or is intended for certain purposes, then only it will be taken into account and under no other circumstances. That being so, there is absolutely no need for anybody to entertain the idea or fear that propaganda for the purpose of social reform or for purposes of reforming society according to their conceptions would be interfered with by the Government. But that occasion should not be

21st December 1954] [Sri C. Subramaniam]

taken advantage of for the purpose of wounding the feelings of others. My own view is, as was pointed out by the hon. the Leader of the Opposition and the hon. the Deputy Leader of the Opposition, that by insulting or wounding the feelings of other people, we cannot reform society. On the other hand, we will only be strengthening them in their attitude and making them more and more obstinate. Therefore, if our object is to reform society and remove what we consider is evil in society—if that is our only intention—there is absolutely no necessity to go about and deliberately wound the feelings of anybody else. If only hon. Members would read into the words 'deliberately intended' the proper meaning, then certainly they will appreciate the point of view I am putting forward. We have further explained our intention in Explanation II. It is not any particular act, any particular incident or any particular scene or particular words in a drama that would be construed as coming under the objectionable portion of the law. Taking the drama as a whole, if we come to the conclusion that it is deliberately intended for the purpose of wounding the feelings of others, then only will the drama become objectionable. If this is taken into consideration there can be absolutely no fear that certain words uttered, certain incidents enacted in particular places and so on will make the drama objectionable. After all do we want for the purpose of reforming society to deliberately wound the feelings of others? I am sure no person who is really interested in social reform would go to the extent of thinking that he can reform society only by deliberately wounding the feelings of others. If the clause is read together with the explanation that we have given, I respectfully submit that there is no room to fear that this provision would be misused and progressive ideas would be shut out. After all each man will have his own ideas about progress. That is a different matter altogether. All that will not be interfered with. That is why this language has been deliberately used—if I may use the same word that we have used in this particular clause. I am afraid Government cannot go further than this. In the Select Committee stage itself, we have taken notice of all these objections and we have tried to remove the apprehensions in the minds of the people. Under these circumstances, I don't think Government will be able to accept any of these amendments with reference to this clause.

"Their, Sir, the hon. Member Sri Daivasigamoney was making a point about the expression 'citizens of India' adopted in the clause. He wanted that the words 'citizens of the State of Madras' should be substituted. I do not know wherefrom he got this idea. There is no such thing as 'citizens of the State of Madras'. We have only 'citizens of the Union'. It may be, people are 'residents of the Madras State'. That does not create a separate category as 'citizens of Madras State'. 'Citizens of India' is the expression used in the Constitution. We cannot create a phrase in this law unless we amend the Constitution."

4-10 p.m. * SRI S. DAIVASIGAMONEY :—" That is why I said deliberately that the word ' citizen ' means citizen of India. ' Citizen ' is a word which can be used to refer to all persons who are residing in any part of India, whether he be in the Madras State or the Bombay State or the Andhra State. I advisedly used the word ' citizen of the State of Madras ' because it means a citizen of India who is residing in the State of Madras. But if the Hon. Minister deliberately wants to misunderstand me, he is at perfect liberty to do so."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" It means that only persons residing in the State of Madras should be protected and not others. We cannot take this view of excluding one State. We have to take into account the entire country as a whole. That is the difference in the point of view between me and the hon. Member. Therefore, he cannot ask the Government to accept the propositon that there should be a separate class of citizens as far as the Madras State is concerned and we should legislate only for them. As a matter of fact, any offence committed here will have to be taken in the All-India context and not with reference to the Madras State only. As far as offences committed in other States are concerned, we have absoltuely no jurisdiction. If an offence is committed in the Andhra State, the Andhra State will have to take action. We cannot take action here. Therefore, it is the duty of every State to protect the citizens residing in another State and we have to legislate taking the country as a whole. I am sorry it is not possible to accept the amendment of the hon. Member Sri Deivasigamoney.

" The hon. Member Sri Swayamprakasam was asking after all, what is the meaning of ' deliberate intention ', what is the meaning of ' religion ' and what is the meaning of ' religious belief '. He then pointed out that these phrases and words were incorporated by me in this Bill. Sir, these are well-known pharases used in the existing enactments and Courts have given their decisions upon them. If the hon. Member is satisfied that the words and phrases used in the Indian Penal Code and the Criminal Procedure Code are good enough and specific enough, he must also feel equally satisfied with the phrases and words used in this Bill because they are taken from those Acts. Under these circumstances, I am sorry I am unable to accept any of the amendments moved by hon. Members."

MR. SPEAKER :—" Is the hon. Member Sri Krishnan withdrawing his amendment? "

SRI R. KRISHNAN :—" I am not withdrawing it."

MR. SPEAKER :—" The question is—

' That item (1) be deleted.' "

The amendment was put and lost.

21st December 1954]

MR. SPEAKER :—" The question is—

' That in item (1), for the word " likely " in line 2, the words " intended " be substituted.' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

' That items (1) (i), (1) (ii), (1) (iii) and (1) (iv) be deleted.' "

The amendment was put and lost.

* SRI M. NARAYANA KURUP :—" Sir, I am withdrawing my amendments not because I am satisfied with the reply of the Hon. Minister but because there is no use of my pressing it."

The amendments were by leave of the House withdrawn.

MR. SPEAKER :—" The question is—

' That in item (1) (ii), the words " or any offence involving violence " be omitted.' "

The amendment was put and lost.

The amendment of Sri S. Deivasigamoney was by leave of the House withdrawn.

MR. SPEAKER :—" The question is—

(1) In item (1) (iv) in line 1, for the words " any section of the citizens ", the words " any community or nationality " be substituted.

' (2) In item (1) (iv) in line 2, for the words " any other section of the citizens ", the words " any other community or nationality ", be substituted.' "

The amendments were put and lost.

The amendment of Sri S. Daivasigamoney was by leave of the House withdrawn.

The amendment of Sri S. Daivasigamoney was by leave of the House withdrawn.

MR. SPEAKER :—" The question is—

' That item (1) (v) be omitted.' "

The amendment was put and lost.

SRI P. S. KRISHNASWAMI AYYANGAR :—" Sir, objectionable performance includes profaning of any religion or religious beliefs of any class of people . . ."

SRI K. VINAYAKAM :—" On a point of order, Sir. Is the hon. Member withdrawing his amendment or not? He cannot explain it now."

Mr. SPEAKER :—" The hon. Member should give consideration to his age and show him respect."

Is the hon. Member, Sri Krishnaswami Ayyangar withdrawing his amendment?

Sri P. S. KRISHNASWAMI AYYANGAR :—" I am withdrawing it, Sir."

The amendment of Sri P. S. Krishnaswami Ayyangar was by leave of the House withdrawn.

Mr. SPEAKER :—" The hon. Member Sri Muthu is not in his place. His amendment is deemed to have been withdrawn."

Mr. SPEAKER :—" The hon. Member Sri Gopala Goundar is not in his place. His amendment is deemed to have been withdrawn."

Mr. SPEAKER :—" The question is—

' That for item (1) (v), the following be substituted :—

" (v) slander intentionally and maliciously the revered religious characters whom the people held as Gods." ' "

The amendment was put and lost.

The amendment of Sri S. Daivasigamoney was by leave of the House withdrawn.

Mr. SPEAKER :—" That for item (1), the following be substituted :—

' (1) objectionable performance means any play, pantomime or other drama—

(i) which is grossly indecent or obscene or intended for blackmail and declared by order to be an objectionable performance under section 4; or

(ii) which is likely to promote feelings of communal hatred among the people of India.' "

The amendment was put and lost.

The amendment of Sri Muthu was by leave of the House withdrawn.

The amendment of Sri Narayana Kurup was by leave of the House withdrawn.

Mr. SPEAKER :—" The question is—

' That in Explanation I under item (1) the words " or so made with a view to diffuse knowledge and enlightenment to the public " be added at the end.' "

The amendment was put and lost.

21st December 1954]

MR. SPEAKER :—" The question is—

' That after the existing Explanation II under item (1) the following new Explanation be inserted :—

" *Explanation III.*—A performance shall not be deemed to be objectionable merely because words are uttered or signs or visible representations are made in the course thereof either expressing disapprobation or criticism of any superstitious beliefs of any class of the citizens of India or tending towards the promotion of social justice or reform." ' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

' That at the end of item (2), the words " by tickets " be added.' "

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clause 3.

MR. SPEAKER :—" The hon. Member Sri Gopalan cannot move his amendment. He can oppose the clause."

SRI P. RAMAMURTHI :—" Sir, I move—

' *That for the existing clause* 3, substitute *the following* :—

" 3. Prohibition of objectionable performances.—(1) *Whenever the State Government are or a District Magistrate is of the opinion that any play, pantomime or other drama performed or about to be performed in a public place is an objectionable performance, the Court of Sessions may be moved to take proceedings, according to the procedure prescribed in this clause.*

(2) *If a Court of Sessions receives information to the effect that any play, pantomine or drama performed or about to be performed is an objectionable performance and is of opinion that it should be prohibited, the Court of Sessions shall issue notice to the organizer or principal persons responsible for the conduct of the performance to show cause why the performance should not be prohibited.*

(3) *If after hearing the person or persons on whom such notice has been served, and taking such evidence as the Court thinks necessary, it is satisfied that the performance should be prohibited, it shall pass an order accordingly.*

(4) *The procedure in respect of such enquiry shall be the same as prescribed for security proceedings under the Press Emergency Powers Act of* 1952.

[Sri P. Ramamurthi] [21st December 1954

(5) *The State Government may, if it deems necessary in public interest, pass an order prohibiting a performance declared to be an objectionable performance by any Court of Sessions, throughout the State.*

(6) *Every order made under sub-section* (5) *shall be published in the* Fort St. George Gazette." ' "

SRI M. KALYANASUNDARAM :—" I second it, Sir."

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I move—

' *In sub-clause* (1) *of clause* 3, *from the expression " performed or about to be performed "*, delete *the words " performed or "*.

' After *the expression " about to be performed "*, add *the words " or repeated "*.

' After *the expression " about to be performed "*, add *the words " or re-enacted "*.

' At *the end*, add *the expression " in general "*.

' *At the end*, add *the expression " in any part of the State ".' "*

SRI G. GOVINDAN :—" I second it."

SRI C. KANDASAMY :—" Sir, I move—

' *That in sub-clause* (1) *in line* 3, omit *the words " or about to be performed ".' "*

SRI S. RAMALINGAM :—" I second it."

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' *That at the end of sub-clause* (1), *the words " provided a certificate was issued by the Advocate-General to the effect that the drama is objectionable " be added.' "*

SRI C. KANDASAMY :—" I second it."

SRI A. RATNAM :—" Sir, I move—

' *That in sub-clause* (2) *after the words " reasonable opportunity "*, insert *the words " and one month's time ".' "*

SRI S. DAIVASIGAMONEY :—" I second it."

SRI R. KRISHNAN :—" Sir. I move—

' *That in sub-clause* (2), omit *the words " or to the owner or occupier of the public place in which such performance is intended to take place ".' "*

SRI C. KANDASAMY :—" I second it."

21st December 1954]

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I move—

'*That at the end of sub-clause* (4) *the words* " *to organize the same and take up the responsibility for the conduct thereof* " *be added.*' "

SRI G. GOVINDAN :—" I second it."

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I move—

'*That after item* (4), add *the following* :—

" *The State Government may proscibe any objectionable performance and may seize, confiscate and destroy all copies thereof—whether manuscript, printed, lithographed, cyclostyled, typewritten or otherwise.*" ' "

SRI G. GOVINDAN :—" I second it."

MR. SPEAKER :—" Now clause 3 and the amendments are before the House for discussion."

SRI P. RAMAMURTHI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் மூன்றாவது கிளாஸில் முக்கியமானதென்று கூறினார்கள். அரசியல் சட்டத்தில் மக்களுக்கு ஜீவாதார உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அவைகள் புனிதத்தன்மை வாய்ந்தன என்று கூறப்படுகிறது. அப்படியிருக்கும்போது அந்தவிஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கடவுள்போன்று கருதவேண்டியவிஷயம். ஜனங்களுடைய ஜீவாதார உரிமைகளை இழிவுபடுத்தக்கூடிய வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைக் கையாளும்போது மிகவும் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய தவசியம். இந்த விஷயத்தில் அதைக்கூறுவதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கவேண்டும் என்பதுதான் இங்கு அடங்கி இருக்கக்கூடிய விஷயம். 4-20 p.m.

" இப்போது வரும்படியான மசோதாவில் எந்தமாதிரியான ஒரு நாடகம் இருக்குமானாலும் அதைத்தடுத்துவிடலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியான ஜனநாயகம் என்பதைக்கொண்டே நான் ஒரு விஷயம் கேட்கிறேன். ஒருவன் குற்றம் புரிந்தால் குற்றம் செய்யப்பட்டிருக்கிறதென்று நீதிபதியால் நிருபிக்கப்பட்டபிறகே அந்தக்குற்றத்திற்கேற்ற தண்டனை அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது எந்தக் குற்றத்திற்காகவும் முதலில் தண்டனை கொடுக்கப்படுவது கிடையாது. எங்களுடைய உரிமைகளை பறிமுதல் செய்வதும் ஒரு தண்டனை தான். எங்களுடைய ஜீவாதார உரிமையைத் தடுத்து நிறுத்தி குற்றம் நிருபிப்பதற்கு முன்னரே ஒரு தண்டனைவழங்க இந்த நிர்வாகத்திற்கு என்ன அதிகாரம் இருக்கிறது. அந்த மாதிரியான நிலைமை இந்த நாட்டில் ஏன் இருக்கவேண்டும். இந்த நாட்டின் ஜனநாயகத்தின் பேரிலேயே நிதிமந்திரியைக் கேட்கிறேன். அதாவது நாடகம் ஆட்சேபகரமான தன்மையை உடையது என்று கருதினால் அந்த விஷயத்தை உடனடியாக ஒரு செஷன்ஸ் நீதிபதிக்கு விட்டுவிட்டு அதற்கு பின்னர் அவருடைய தீர்ப்பின்படி நாடகத்தைத் தடுக்கலாம். ஒரு நாடகம் தடைசெய்யப்பட வேண்டியதா இல்லையா என்று நிர்ணயிப்பது நீதிபதியைப் பொறுத்த விஷயம். அவர் நடிக்கக்கூடாதென்று சொல்லிவிட்டால் அந்த நாடகத்தை இநத மாகாணம் பூராவும் நடத்திவிடாமல் தடுப்பதற்கு வேண்டிய அதிகாரத்தை வேண்டுமானால் அரசாங்கம் எடுத்துக் கொள்ளட்டும். நாடகத்தை,' ஆட்க்ஷேபிக்கும்படியான பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாதென்பதை நான் மிகவும் முக்கியமாக கேட்டுக்கொள்ளு

கிறேன். இன்றைக்கு மந்திரிமார்கள் நாங்கள் ரொம்ப நேர்மையாக நடந்துக்கொள்கிறோம், அரசாங்கத்தை நம்புங்கள் என்று சொன்ன போதிலும்கூட இங்கு இருக்கும்படியான நிலைமையில் ஒரு உண்மையை மறந்துவிடக்கூடாது. இப்பொழுது நடப்பது கட்சி அரசாங்கம். எல்லா மக்களும் தேர்ந்தெடுக்கப்படுவது கட்சி மனப்பான்மை கொண்டிருக்கக் கூடிய தன்மையாகும். யாருக்கும் கட்சி மனப்பான்மை போய்விட்ட தென்று யாராவது சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவே கட்சி மனப்பான்மையை கொண்டிருக்கக்கூடிய அரசாங்கம் பதவியில் இருக்கும் அளவும் இந்தச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யும் என உத்திர வாதம் கொடுக்கமுடியாது. ஒரு கட்சியைச்சேர்ந்தவர்களுக்கு தங்கள் கட்சிக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை இந்தச்சட்டத்தின் மூலம் சிருஷ் டித்துக்கொள்ள விரும்புவார்கள். ஆகவேதான் ஒரு நாடகம் ஆட்சே பகரமா, இல்லையா என்று நிர்ணயிக்கும் பொறுப்பை நிர்வாகத்தின் கையில் கொடுக்காமல் செஷன்ஸ் ஜட்ஜ்க்கு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு உதாரணத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். **Press Objectionable Matters Act**-ன் ஷரத்துப்படி ஒருவர் ஆட்சேபகரமான விஷயம் எழுதிக்கொண்டு வருகிறார் என்று தெரிந்தால் கொடுத்துள்ள ஜாமீனைப்பறிமுதல் செய்யக் கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. ஹைக்கோர்ட்டுக்கு மனுப்போட்டு தாங்கள் எழுதியது தவறு அல்ல என்று நிருபிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. தவறாக எழுதியவர்கள் ஜாமீன் கொடுக் கவேண்டுமென்று தான் மத்திய அரசாங்கத்தில் ஒப்புக்கொண்டிருக்கி றார்கள். அதே கொள்கையை இவர்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது ? தவறாக நடிப்பவர்கள் ஜாமீன் கட்டவேண்டுமென்று சொல்லட்டும். அதை விட்டு என்பேரில் நம்பிக்கைவைய்யுங்கள், எங்கள் நேர்மையில் நம்பிக் கை வைய்யுங்கள் என்று சொன்னால் நம்பிக்கை வைக்கக்கூடிய அளவு நீங்கள் நேர்மையாக நடந்துக்கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்லு கிறோம். பகிரங்கமாக எந்தவிஷயத்தையும் நடத்துவதற்கு ஒரு சந்தர்ப்ப த்தை கொடுங்கள், ஜனங்களுக்கும் பொறுப்புணர்ச்சி உண்டு. நீங்களே ஆட்சேபகரமான நாடகங்களை நிர்ணயிக்கும் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். அதை நீதிபதிக்கு விட்டு நீங்கள் நேர்மையாக நடப்பதாக மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும் புகிறேன். எல்லா அதிகாரத்தையும் நீங்களே எடுத்துக்கொண்டால் அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு நிறைய இடம் நிச்சயமாக உண்டு. அதனால் மக்களின் ஜீவாதார உரிமைக்கே குந்தகம் விளைவிக் கக்கூடும். ஆகவே நேர்மையான முறையில் நடக்க, ஜனங்களின் நம்பிக் கைக்குப்பாத்திரர்களாக ஆக இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.''

4-26 p.m. **Sri M. KALYANASUNDARAM** :—'' கனம் சபாநாயகர் அவர்களே, நான் தோழர் ராமமூர்த்தி பிரேரேபித்து இருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

'' ஒரு நாடகம் ஆட்சேபகரமானது என்று தடை செய்யும் அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் கையில் அந்த அதிகாரம் இருக்கக் கூடாதென்பதற்கு ஸ்ரீ ராமமூர்த்தி எடுத்துக் காட்டிய காரணங்களை எல்லாம் ஆதரிப்பதோடு சர்க்காருக்கு இன்னொரு விஷயத் தையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

'' மந்திரிகள் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நடத்தை இப்பொழுதே எப்படியிருக்கிறதென்று பார்க்கலாம். அவர்கள் கையில் சில அதிகாரத்தைக் கொடுத்தாலும் அவர்கள் அதை எப்படி வகிப்பார்கள் என்பதைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். காங்கிரஸ் பொருட்காட்சி என்ற முறையில் பல இடங்களில் பல வைபவங்கள் நடக்கின்றன. அதில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிக்குக் கலை விழா என்று சொல்லுகிறார்கள். அங்கே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளில் எல்லாம் கன்னுப்பின்னுவென்று கம்யூனி

ஸ்டுக் கட்சியைத்திட்டுவது போன்ற ஆபாசமான நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கின்றன. இந்தக்கலை விழாக்களுக்கு கனம் மந்திரிகள் தலைமை வகிப்பதும், அவற்றைப்பாராட்டுவதும் நடந்துகொண்டுதான் வருகின்றது. கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் காலையில் கண்டபடி பேசினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலும் கலை விழாக்கள் நடக்கின்றன. இல்லையெனவில்லை. அந்தக்கலை விழாவில் ஏதாவது ஒரு ஆபாசமான அம்சம் இருக்கிறதென்று சொல்ல யாராவது சுட்டிக் காட்ட முடியமா ? அப்படி ஏதாவது அம்சம் இருக்குமானாலும் அதை நாங்களே தடைசெய்து விடுவோம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் அப்படி எதுவும் அவர்களுடைய கலை விழாவிலேயே பிற கட்சியை தூஷிப்பதை தடுக்க வேண்டுமென்றுகூட அபிப்பிராயப்படவில்லை. ஆகையால் தான் நாங்கள் சொல்லுகிறோம் கட்சி அரசியலின் நோக்கத்தை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்துகின்றவர்களின் கையில் ஒரு நாடகத்தைத் தடை செய்யும் அதிகாரத்தைக் கொடுக்கக் கூடாது என்று. செஷன்ஸ் நீதிபதியின் கையில் விட்டுவிட்டு அவர் தீர்ப்பின்படி அந்த நாடகம் தடுக்கப்பட வேண்டுமானால் அதை ராஜ்யம் பூராவும் தடை செய்யக்கூடிய அதிகாரத்தை எடுத்துக் கொள்வது நியாயம். ஆனால் நிதி மந்திரி அவர்கள் எந்தத் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ளவது இல்லையென்ற பிடிவாதத்தோடு உட்கார்ந்திருக்கிறார். தங்கள் கட்சிக்காரர்களையும் எந்த விதமான அபிப்பிராயத்தையும் தெரிவிக்காமல் உட்கார்ந்திருக்கும்படி செய்து விட்டார். இங்கு எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன பேசினாலும் அவற்றை எல்லாம் தன் கட்சியின் கட்டுப்பாடான மேஜாரிடி பலத்தைக் கொண்டு எதிர்த்து இந்த மசோதாவை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் உட்கார்ந்திருக்கிறார். அந்த மனப்பான்மை மிகவும் தவறானது. இந்த நியாயமான திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, the hon. Deputy Leader of the Opposition wants to decide about my partiality or impartiality, unfortunately, on the attitude I take with regard to the amendment moved by the hon. Member, Sri P. Ramamurthi. The amendment, unfortunately, is one which is not acceptable. If we accept the amendment, we are likely to create greater difficulties. After all, we do not take the entire power to decide whether a dramatic performance is objectionable or not. Under this Bill which is going to become law, it has been provided that it is for the High Court to decide whether a certain dramatic performance is objectionable or not. It has also been provided that every appeal shall be heard by a Bench of not less than two Judges. It can be very easily said that whenever an objectionable performance is performed or about to be performed, the Court of Sessions can be moved to take proceedings. The State is not confined to the jurisdiction of one Court of Sessions. One Sessions Judge may give one judgment and another Sessions Judge may give another judgment differing from the first on the same facts of the case and there may be a conflict of views. When there is a provision for appeal to the High Court, I do not see any reason why a provision should be made for a decision by any Sessions Judge? If the amendment is accepted, every case will have to be decided first in the Court of Sessions and again in the High Court. Such an arrangement is all right for the Communist Party because they have got their own lawyers to argue cases, first in the Sessions Court and then in the High Court.

But what is to happen to other parties? They may not be able to move first in the Sessions Court and again in the High Court if there is to be an appeal. Instead of that, we have provided that aggrieved parties can canvass before the High Court both with reference to points of fact and with reference to points of law. The hon. Leader of the Opposition wanted a public discussion. Certainly there will be a public discussion and canvassing about the various points in the High Court. If the Government go wrong, it is likey that the High Court will be able to pull them up better than the Sessions Court. Because we have provided an appeal to the High Court, we cannot use the provisions of this Bill indiscriminately and get strictures from the High Court. We will be very careful in using the powers given to the Government. I am unable to accept the amendment and I would request the hon. Deputy Leader of the Opposition not to judge my partiality or impartiality from the attitude I have taken with reference to this amendment.''

MR. SPEAKER :—'' The question is—

' *For* existing clause 3, *substitute* the following :—

'' 3. *Prohibition of objectionable performances.*—(1) Whenever the State Government are or a District Magistrate is of the opinion that any play, pantomime or other drama performed or about to be performed in a public place is an objectionable performance, the Court of Sessions may be moved to take proceedings, according to the procedure prescribed in this clause.

(2) If a Court of Sessions receives information to the effect that any play, pantomime or drama performed or about to be performed is an objectionable performance and is of opinion that it should be prohibited, the Court of Sessions shall issue notice to the organizer or principal persons responsible for the conduct of the performance to show cause why the performance should not be prohibited.

(3) If after hearing the person or persons on whom such notice has been served, and taking such evidence as the Court thinks necessary, it is satisfied that the performance should be prohibited, it shall pass an order accordingly.

(4) The procedure in respect of such enquiry shall be the same as prescribed for security proceedings under the Press Emergency Powers Act of 1952.

" ஏற்கனவேயே நான் குறிப்பிட்டேன், ஒரு நாடகம் ஆட்சேபகரமானது என்று நினைத்தால், அந்த நாடகத்தால் கலவரம் ஏற்படக்கூடுமென்று நினைத்தால் அந்த நாடகத்தையே நடக்கவிடாமல் தடை செய்யக்கூடிய அதிகாரத்தை எடுத்துக்கொண்டுவிட்டார்கள். கடைசி வரையில் அந்த அதிகாரி நடக்க இருக்கின்ற நாடகத்தைத் தடை செய்யும் நோக்கமே இல்லாமலிருக்கலாம். ஆனால் கடைசி நிமிஷத்தில் ஒரு ஊர்க்குருவி வந்து இதில் ஆட்சேபகரமான விஷயங்கள் அடங்கியிருக்கிறது என்று சொல்லி விட்டால் போதும், உடனே நடக்கக்கூடாது என்ற உத்தரவு சாதரா செய்யப்பட்டுவிடும். சட்டப்படி ஒரு நாடகம் நடிப்பதாய் இருந்தால் அதனுடைய 'ஸ்க்ருப்ட்' ஒரு வாரத்திற்கு முன்பாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் பதினைந்து நாட்களுக்கு முன்பே கதை அந்த அதிகாரிக்கு அனுப்பி வைக்கப் பட்டாலும் அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு நடிக்கலாம், நடிக்கக் கூடாது என்கின்ற தன்னுடைய பதிலை நாடகம் நடிக்க இருக்கின்ற தேதிக்கு இரண்டு நாட்கள் முன்பாவது அனுப்பி வைக்கவேண்டுமென்ற எந்த விதியும் கிடையாது. நாடகம் நடிக்கப் போகின்றவர்கள், தடுத்து விடுவார்களோ, தடுத்துவிடுவார்களோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு கடைசி வரையிலும் உட்கார்ந்துகொண்டு தான் இருக்க வேண்டும். சர்க்கார் எவ்விதமான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பொது ஜனங்களுக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் வந்தாலும், எவ்வளவு விதமான கஷ்டங்கள் வந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால் அரசாங்கத்திற்குக் கஷ்டம் வரக்கூடாது, அரசாங்க அதிகாரிகள் எவ்வளவு தவறாக நடந்து கொண்டாலும் கூட அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் கொடுக்கக்கூடாது என்கின்ற மனப்பான்மை மிகவும் கெடுதியாகும். இந்த சட்டத்தின் இரண்டாவது ஷரத்திலேயே ஜனங்களின் ஜீவாதார உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டுவிட்டன. மேலும் மேலும் தங்களுக்கும், தங்கள் அதிகாரிகளுக்கும் எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் எல்லாப் பொறுப்பையும் மக்கள் தலையிலேயே கட்டமுற்படாதீர்கள். ஏற்கனவே இருக்கக்கூடிய அதிகாரங்கள் போதும், புதிய அதிகாரம் எதுவும் தேவையில்லையென்றும் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நான் சர்க்காரிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது இது தான். சட்டத்திலேயுள்ள முக்கியமான ஷரத்துக்களை எல்லாம் பாஸ் செய்து விட்டோம். சர்க்காருக்கும் நிறைய அதிகாரங்கள் இது வரையில் கொடுத்து விட்டோம். எந்த ஒரு விதி இருக்குமானாலும் அதைக் கொண்டு எவ்வளவு விதமான வகையில் மோசம் செய்யப்பட்டு வருகின்றது என்று நான் சொல்ல வேண்டாம். அதுவும் தேர்தல் காலத்தில், பாலட் பெட்டி மூலமாக வோட்டுப் பெறுவதற்குள் நடத்தப்படுகின்ற அக்கிரமங்கள் எத்தனை என்றும் சொல்ல வேண்டும். மந்திரிமார்கள் எல்லாம் தங்கள் செல்வாக்கை ஜில்லாக் கலெக்டர்களின் பேரில் எந்தந்த வகையில் எல்லாம்

பிரயோகித்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அரசாங்க இயந்திரம் பூராவும் எந்தப்பக்கம் சாயும் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இப்பொழுதே இந்தந்தக் கட்சியாரிடம் இப்படி இப்படி நடந்து கொள்ளவேண்டுமென இரகசியச் சுற்றறிக்கைப் போய்க் கொண்டேயிருக்கிறது. போலீஸ் புல்லட்டின் வேறு போய்க் கொண்டிருக்கிறது. இந்தந்த மாதிரியாக நடந்து கொள்ளவேண்டுமென்று அவர்களுக்கு ஒரு லயன் காட்டிவிடப்படுகிறது. இதைப்பற்றியெல்லாம் பேசப்போனால் உரிமைப் பிரச்னை கிளம்பினாலும் கிளம்பும். ஆனால் சர்க்கார் புல்லட்டின், மற்ற இதர ரகசிய சுற்றறிக்கை ஆகியவற்றின் மூலமாக உத்திரவு அனுப்பிக் கொண்டேயிருப்பது போதுமானது. மேலும் மேலும் பல அதிகாரங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது. ஒரு நாடகம் நிச்சயமாக நடத்தப்படவேண்டுமென்றால் அதனுடைய கதையை ஜில்லாக் கலெக்டருக்கு 7 நாட்களுக்கு முன்பே அனுப்பி வைக்க வேண்டுமென்ற உத்தரவுப்படியே அனுப்பி வைப்பதாகக் கொள்வோம். அதை மூன்று நான்கு நாளைக்குள்ளேயே பரிசீலனை செய்வதாயிருந்தால் நிச்சயம் பரிசீலனை செய்துவிடலாம். உடனே ஒரு நாள் முன்பாவது இந்த நாடகம் நடத்தலாம், அல்லது நடத்தக் கூடாது என்று சொல்லி விட்டால் போதும், அதனால் பெருத்த நஷ்டம் எதுவும் வந்து விடாது. ஆனால் கடைசி வரையில் எந்தவிதமான பதிலையும் சொல்லாமல் கடைசி நிமிஷத்தில் வந்து நடத்தக் கூடாது என்ற உத்திரவைக் கொடுத்தால் அதனால் ஏராளமான பண நஷ்டம் ஏற்படுவதோடுகூட கலவரம்கூட எழக்கூடிய ஆத்திரம் உண்டாகும். அதனால் நாடகம் நடத்தக் கூடாது என்ற உத்திரவை சர்வ் செய்யப் போகின்ற சர்க்கார் அதிகாரியின் நிலைமையும் என்ன ஆகுமென்பதைச் சிந்திக்க வேண்டும். அதையெல்லாம் உத்தேசித்துத்தான் மேலும் மேலும் பல அதிகாரங்கள் வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகவே இந்த ஷரத்தையே சர்க்கார் ரத்து செய்துவிடவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—"In the original clause the script of the drama should be submitted within fifteen days. After some discussion in the Select Committee, it was agreed to reduce the period to seven days. As regards the other point that the order should be passed within three days, certainly it cannot be limited by a provision in the clause. But we shall certainly provide in the rules how it should be disposed of. I may assure hon. Members that we shall make sufficient provision in the rules so that no inconvenience will be caused to the parties concerned."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்பெஷல் நாடகங்களுக்காவது ஏழு நாட்கள் முன்பே கதை அனுப்பவேண்டுமென்ற விதி இருக்கக் கூடாது என்பதுதான் என் திருத்தம்."

MR. SPEAKER :—"ஸ்பெஷல் நாடகம் என்றால் என்ன ?"

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—"ஒரு நாடகம் நடிப்பதாக இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். கடைசி நேரத்தில் அந்த நாடகம் நடக்கக்கூடாது என்று தடை செய்துவிட்டால், உடனே கூட்டப்பட்ட கூட்டம், வாங்கப்பட்ட பணம் இவற்றையெல்லாம் என்ன செய்வது என்று ஜனங்கள் ஆத்திரம் அடையும் நிலைமை உண்டாகாதிருக்க, நாடகம் பார்க்க வந்துவிட்ட ஜனங்களைத் திருப்தி செய்ய சட்டென்று வேறு ஏதாவது ஒரு நாடகம் நடிக்கப்பட்டால் அதை ஸ்பெஷல் நாடகம் என்று சொல்வது. ஆகவே தான் ஸ்பெஷல் நாடகங்களுக்கு கதையின் ஒரு சுருக்கம் கொடுத்துவிட்டாலே போதும் என்று சர்க்கார் செய்ய வேண்டுமெனத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை சர்க்காரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" I really cannot understand what the hon. Member means by 'special drama'. This clause provides power to call for a copy of the purport of the drama and not the entire script so that a tentative opinion may be formed. I do not think that his amendment is necessary."

MR. SPEAKER :—" The question is—

'In sub-clause (1), *for* the words " seven days ", *substitute* the words " three days " and *add* at the end the words " and in the case of special dramas, presentation of the summary of the story will be enough." ' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'*Omit* the words " with imprisonment for a term which may extend to three months or " and the words " or with both." ' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'In sub-clause (1), *for* the words " seven days ", *substitute* the words " three days." ' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'In sub-clause (2), *for* the words " one thousand rupees ", *substitute* " five hundred rupees." ' "

The amendment was put and lost.

Clause 9 was put and passed.

Clause 10.

SRI K. P. GOPALAN :—" Sir, I move—

'*In the title of the clause,* omit *the words* " *to High Court.*" ' "

SRI S. RAMALINGAM :—" I second it."

SRI A. RATNAM :—" Sir, I move—

'*In sub-clause* (1), for *the words* " *sixty days* ", substitute *the words* " *ninety days.*" ' "

SRI S. DAIVASIGAMONEY :—" I second it."

SRI K. P. GOPALAN :—" Sir, I move—

'*In sub-clause* (1), after *the words* " *prefer an appeal* ", insert *the words* " *to the District Court or.*" ' "

SRI S. RAMALINGAM :—" I second it."

21st December 1954]

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I move—

'*In item (2), between the words " every " and " appeal " insert " such."* ' "

SRI G. GOVINDAN :—" I second it."

SRI M. KALYANASUNDARAM :—" Sir, I move—

'*After sub-clause (2), insert the following provisos :—*

" *Provided that the Government gives necessary and reasonable financial assistance for enabling the aggrieved party to represent the case before the High Court properly.*

Provided further that in all cases where the orders under either section 3 or 4 are revised the aggrieved party will be eligible to claim adequate compensation for the loss sustained due to the unjust orders of the State Government or that of the District Collector." ' "

SRI S. RAMALINGAM :—" I second it, Sir."

SRI K. P. GOPALAN :—" Sir, I move—

'For *sub-clause* (2), substitute *the following* :—

" (2) *If the appeal goes to the High Court it shall be heard by a Bench of not less than two Judges.*" ' "

SRI M. KALYANASUNDARAM :—" I second it."

SRI S. DAIVASIGAMONEY :—" Sir, I move—

'*After sub-clause* (2), insert *the following sub-clause* :—

"(3) *The High Court shall have power to award compensation to the appellant against the State of Madras in cases where an order under section* 3, *sub-section* (1) *or under section* 4, *sub-section* (1) *or sub-section* (2) *is found unsustainable and set aside.*" ' "

SRI A. RATNAM :—" I second it."

MR. SPEAKER :—" Motion moved—

" In the title of the clause, *omit* the words " to High Court." '

'In sub-clause (1), *for* the words " sixty days ", *substitute* the words " ninety days." '

'In sub-clause (1), *after* the words " prefer an appeal ", *insert* the words " to the District Court or." '

'In item (2), between the words " every " and " appeal ", *insert* " such." '

'After sub-clause (2), *insert* the following provisos :—

" Provided that the Government gives necessary and reasonable financial assistance for enabling the aggrieved party to represent the case before the High Court properly :

Provided further that in all cases where the orders under either section 3 or 4 are revised the aggrieved party will be eligible to claim adequate compensation for the loss sustained due to the unjust orders of the State Government or that of the District Collector.'' '

' *For* sub-clause (2), *substitute* the following :—

'' (2) If the appeal goes to the High Court it shall be heard by a Bench of not less than two judges.'' '

' After sub-clause (2), *insert* the following sub-clause :—

'' (3) The High Court shall have power to award compensation to the appellant against the State of Madras in cases where an order under section 3, sub-section (1) or under section 4, sub-section (1) or sub-section (2) is found unsustainable and set aside.'' ' ''

Now clause 10 and the amendments are before the House for discussion.

* SRI S. DAIVASIGAMONEY :—'' Sir, I wish to submit that this is only a proviso intended to check the abuse of power by the Executive. This amendment is absolutely necessary and essential in an enactment like this Bill. Otherwise the Executive may abuse the very enormous powers that are entrusted to them. I suppose that there may not be any objection to this amendment from the Government side.''

SRI P. RAMAMURTHI :—'' கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை நான் ஆதரிக்கின்றேன். அதேசமயத்தில் ஒரு சிறிய விஷயத்தையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதே சட்டத்தின் 12-வது ஷரத்தில் அதிகாரிகள் இந்தச் சட்டத்தின் கீழ் எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதனால் அவர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்று முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுக்கு எப்படி பாதுகாப்பு அளிக்கப்படுவது அவசியம் என்று சர்க்கார் கருதுகின்றதோ அதைப் போலவே சர்க்காரின் ஒரு உத்தரவினால் அனாவசியமாக மக்கள் பாதிக்கப் படாமல் பாதுகாப்பு அளிக்கவேண்டியதும் அவசியம் என்பதை அவர்கள் உணரவேண்டும். ஜனங்களுடைய உரிமைகளும் காப்பாற்றப்படவேண்டும். அவர்கள் என்ன தப்பு பண்ணினாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் படும் என்பது உறுதியளிக்கப்பட்டுவிட்டதால் அவர்கள் எதை வேண்டு மானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு அதிகாரி ஒரு தப்பைப் பண்ணினால் அவர் அதிகாரத்தில் இருக்க யோக்கியதை இல்லாத வர் என்று சொன்னால் அந்த அதிகாரி பயப்பட்டுக்கொண்டு நடக்க வசதியுண்டு. இல்லாதவரையில் எவ்விதம் வேண்டுமானாலும் அவர் நடந்து கொள்வார்.

'' ஆகவே தான் ஜனங்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் அரசாங்க அதிகாரிகள் நடந்து கொண்டுவிட்டால், அரசாங்கமே தவறு செய்ததின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது ரொம்பவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

'' கடைசியாக இன்று காலையில் கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த நாட்டில் இருக்கக்கூடிய சாதாரண ஏழை நடிகர்களைப்பற்றி அவர்கள் ஏழைத் தொழிலாளர்கள், அவர்கள் கையில் பணம் கிடையாது என்

21st December 1954] [Sri P. Ramamurthi]

றெல்லாம் சொல்லிக் கண்ணீர் வடித்தார்கள். அது உண்மையான கண்ணீர் என்பதைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அரசாங்க உத்திரவால் பாதிக்கப்படுகின்ற ஏழை நடிகர்கள் ஹைக்கோர்ட்டில் கேஸ் ஆட வேண்டுமென்றால் அவர்களுக்குப் பண வசதியே இல்லாமலிருக்கும். அந்த நிலைமையில் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை சர்க்காரே கொடுத்து, அவர்களுக்கு அரசாங்க உத்திரவால் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கான நஷ்ட ஈட்டையும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிற திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது தான் அவர் வடித்த கண்ணீர், முதலைக் கண்ணீர் அல்ல, உண்மையான தயாளக் கண்ணீர் என்பது எல்லோருக்கும் தெரியும்." (சிரிப்பு.).

Sri S. SWAYAMPRAKASAM :—" தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஒப்புக் கொள்ளப் போவதில்லையென்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தபோதிலும் கூட நான் என்ன சொல்ல ஆசைப்படுகிறேன் என்றால் ஒரு தடை உத்திரவைப் போட்டுவிட்டால் அந்தத் தடை உத்திரவை மாற்ற ஹைக்கோர்ட்டுக்குப் போகப்போகிறவர்களும் இல்லை, போனாலும் உதவி வேண்டுமென்று கோரப்போகிறவர்களும் இல்லை. இருந்தபோதிலும் கூட சர்க்கார் நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்றால் தங்களுக்குள்ள அதிகாரத்தை அவர்கள் தங்கள் இஷ்டம்போல் செய்யாமல் இருப்பதற்கு இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்." 5-30 p.m.

* **Sri M. NARAYANA KURUP** :—" Sir, I strongly support the amendment moved by hon. Member Sri S. Daivasigamany. It is only the judiciary that comes to the help of the individual against the inroads of the Executive. The Hon. Finance Minister has always been saying that the Government will use their discretion very wisely and there will be no abuse of power. If that were so, the Government can have no objection whatsoever if the High Court shall have power to award compensation where an order under section (1) or sub-section (2) is found unsustainable and set aside. It will be in the interests of the Government if this amendment is accepted."

Sri A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பணக்காரர்கள் அல்ல; வெறும் ஏழைகள் தான் பாதிக்கப்படுவார்கள். சமுதாயத்திலுள்ள குறைகளை எடுத்துக் காட்டுவதற்குத்தான் இம்மாதிரியான நாடகங்கள் நடத்தப்படுகின்றன. அது மட்டுமல்ல, தோழர் தெய்வசிகாமணி அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தமானது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் அளவில் இருக்கிறது. சட்டத்தில் அப்பீல் செய்வதற்கு இரண்டு மாதத் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் இரண்டு மாதங்கள் என்றிருப்பதை மூன்று மாதங்கள் என்று இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். ஏனென்றால் ஹைக்கோர்ட்டுக்குச் சென்று வழக்காடுவதற்கு பணம் தேவையாக இருக்கும். பணம் சேகரித்து ஆலோசனை செய்து ஒரு முடிவிற்கு வருவதற்கு மூன்று மாத அவகாசம் தேவையாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் மூன்று மாதத் தவணை வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆகவே இரண்டு மாதங்கள் என்றிருப்பதை மூன்று மாதங்கள் என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் திருத்தத்தை நான் பிரேரிக்கிறேன்."

Sri P. S. KRISHNASAMY AYYANGAR :—" Sir, sub-clause (1) relates to appeals against prohibitory orders"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am accepting his amendment."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பற்றியும் இரண்டு வார்த்தைகள் பேசலாம் என்று எழுந்து நிற்கிறேன். ஆனால் இது ஒப்புக்கொள்ளப்படுமோ என்னமோ, எனக்கு நம்பிக்கை இழந்து வருகிறது. இந்தத் திருத்தமும் சரி மற்ற திருத்தங்களும் சரி கனம் நிதி மந்திரி அவர்களுடைய காதில் ஏறியதாகவே தெரியவில்லை. நாங்கள் என்ன சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருப்பதாகவே தெரியவில்லை. ஜனங்களுடைய உரிமையை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். அதைப்பற்றி நாங்கள் பேசினால் கரடியிடம் போய் உபதேசம் செய்வதாக இருக்கிறது. அந்தப் பலன்தான் ஏற்படும்போல் இருக்கிறது. கரடி மேலே விழுந்து பாயுமோ என்ற பயமும் ஏற்படுகிறது. கனம் நிதி மந்திரி அவர்கள் ஆரம்பத்தில் சொல்லியபடி ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும். அதில் நம்பிக்கையுடையவர்கள் ஜனங்களுடைய உரிமையை பாதுகாக்க வேண்டும். இப்பொழுது திடீரென்று ஒருவரை 151-வது செக்ஷன்படி உள்ளே தள்ளி விடலாம். அதற்கு வேண்டிய இடம் சட்டத்தில் இருக்கிறது. என்னைக்கூட வேண்டுமென்றால் உள்ளே தள்ளி விடலாம். அதற்கும் இடம் இருக்கிறது. ஆனால் நான் சட்ட சபையில் இருக்கும்போது அப்படி தள்ள முடியாது. வெளியே சென்றவுடன் தள்ளி விடலாம். நான் இந்த சட்ட சபையின் உள்ளே இருக்கும் வரையில் என்னைக் காப்பாற்றுவதற்கு சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு. நான் வெளியே சென்றுவிட்டால் சர்க்காருக்குப் பொறுப்பு கிடையாது. அந்தக் கொள்கையில் இப்பொழுது சட்டம் நிறைவேற்றப்படுகிறது.

" நாடகம் நடத்துகிறவர் ஆயிரம் ரூபாய் செலவு செய்த பிறகு அது திரையிடப்பட வேண்டும் என்று சொல்லும்போது அதாவது கடைசி நேரத்தில், அதை தடை செய்து விட்டால் அதனால் அவருக்கு ஏராளமான பொருள் சேதம் ஏற்படுகிறது. பிறகு அவர் கோர்ட்டுக்குச் சென்று தன்னுடைய கேஸை நடத்தி நியாயம் கிடைப்பதற்கு இன்னும் அதிகப்படியான செலவுகள் ஏற்படும். அதனால் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய உரிமை அவனுக்கு இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய பண உதவி சர்க்கார் கொடுக்க வேண்டும். மற்றும் கோர்ட்டுக்குச் சென்று நாடகக்காரருக்கு அனுகூலமாக தீர்ப்புக் கிடைத்தாலும் சரி அல்லது அதிகாரிகளுடைய தடை உத்தரவு நியாயமற்றது என்று தீர்ப்புக் கொடுத்தாலும் சரி அந்த நாடகக்காரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி இருந்தால் தான் அதிகாரிகள் அனாவசியமாக நாடகங்களை தடை செய்ய மாட்டார்கள். ஏனென்றால் அப்படி தடை செய்தால் நஷ்ட ஈடு கொடுக்கும்படியான நிலை ஏற்பட்டு விடுமோ என்ற பயம் அவர்களுக்கு ஏற்படும். அதனால் அவர்கள் அனாவசியமாக நாடகங்களை தடை செய்ய மாட்டார்கள். பயத்துடன் நடவடிக்கைகள் எடுப்பார்கள். இதுவும் ஒரு நியாயமான திருத்தம். வேண்டுமென்றால் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஒரு வரையரை செய்து கொள்ளலாம். அப்படி ஒரு வரம்பாவது வைத்துக்கொண்டு இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஜனங்களிடத்தில் உண்மையான அனுதாபம் இருக்கிறது என்றால் இந்தத் திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The hon. Leader of the Opposition said something about ' crocodile tears '. I do not know anything about that. I have never shed that sort of tears and, perhaps, the hon. Leader of the Opposition knows very well about it."

21st December 1954]

SRI S. SWAYAMPRAKASAM :—" May I know whether anybody has any idea about ' crocodile tears ' ? " (Laughter.)

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" The first thing mentioned was about giving financial assistance. Financial assistance may be necessary not only in respect of litigants under this Bill but also all poor litigants. We cannot make a distinction in the matter of provision of financial assistance for certain type of litigation alone. If hon. Members are interested in supporting poor dramatists let them start a fund. I will also contribute so that whenever poor dramatists have to go to the High Court this fund may be used to help them in their litigation. I will contribute liberally within my might if such a fund is started. To say that Government alone should provide financial assistance for this type of people is going too far. I do not think, I can accept it."

SRI M. KALYANASUNDARAM :—" It arises out of the action of the Government."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Everything happens out of the action of the Government. Simply because a wrong judgment is made, it cannot certainly be made a basis for compensation. But if there is specific instance of abuse or *mala fide* use of the powers, anybody can go to a court of law and ask for compensation because there is a cause of action. Even with regard to the protection given in the next clause (clause 12) to officers for anything done in good faith, it is only personal protection given to those authorities and not to the Government as a whole. Therefore, if there is a cause of action and if there is sufficient justification, it is always open to anybody to ask for compensation before a court of law.

" I am accepting the verbal amendment moved by the hon. Member Sri P. S. Krishnaswami Ayyangar which is as follows :—

' In item (2) between the words " every " and " appeal ", *insert* " such." ' "

MR. SPEAKER :—" The question is—

' In the title of the clause, *omit* the words " to High Court ".' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

'In sub-clause (1), *for* the words " sixty days ", *substitute* the words " ninety days." ' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

' In sub-clause (1) after the words " prefer an appeal ", *insert* the words " to the District Court or ".' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

' After sub-clause (2), *insert* the following provisions :—

" Provided that the Government gives necessary and reasonable financial assistance for enabling the aggrieved party to represent the case before the High Court properly :

Provided further that in all cases where the orders under either section 3 or 4 are revised the aggrieved party will be eligible to claim adequate compensation for the loss sustained due to the unjust orders of the State Government or that of the District Collector." ' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

' *For* sub-clause (2), *substitute* the following :—

" (2) if the appeal goes to the High Court, it shall be heard by a Bench of not less than two judges." ' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

' After sub-clause (2), *insert* the following sub-clause :—

" (3) The High Court shall have power to award compensation to the appellant against the State of Madras in cases where an order under section 3, sub-section (1) or under section 4, sub-section (1) or sub-section (2) is found unsustainable and set aside." ' "

The amendment was lost.

MR. SPEAKER :—" The question is—

' In item (2), between the words " every " and " appeal ", *insert* " such." ' "

The amendment was carried.

Clause 10 as amended was put and carried.

Clause 11.

SRI P. S. KRISHNASWAMI AYYANGAR :—" Sir, I am not moving the amendment I have given notice of."

Clause 11 was put and carried.

Clauses 12, 13 and 14 were put and carried.

Clause 7.

MR. SPEAKER :—" We will now take up clause 7 which was left over then."

21st December 1954]

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I move the following amendment, namely :— 5-40 p.m.

' Add *between the words " organizes or is responsible for the conduct of, or " and the words " takes part in " occurring in sub-clause* (1), *the words " who with the knowledge that such order under section* 3 *or section* 4 *is in force." ' "*

MR. SPEAKER :—" The question is—

' *Add* between the words " organizes or is responsible for the conduct of, or " and the words " takes part in " occurring in sub-clause (1), the words " who with the knowledge that such order under Section 3 or section 4 is in force." ' "

The motion was carried.

SRI M. NARAYANA KURUP :—" I withdraw my amendment, Sir."

With the permission of the House, the amendment was withdrawn.

MR. SPEAKER :—" The question is—

' In sub-clause (1), *omit* the words " or takes part in " occurring in line 5.' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

' In sub-clause (1), *for* the words " three months ", occurring in line 8, *substitute* the words " one month ".' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

' In sub-clause (1), *for* the words " one thousand rupees ", occurring in line 9, *substitute* the words " two hundred rupees." ' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

' In sub-clause (1), in line 7, *for* the words " be punished with . . . or with both ", *substitute* the words " be punished with fine which may extend to one hundred rupees." ' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

' *Omit* the words " with imprisonment for a term which may extend to three months or " and the words " or with both." ' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

' *Omit* sub-clause (2).' "

The motion was lost.

MR. SPEAKER :—" The question is—

'*For* the words " one thousand rupees ", *substitute* the words " five hundred rupees." ' "

. The motion was lost.

Clause 7 as amended was put and carried.

Clause 1.

MR. SPEAKER :—" The question is—

' That clause 1 stands part of the Bill.' "

SRI M. KALYANASUNDARAM :—" I move the amendment standing in my name, namely :—

'*In sub-clause* (2), add *at the end the words* " *and shall be in force for one year from the commencement of this Act.*" ' "

SRI P. RAMAMURTHI :—" I second the amendment."

SRI P. S. KRISHNASWAMI AYYANGAR :—" I am not moving my amendment, Sir."

MR. SPEAKER :—" Sri N. Rajagopalan is not in his place. The amendment is deemed to have been not moved."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு நாட்களாகப் பல மணி நேரங்கள் விவாதித்து இந்த மசோதாவை இன்றைய தினம் கடைசிக் கட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். சர்க்கார் கட்சியினரும் பிடிவாதமாக தங்கள் அரசியல் நோக்கத்திற்கு அரணாக இருக்க எப்படியும் இந்த மசோதாவை நிறைவேற்றியே தீரவேண்டுமென்று கட்டுப்பாடோடு உட்கார்ந்திருக்கிறார்கள். கொஞ்சம் கூட இருதயம் இருக்கிறதென்று யாரும் சிந்தித்துக் கொள்ள முடியாத நிலைமையில் உட்கார்ந்திருக்கிறார்கள். இந்த மசோதாவின் மூலம் பல அதிகாரங்களை தங்கள் மெஜாரிடி பலத்தை வைத்துக்கொண்டு எடுத்துக் கொண்டு விட்டார்கள். தங்களுக்குள்ள உரிமைகளை அவர்கள் கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்கத் தயாராகவும் இல்லை. விட்டுக் கொடுக்கா விட்டாலும் மக்களின் உரிமைகளை எல்லாம் ஒரேயடியாகப் பறிக்காமலாவது இருக்கவேண்டுமென்பது தான் எங்கள் நோக்கம். ஆகவே தான் நான் 'இந்தச் சட்டம் ஆரம்பமானதிலிருந்து ஒரு வருஷத்திற்கு அமுலில் இருக்கும்' என முதல் ஷரத்தில் இரண்டாவது செக்ஷனுக்குப் பின் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு இருக்கும் சூழ் நிலைமையில் இந்தச் சர்க்கார் இந்த மாதிரி யான சட்டம் வரவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று வைத்துக்கொண்டால் இன்றைய தினம் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு விட்டது. ஆனால் இதே சூழ் நிலை அடுத்த வருஷமும் இருக்கும் என்று நினைப்பது தவறு. மேலும் இந்தச் சட்டத்தின் ஆயுள் காலம் ஒரே வருஷம் என்று குறிப்பிட்டுவிட்டால் அடுத்த ஆண்டும் இந்தச் சட்டத்தை நீடிக்க வேண்டுமானால் சர்க்கார் சபையின் அனுமதி கோரி வரவேண்டியிருக்கும். அப்பொழுது இந்தச் சட்டம் சரியான முறையில் நடக்கின்றதா, இல்லையா, இந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் என்னென்ன என்பதைப்பற்றியெல்லாம் சபையினர் விவாதிக்கச் சந்தர்ப்பமும் கிடைக்கும். இதற்கு உதாரணம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மத்திய பார்லிமெண்டில் தடுப்புக் காவல் சட்டத்தை ஒரொரு வருஷமாகத்தான் நீடிக்கிறார்கள்.

21st December 1954] [Sri M. Kalyanasundaram]

அதைப்போன்ற கருத்தைக் கொண்டதே இந்தச் சட்டத்தின் நோக்கமும். அதைப் போலவே வருஷத்திற்கு ஒரு முறை என்று வராவிட்டாலும் கூட இரண்டு வருஷத்திற்கு ஒரு முறையாவது சபையின் அனுமதியை மேலும் கோரி வரும்படி செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்று வைத்துக்கொண்டால் கூட எனக்கு ஆட்சேபணை இல்லை ; அப்படிச் செய்து விட்டால் யாரும் இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு துஷ்பிரயோகம் செய்ய முடியாது. ஆகவே தான் இந்தச் சட்டத்தை முதலில் ஒரு வருஷம் வரை நீடித்துக் கொண்டால் போதுமானது, பின்னர் அவசியம் இருந்தால் மறுபடியும் சபையின் அனுமதி கோரி வரலாம் என்று சொல்லி என் திருத்தத்தைப் பிரேரிக்கிறேன்.''

SRI P. RAMAMURTHI :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்தில் இருப்பது இந்த மசோதாவின் ப்ரீயாம்பிள். இந்த மசோதா எவ்வளவு நாளைக்கு நீடிக்கப்படவேண்டுமென்பதே பிரச்னை. இதை நிர்ணயிப்பதற்கு முன் ஒரு நாடகம் தடை செய்யப்பட வேண்டுமா, வேண்டாமா, நாடகத்தில் எப்படிப்பட்ட விஷயங்கள் இருந்தால் அது தடை செய்யப்படும் என்றெல்லாம் தீர்மானிக்கக் கூடிய மிகப் பெரிய அதிகாரங்களை எல்லாம் சர்க்கார் பிரத்யேக முறையில், தாற்காலிகமாகக் கூட இந்த மசோதாவின் பேரில் எடுத்துக் கொள்வதை நாங்கள் விரும்பவேயில்லை. நிர்ப்பந்தமாகவாவது இந்தச் சட்டம் இருக்க வேண்டுமா என்பதே பிரச்னை. எதையும் தடுக்கும்படியான சட்டங்கள் சாதாரணமாக இந்த நாட்டிலே நிர்ப்பந்தமாக இருப்பது கிடையாது. அதுவும் குறிப்பாக இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையே என்றைக்கும் இருக்குமென்று சொல்ல முடியாது. ஆகவே தான் இன்றைய சூழ்நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் இந்தச் சட்டம் ஒரு வருஷத்திற்கு அமுலில் இருக்கட்டும். அதற்குப் பிறகு இந்தச் சட்டத்திற்கு அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதை அடுத்த வருஷம் இருக்கக் கூடிய சூழ்நிலையைக் கொண்டு பார்த்துக் கொள்ளலாம். ஆகவே தான் ஸ்ரீ கல்யாணசுந்தரம் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.''

* THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, I really admire the tenacity with which the hon. Leader of the Opposition and the Deputy Leader of the Opposition are conducting the fight against this Bill.''

MR. SPEAKER :—'' It is quite parliamentary. Everywhere it is the case.''

* THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Yes, Sir, and I admire their fight against this Drama Bill and the final drama also to be enacted by them. Sir, if this Bill is good enough for one year, I do not see why it cannot be good afterwards. (Interruption.) In this question of passing Bills, etc., this House can always pull up the Government by putting questions and if they (the Opposition) are not satisfied, they can even bring in a no-confidence motion against the Government. Therefore, Sir, I do not think it is necessary to limit the period. The other enactment was passed in 1876 and nobody has objected to its being in the Statute Book. This Bill is more restricted in its scope. I do not think I can agree to this time-limit of one year.''

SRI P. RAMAMURTHI :—'' கனம் சபா நாயகர் அவர்களே, மந்திரியார் சொல்வது கொஞ்சம் கூட பொறுத்தமில்லை. சர்க்கார் எதை துஷ்பிரயோகம் செய்தாலும் அவர்கள் பேரில் நம்பிக்கையில்லாப்

பிரேரணையை கொண்டு வரலாம், அதற்காகச் சட்டம் கொண்டுவரத் தேவையில்லை, என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் எதிர்ப்பதெல்லாம் இந்தச் சட்டத்தினால் மக்களுக்குத் தீமையைத் தவிர நன்மையே வரப்போவதில்லை என்பதினால் தான். மக்களின் உரிமைகளைக் காப்பதற்கு நாங்கள் கொடுத்த எந்தத் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ளாது அவர்கள் செய்கின்ற பாதகத்திற்கு நாங்கள் உடந்தையாக இருக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறார்கள். ஆகவேதான் இதை நிறைவேற்றுவதில் எந்தவிதமான பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. உங்கள் சட்டத்தை நீங்களே நிறைவேற்றிக் கொள்ளுங்கள், அதனால் நாட்டில் ஏற்படக் கூடிய விபரீதங்களுக்கு எல்லாம் நீங்களே பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுங்கள், இந்த மசோதாவை நீங்கள் நிறைவேற்றப் போகும்போது நாங்கள் இங்கே இருக்கப் போவதில்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.”

Sri S. SWAYAMPRAKASAM :—“ கனம் தலைவர் அவர்களே, இது வரையிலும் நாங்கள் ஏதோ பலவிதமான திருத்தங்களை கொடுத்தோம். ஆரம்பத்திலிருந்து எங்களுடைய ஆட்சேபணைகளை தெரிவித்தோம். முதலில் நாங்கள் நினைத்தோம், அவர்கள் எங்களுடன் ஒத்துழைக்க ஈடுபடுவார்கள் என்று. ஆனால் அன்றைய தினத்திலிருந்து இன்றைய தினம் வரையில் இந்த மசோதாவைச் சட்டமாக்கி விட்டுத்தான் ஊருக்குப் போக வேண்டும் என்று பிடிவாதமாக எந்தத் திருத்தத்தையும் ஒப்புக்கொள்ளாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். ”

5-50 p.m. * THE HON. SRI C. SUBRAMANIAM :—“ Are we considering **the clause or is the hon. Member making any statement ? ”**

MR. SPEAKER :—“ The hon. Member is making a statement.”

Sri S. SWAYAMPRAKASAM :—“ இவ்வளவு பிடிவாதமாக அவர்கள் இருப்பதன் காரணம் புரியவில்லை. இருந்த போதிலும் நாங்கள் நிதானமாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தோம். காலையில் முக்கியமாக நாங்கள் இரண்டு திருத்தங்களைக் கொடுத்தோம். என் சம்பந்தப்பட்டவரையில் நான் பல திருத்தங்களை கொடுத்தேன். அவைகளுக்குப் பலவிதமான உதாரணங்களைக் கொடுத்து அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டால் அதனால் பல சிக்கல்கள் ஏற்படும் என்றும் கூறினார்கள். கலெக்டரிடத்திலும் போலீசிடத்திலும் அதிகாரத்தைக் கொடுக்கக்கூடாது என்று சொன்னோம். அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குத் தக்க பதில் இது வரையிலும் கொடுக்கவில்லை. **Malicious** என்ற வார்த்தையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் அவசியத்தை நாங்கள் எடுத்துக் காட்டியும் கூட அதை எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள். பொறுக்குக் கமிட்டியில் ஆட்சேபித்ததையும் எடுத்துக்காட்டி அதற்குத் தக்கபடி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லியும் கனம் நிதி மந்திரி அவர்கள் எங்களுடைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இந்த மசோதா சமூகத்தைச் சீர்திருத்தும் நாடகத்தை பாதிக்காது என்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லுகிறார். எப்படி என்று அதற்கு விளக்கம் கொடுக்கவில்லை. மூன்றாவது விளக்கத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னோம். அதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் ? எங்களுக்குக் கையில் அதிகாரம் இருக்கிறது, ஆள் கூட்டம் **(majority)** 'இருக்கிறது, அதை வைத்துக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் சர்க்கார் இருக்கிறார்கள். ஜனநாயக முறையில் நடக்கவேண்டும் என்றால் எதிரிகளின் லட்சியத்தையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும். எதிரிகளுக்கு நம்பிக்கை உண்டாகும் முறையில் இருக்கவேண்டும். எதிரிகளுக்குப் பலம் இல்லை என்பதை வைத்துக்கொண்டு இதை நிறைவேற்று

21st December 1954] [Sri S. Swayamprakasam]

வதில் அர்த்தம் இல்லை. பலம் இல்லாத எதிரியாகிய ராவணனைக்கூட ராமன் என்ன சொன்னான் என்றால் 'இன்று போய் நாளை வா என்றியம்பினான்' (சிரிப்பு.) எங்களுக்கு கை தூக்க பலம் இருக்கிறது. அதனால் எங்களுடைய தீர்மானத்தை ஒத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. அது அவர்களுக்குப் பொறுத்தமாக இருக்கலாம். ஆனால் அது எங்களுக்குப் பொறுத்தமாக இல்லை. எங்களுக்கு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டதற்கு பதில் இல்லை. அதனால்தான் இந்தச் சட்டத்தை எங்களால் ஒப்புக்கொள்ள முடியாது என்று நினைக்கிறோம். இந்த மசோதா சட்டமாகுவதனால் ஏற்படும் பயனைவிட தீங்குதான் அதிகமாக விளையும். ஆகவே இந்தச் சட்டம் பல பல தீங்குகளை விளைவிக்கும் என்ற காரணத்தினால் இது சட்டமாகும் காலத்தில் நாங்கள் இதற்கு பொருப்பாக இருக்கமாட்டோம். அதனால் இந்த மசோதா சட்டமாகுவதற்கு முன்பாக அதை எதிர்க்கும் முறையில் நாங்கள் வெளியே போகிறோம்."

(Sri P. Ramamurthi, Sri S. Swayamprakasam and a few other Members of the Opposition walked out of the House.)

MR. SPEAKER :—" Sri M. Kalyanasundaram is not in his place. His amendment is deemed to have been withdrawn."

Clause 1 was put and carried.

The preamble was put and carried.

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I move—

'*that the Bill be passed into law*.'

" I just want to make an announcement on behalf of the Government. It is the intention of the Government to associate the dramatists, artists, playwrights and other persons interested in dramatic act so that their views may be available to the Government before they take a final decision under clause 3 of this Bill as to whether a performance is objectionable or not. I am sure it will be possible to make this arrangement not necessarily by making a provision in this Bill but by executive action."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, this Bill is going to become law without any material changes. The Government are placing on the Statute Book a very dangerous law which is likely to be abused. We know how sections 144 and 151 of the Criminal Procedure Code are invoked by the Government in the course of the day-to-day administration. But that does not attract very much attention. I believe action under this Act will have to be taken by the officers concerned in the course of the day-to-day administration. The powers under sections 144 and 151 of the Criminal Procedure Code could be invoked only in the case of breach of the peace. But the powers conferred by this Statute are very much wider. Here power is given to prohibit a performance if it offends the religious belief of any class of people. As has been mentioned on the floor of this House, religious belief is very elusive in its nature. It is very difficult to say what a religious belief is, and the officers will have to perform what I may call *asidhara-vratham*. It is not without justification that we complain that the Government had almost a closed mind when the Opposition

Members placed before them their viewpoints. Whenever an accusation or a charge is made against the Government, I am afraid to note them say—this is not the first time, as this has been said many a time before—that the Opposition may bring forward a no-confidence motion. I submit with all respect that, that is not the way of working democracy, democracy of the type that is prevailing in England which we have accepted as our ideal. There the Opposition form a part of the Government and the Government take the Opposition into confidence on major matters. The strength of the Opposition may be 100 to-day and 10 to-morrow. That is not the point. If I may say so, it is a weaker Opposition that deserves greater consideration at the hands of the Government. A feeling has been gaining ground that in the democracy as it is worked in India to-day with the rigid party system, after one party has got a comfortable majority and is installed in office, the other Members need not even attend the Assembly at all unless it be for sponsoring a no-confidence motion. That has been the feeling of some of us sitting on the Opposition side. We cannot simply brush aside the views of the Opposition saying that we are in a majority and that the Opposition has got the weapon of no-confidence motion. We are just experimenting with democracy. If we want the people to have faith in democracy, it must be carefully nurtured and not throttled.

'' Having said all this, I accept the assurance given by the Government and I hope that this delicate and difficult measure will be invoked sparingly and that the utmost care will be taken to see that it is not abused.''

* **Sri R. V. SWAMINATHAN** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ட்ராமா சம்பந்தமான மசோதா இப்பொழுது சட்டமாகப் போகிறது. அது சம்பந்தமான விவகாரங்களையும் மக்கள் மனதில் இருக்கும் சந்தேகங்களையும் கனம் நிதி மந்திரி அவர்கள் விளக்கி அதற்கு ஆதாரங்களே இல்லையென்று சொல்லிவிட்டார். அது அப்படி இருந்தபோதிலும் அந்த விளக்கங்களை எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எடுத்துக்கொள்ளாமல் தங்களுடைய குறையைத் தெரிவிப்பதற்காக வெளியே சென்றிருக்கிறார்கள். அதைக் கண்டு நான் வருத்தமடைகிறேன். இந்த நாடக மசோதாவை அரசாங்கம் ஜாக்கிரதையாக அமுல் நடத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதனால் எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதால்தான் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஆதரவு கொடுத்திருக்கிறோம். இந்தச் சட்டத்திற்கு அரசாங்கத்தின் தரப்பிலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் ஆதரவு காட்டுகிறோம். எங்கள் உதவியைக் கொண்டே சர்க்கார் இதனைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் காரணமாக தமிழ் நாட்டிலுள்ள ஒரு சில பகுதியினரிடையே ஏற்பட்டிருக்கும் கோபத்தையும், ஒரு சில கட்சியின் மத்தியில் எழுந்திருக்கும் கோபத்தையும் நாங்கள் அறியாமலில்லை. அரசாங்கத்திலுள்ள மந்திரிகளும் அறியாமலில்லை. ஆனால் இந்தச் சட்டத்தைக் கண்டு அந்தக் கட்சிகள் கொஞ்சம்கூடப் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. இந்தச் சட்டத்தைக் கருவியாகக் கொண்டு சர்க்கார் எல்லா நாடகங்களையுமே தடை செய்துவிடும் என்று அஞ்ச வேண்டியதும் இல்லை. சர்க்கார் இது விஷயத்தில் ஆரம்ப முதலே உறுதி அளித்துக்கொண்டு வருகிறார்கள். அரசாங்க அதிகாரிகளும் நேர்மையான முறையிலேயே இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும்படியாக அவர்கள் நிச்சயம், மிக ஜாக்கிரதையாகக் கண்காணித்து வருவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

21st December 1954] [Sri R. V. Swaminathan]

அரசாங்க அதிகாரிகள் ஆங்காங்கு தனிப்பட்ட முறையில் எவ்வித தப்பும் இந்த மசோதாவை அடிப்படையாகக் கொண்டு செய்யாமல் இருக்க நமது நிதி மந்திரி அவர்களும் தக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகாரிகள் இதைத் துஷ்பிரயோகம் செய்ய இடம் கொடுக்கக்கூடாது.

“இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை மாத்திரம் சுட்டிக்காட்டி நான் முடித்துக்கொள்ளுகிறேன். சமீபத்தில் நமது இந்தியப் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு இடத்தில் பேசும்போது தென்னாட்டில் ஒரு வகையான துவேஷப் பிரசாரம் நடந்துகொண்டே வருவதற்குக் காரணம் என்ன என்பதை வெகு அழகாக விளக்கினார். அப்படிப்பட்ட போக்கை வளரவிடுவதனால் என்ன ஆபத்து வரும் என்றும் சுட்டிக்காட்டினார். அந்தப் பிரசங்கம் மெயில் பத்திரிகையில்தான் நன்றாக வந்தது என்று நினைக்கிறேன். வேறு பத்திரிகைகளில் வரவேயில்லை. அதை எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் படித்துப் பார்க்கவேண்டும். ஸ்ரீ நேரு சாதாரணப்பட்டவர் அல்ல. இந்தியாவிலே ஒரே ஒரு ராஜ்யத்தைத் தவிர பாக்கியிருக்கும் ராஜ்யங்களிலெல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் தான் நடந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஸ்ரீ நேரு. உலகத்திலேயே நம் இந்திய நாட்டுப் பிரதமர் ஸ்ரீ நேரு மாபெரும் தலைவராக விளங்குகிறார். அவரே இது விஷயத்தில் மிகத் தெளிவாக இப்படிப்பட்ட மனப்பான்மையை வளரவிடுவது தேசத்திற்கே ஆபத்து என்று குறிப்பிட்டு இருக்கிறார். இந்தச் சட்டம் அவருடைய யோசனைக்கு ஒத்ததாகவே இருக்கின்றது. 6 p.m.

“ஆகவே சர்க்காருக்கு இதைக் கொண்டுவந்துவிட்டோமே என்ற தயக்கம் கொஞ்சம்கூட வேண்டியதில்லை. அவர்கள் பயப்படாமல் இந்தச் சட்டத்தை நிறைவேற்றலாம். இந்தச் சட்டம் நல்ல முறையில் அமுலாக்கப் படுவதற்கு நாங்கள் எங்களாலான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறோம். அதே சமயத்தில் இந்த சட்டத்தை அரசாங்க அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு நிர்வாகத்தை நடத்தும் மந்திரிகளுடையது ஆகும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கனம் மந்திரி அவர்களும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கின்றேன்.”

* THE HON. SRI C. SUBRAMANIAM :—“ Mr. Speaker, I want to say only one thing. The hon. Member Sri Narayana Kurup was a little bit unfair to the Government and to the Party in power. As a matter of fact, we have always given the greatest consideration to the opposite point of view. Simply because I have yielded to everything in the Select Committee, I have nothing to yield to here. I think hereafter as a matter of strategy I should reserve something for concession in the Assembly also. But I thought I should take the Members of the Select Committee into my confidence and I yielded to the maximum extent possible. That does not mean that I have not taken into account the viewpoints of the Opposition. It was because of the viewpoints expressed by the Opposition that we agreed to many of the changes proposed in the Select Committee. Therefore, I am afraid the hon. Member has been a little bit unfair in his criticism. But I may assure him, whether that criticism is well-based or not, as far as this Bill is concerned and as far as I am concerned, I shall give the best consideration to the points of view expressed by the Opposition. But, if, under certain circumstances, we are unable to accept certain suggestions made by the Opposition, on the merits of the case,

[Sri C. Subramaniam] [21st December 1954

it does not mean that we are not giving any consideration to those suggestions. As far as the working of this Bill is concerned, I have absolutely no doubt that this Government and also the authorities concerned will act in the best interests of the State and the public as a whole. We will try our best, as far as it lies in human power, to see that the power conferred under this Bill is not abused and is not used for the purpose of harassing anybody or used in a way which is likely to affect the growth and development of dramatic art. After all, the development of art is dear to everybody here, not only to the Opposition but to the Government side also. Therefore, I have no doubt that in the working of this legislation, all these misapprehensions and fears will be falsified and if not in this session, during the Budget Session, also there will not be any justifiable complaints to be made against the Government in regard to the administration of this legislation.''

MR. SPEAKER :—'' The question is—

'That the Madras Dramatic Performances Bill, 1954, as amended, be passed into law.' ''

The motion was put and carried and the Bill was passed into law.

MR. SPEAKER :—'' Let us take up the half-hour debate regarding sinking of wells in Coimbatore district.''

III—HALF-HOUR DEBATE *RE* SINKING OF WELLS IN COIMBATORE DISTRICT.

MR. SPEAKER :—'' I shall give five minutes to the hon. Member Sri K. T. Raju, five minutes to the hon. Member Sri Nallasami, five minutes to the hon. Member Nallasivam, five minutes to the hon. Member Sri Manickam and ten minutes to the Hon. Minister.''

6–07 p.m. **SRI K. T. RAJU** :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு கனம் அங்கத்தினர் பீ. ஜி. மாணிக்கம் அவர்கள் கேட்ட கேள்விக்கு கனம் சுகாதார மந்திரி அவர்கள் கோயமுத்தூரில் குடி தண்ணீருக்காக வெட்டப்படவேண்டிய கிணறுகள் 119 என்றும், ஒரு கிணறுதான் வெட்டப்பட்டதென்றும், நான்கு கிணறுகள் ரிப்பேர் செய்யப்பட்டதென்றும் கூறினார். கோயமுத்தூர் மேட்டுப்பாங்கான பிரதேசமாதலால், குடித்தண்ணீருக்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று அந்த ஜில்லா வாசிகளுக்குத்தான் தெரியும். அந்த ஜில்லா கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி மிக மிகக் குறைவு. இந்த ஹரிஜனங்கள் ஜாதி ஹிந்துக்கள் இருக்கும் இடத்தில் தண்ணீர் எடுக்க முடியுமா ? அப்படி இருக்கும்போது அவர்களுக்கு எவ்வாறு தண்ணீர் கிடைக்கும். ஹரிஜனச்சேரியிலே கிணறு இல்லையென்றுச் சொன்னால் அவர்கள் வேறு எங்கிருந்து தண்ணீர் கொண்டுவருவார்கள். இந்த அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு செய்யவேண்டிய மற்ற காரியங்களைச் செய்யாவிட்டாலும், இந்தக் குடிதண்ணீர் வசதியையாகிலும் செய்துத் தரவேண்டாமா ?

''நண்பர் மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள் சேரிவாழ் ஹரிஜனங்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பது மிகவும் அறிதாக இருக்கிறது என்று. ஒரு கிணறு வெட்டவேண்டுமானால் மூன்று அல்லது நான்கு ஆயிரம்

21st December 1954] [Sri K. T. Raju]

ரூபாய் பிடிக்கிறது. அதற்கு அவ்வேழை ஹரிஜன மக்கள் எங்கு செல்வார்கள். அந்த இடத்தில் வெட்டப்பட்ட ஒரு கிணறிலிருந்து எவ்வளவு வீடுகளுக்கு தண்ணீர் எடுத்துக்கொள்ளமுடியும். கனம் மந்திரியார் கூறும் சமாதானம் சரியாக இல்லை. இந்த ஜில்லாவிலுள்ள அங்கத்தினர்கள் இது முக்கியமாக உடனடியாக தீர்க்கப்படவேண்டிய பிரச்னையென்று மனு கொடுத்திருந்தும்கூட, அதைப்பற்றி ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டும் தங்களிடம் பண வசதியில்லையென்று சொல்லுகிறார்கள். கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்காதிருப்பதினாலும், ரெவின்யூ போர்டிலிருந்து தாமதம் ஏற்படுவதனாலும் உடனடியாகச் செய்து கொடுக்கமுடியவில்லையென்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே திட்டமிட்டபடி 119 கிணறுகள் இந்தப் பகுதிகளில் வெட்டியிருக்கவேண்டும். அப்படி இருந்தும்கூட ஒரு கிணறு தான் வெட்டியிருக்கிறார்கள், நான்கு கிணறுகள் ரிப்பேர் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஹரிஜனங்களின் முன்னேற்றம் கருதி அரசாங்கம் அவர்களுக்காக எவ்வளவு கிணறுகள் வெட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோ அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டதோ அவ்வளவையும் செலவழித்து அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.''

*SRI R. V. SWAMINATHAN :—" On a point of order, Sir, சபையில் கோரமில்லை.''

SRI M. KALYANASUNDARAM :—" There is quorum, Sir."

(The quorum bell was rung and Members came in.)

*SRI P. G. MANICKAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16 தேதியில் என்னால் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு கனம் சுகாதார மந்திரி அவர்கள் ஒரு பதில் கொடுத்திருக்கிறார். அதாவது சென்னை பட்ஜெட்டில் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் சம்பந்தமாக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கும் 40 லட்சம் ரூபாயிலே கோயம்பத்தூர் ஜில்லாவிற்கு லோகல் டெவலப்மெண்ட் சம்பந்தமாக ரூ. 2,85,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பதில் சொன்னார். இவ்விதம் பணம் ஒதுக்கியும் அதாவது ரூபாய் இரண்டு லட்சத்தி எண்பத்தி ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டதிலே ஹரிஜனங்களுக்கு ஒரு கிணறு வெட்டியும் நான்கு கிணறுகளை ரிப்பேர் செய்யப்பட்டதாகவும் தன்னுடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறார். உண்மையிலேயே ஹரிஜனங்கள் அங்கு ஏதாவது கோயம்பத்தூர் ஜில்லாவில் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது கனம் மந்திரி அவர்கள் கொடுத்த பதிலிலிருந்தே நன்றாகத் தெரியவரும். அந்த ஜில்லாவில் 119 சேரிகளுக்கு புதுக் கிணறுகள் வெட்டப்படவேண்டும். 316 கிணறுகள் ரிப்பேர் செய்யப்படவேண்டும் என்று என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. போதுமான தொகை ஒதுக்கியிருந்தும் வெட்டப்பட்ட கிணறு ஒன்றுதான். ஜில்லா போர்டு மூலமாக கிணறுகளை மராமத்துச் செய்யப்படுவதற்குப் பணம் செலவு செய்கின்றார்கள். உண்மையில் புதிய கிணறுகள் வெட்டவேண்டுமென்றால் அதற்கு தனிப்பட்டு கவர்ன்மெண்ட் செலவழிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது 119 சேரிகளில் கிணறுகள் கிடையாது.'' 6-10 p.m.

MR. SPEAKER:—" கோரம் இல்லாவிட்டால் அகோரமாகப் போய்விடும். ஆகையால் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.''

*SRI P. G. MANICKAM:—" கவர்ன்மெண்டார் அதிகமாக தொகையை ஒதுக்கி இருக்கிறார்கள். ஹரிஜன டிபார்ட்மெண்ட்டிற்கும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது, வாட்டர் சப்ளை ஸ்கீம் திட்டத்தின் கீழ் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது, கம்யூனிட்டி ப்ராஜெக்ட் மூலமாக அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் பல விதங்களில் அதிகப்படியான தொகை ஒதுக்கியிருந்தும் வேலை சரியானபடி ஏன் நடக்கவில்லை என்பதுதான் தெரியவில்லை. இந்த வருஷம் கூட ஐந்து லட்சம் ரூபாய் லோயர் பவானி

சமுதாய திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இன்னும் ஏன் சரியானபடி கிணற்று வேலைகள் நடக்கவில்லை என்பதுதான் தெரியவில்லை. அதனால் சர்க்கார் உடனடியாக ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும். இப்பொழுது எட்டுக்கு எட்டு அடி என்று கிணறு வெட்டுவதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்காக நாலாயிரம் ஐயாயிரம் ரூபாயில் ஒரு எஸ்டிமேட்டும் தயாரித்திருக்கிறார்கள். கண்ட்ராக்டுக்கும் விடுகிறார்கள், ஆனால், வேலை மட்டும் சரியாக நடைபெறவில்லை. ஹரிஜன் டிபார்ட்மென்டிற்கு சுமார் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியும் இன்னும் வேலை முடியவில்லை. அதற்கு பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாங்கள் இந்த சமயத்தில் என்ன சொல்லுகிறோம் என்றால் ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கமிட்டியை அமைத்து அதுவும் ஒரு தாசில்தாருடைய தலைமையில் அந்தக் கமிட்டியை அமைத்து இந்த வேலையை துரிதமாக நடைபெறச் செய்யவேண்டும். இன்னும் அந்தக் கமிட்டியில் பல முக்கியஸ்தர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே வேலைகளை கண்ட்ராக்டர்களிடம் விடாமல் ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் தலைமையின் கீழ் அந்த வேலையை நடத்தினால் அந்த வேலை சீக்கிரமாகவும் முடியும், லாபகரமாகவும் இருக்கும் என்பதை சொல்லிக்கொண்டு இத்துடன் நான் முடித்துக் கொள்ளுகிறேன்.''

